



சேக்கிழார்


# குருவழிபாடு

சைவதுரந்தரர் வி. கந்தவனம்

உ
சிவ சிவ



திருஞானசம்பந்தர் — பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி
திருநாவுக்கரசர் — ஆழிமிசைக் கன் மிதப்பில் அணைந்த பிரான் அடி போற்றி
சுந்தரமூர்த்தி — வாழி திருநாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
மாணிக்கவாசகர் — ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி




மெய்கண்டதேவர் அருணந்திசிவம் மறைஞானசம்பந்தர் உமாபதிசிவம்

V.K

உ

# குரு வழிபாடு

வி. கந்தவனம்

ஒன்ராறியோ
இந்து சமயப் பேரவை
கனடா

நூல்: குரு வழிபாடு

ஆசிரியர்: வி. கந்தவனம்

முதற்பதிப்பு: செப்டம்பர் 2003

எழுத்தமைப்பு: மா. கனகசபாபதி

அச்சடிப்பு: விவேகா அச்சகம்

வெளியீடு: ஒன்ராறியோ, இந்து சமயப் பேரவை கனடா

பதிவு இல:1201762

Title: GURU WORSHIP

Author: V. Kandavanam

First Edition: September, 2003

Typesetting: M. Kanagasabapathy

Printed and Bound by: Viveka Printers

Published by: Ontario Hindu Religious Society, Canada

Registration No: 1201762

# குரு வழிபாடு

## பொருளடக்கம்

I பதிப்புரை III

II முன்னுரை IV

1. குரு வழிபாடு 1
2. சம்பந்தமூர்த்தியாரின் சமூகப் பணிகள் 10
3. நமனுக்கும் அஞ்சாத நாவுக்கரசர் 16
4. சுந்தரர் சொற்றமிழ் 26
5. மணிவாசகப் பெருமானின் பத்தி வைராக்கியம் 37
6. சாத்திரம் விளக்கிய சந்தான குரவர் 43
7. கச்சியப்பர் கனிந்த கந்தபுராணம் 55
8. சேக்கிழார் பெருமானின் திருத்தொண்டர் புராணம் 64
9. பரஞ்சோதி முனிவரின் தமிழ்ப்பற்றுப் புராணம் 75
10. பட்டினத்தடிகளின் பக்குவப் பாடல்கள் 85
11. அருணகிரிநாதரின் அற்புதத் திருப்புகழ் 96
12. அமாவாசையை முழுமதியாக்கிய அபிராமிப்பட்டர் 105
13. நாவலர் பெருமானின் சமயப் பணிகள் 114
14. சேர் பொன். இராமநாதன் அவர்களின் சைவத் தொண்டுகள் 123

# பதிப்புரை

ஓம் நமசிவாய

இந்து சமயப் பேரவை ஞானசுரபி, ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளால் 1994ஆம் ஆண்டு யூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டது. அக்காலம் தொடக்கம் ஆத்மீக நூல்களை வெளியிடுவதைப் பேரவை தன் தலையாய கடமையாக எடுத்துச் செயற்பட்டு வருகின்றது. இதுவரை வெளியிட்ட நூல்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் மற்றும் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் தமிழ் மக்களின் பெரும் மதிப்பைப் பெற்று வருகின்றன.

குரு வழிபாட்டுக்கு தன்வாழ்நாள் முழுவதும் பெரும் முக்கியத்துவம் கொடுத்தவர் தாபகர் ஆத்மஜோதி முத்தையா அவர்கள். எங்கள் பேரவையின் காப்பாளர் சைவதுரந்தரர் கலாநிதி கந்தவனம் ஐயா அவர்களும் குரு வழிபாட்டைப் போற்றுபவர். அவர்கள் எழுதிய ‘குரு வழிபாடு’ என்ற இந்த நூலை, மக்கள் முன்னிலைக்கு கொண்டு வருவதையிட்டு நாம் பெருமை யடைகின்றோம். குரு வழிபாட்டின் இரண்டாம் பாகமாக ஈழத்துச் சைவப் பெரியார்களைப் பற்றிய வரலாறுகளை வெளிக்கொணரும் நோக்கமும் எமது திட்டத்தில் உள்ளது.

இந்நூலில் சமயகுரவர்கள், சந்தானகுரவர்கள் கந்தபுராணம் இயற்றிய கச்சியப்ப சிவாச்சாரியார், பெரியபுராணம் பாடிய சேக்கிழார் பெருமான், திருவிளையாடற்புராணம் பாடிய பரஞ்சோதி முனிவர், பூரணசித்தர் பட்டினத்தார், திருப்புகழ்பாடிய அருணகிரிநாதர், அபிராமிப்பட்டர், நாவலர் பெருமான், சைவப் பெரியார் சேர் பொன் இராமநாதன் ஆகியோர்களைப் பற்றிய கட்டுரைகள் இடம் பெறுகின்றன. இந்தப் பதினான்கு தலைப் புக்களில் சைவசமயிகள் ஆகிய நாம் சிந்தித்து உள்வாங்கிக் கொள்ளக்கூடிய அரும்பெரும் கருத்துக்கள் பல அடங்கியுள்ளன.

எமது வருங்கால இளைய தலைமுறையினருக்கு மத்தியில் சைவசமயக் கருத்துக்கள் வேரூன்ற வேண்டுமென்ற பெரும் நோக்கம் கொண்ட நூலாசிரியர் சைவதுரந்தரர் கந்தவனம் ஐயா அவர்களின் சேவை அளவிட முடியாது. அவர் தொடர்ந்து சமயப்பணியாற்றுவதற்கு திருவருளும் குருவருளும் முன்னின்று

அவரை வழிநடத்த வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த விவேகா அச்சகத் தினருக்கும், சிறந்த முறையில் வடிவமைப்புச் செய்த மா. கனகசபாபதி அவர்களுக்கும் இந்து சமயப் பேரவையின் சார்பில் எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இந்த நூலை வாங்கி ஆதரவு தரும் சைவத் தமிழ் அன்பர்களுக்கும், விற்பதற்கு உதவிசெய்யும் இந்துசமயப் பேரவைச் சிவனடியார் திருக்கூட்டத்தினருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ந. பரராசசிங்கம்
தலைவர்
ஒன்ராறியோ
இந்து சமயப் பேரவை

சிவ. முத்துலிங்கம்
நூல் வெளியீட்டுப் பொறுப்பாளர்

# முன்னுரை

சைவத் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் மேலைநாடுகளிலும் தமது சமயத்தைக் கைவிடாது, கோயில்கள் அமைத்து இறைவழிபாடு செய்து வருவது, எங்கும் நிறைந்திருக்கும் எல்லாம் வல்ல சிவபெருமானின் திருவருட்சத்தியை நன்கு காட்டுகின்றது.

கோயில்கள் அமைப்பதிலும் திருவிழாக்கள் நடத்துவதிலும் எம்மவர்கள் காட்டும் ஆர்வம் சைவத் தத்துவங்களையும் சைவத்தை வளர்த்த பெரியார்களின் வரலாறுகளையும் அறிந்து கொள்வதில் இருப்பதில்லை. பலருக்கு 'திருமுறை' என்றால் என்ன என்று தெரியாது. கோயில்களிலே தேவாரம் ஓதச் சொன்னால் ஓதத் தெரியாது வீட்டிலே பிள்ளைகள் சைவ சமயத்திலே ஏதாவது கேள்விகள் கேட்டால் மறுமொழி சொல்லத் தெரியாது. அதாவது, சைவ சமயம் என்றால் என்ன என்று தெரியாமலே பெரும்பாலோர் சைவர்களாக இருக்கிறார்கள்.

சொற்பொழிவு செய்தல், பத்திரிகைகளிலே கட்டுரைகள் எழுதுதல், நூல்களை வெளியிடுதல், சிறுவர்களுக்குப் பாடசாலைகள் நடத்துதல், பரீட்சைகள், போட்டிகள் வைத்தல் போன்ற பலதரப்பட்ட முறைகளையும் பின்பற்றி அறிஞர்களும் சைவ அமைப்புக்களை நடத்தும் ஆர்வலர்களும் சமய அறிவை வளர்த்து வருகின்றார்கள்.

அடியேனும் சைவசமய அறிவை வளர்ப்பதில் சொற்பொழிவுக் கலையைத் தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றேன். "சொல்லுக சொல்லிற் பயனுடைய" என்றார் வள்ளுவர் பெருமான். சைவநீதியை விளக்குவதிலும் மேலான பயன் ஒன்று இருக்க முடியுமா?

கோயில்களிலும் சைவ அமைப்புக்களின் சமய விழாக்களிலும் உரைகள் நிகழ்த்துவதோடு வானொலி வாயிலாகவும் அறிவைப் பரப்பும் பணியில் ஈடுபட்டு வருகின்றேன்.

கீதவாணி உலகத்தமிழ் வானொலியில் வெள்ளிக் கிழமைகளில் அடியேன் ஆற்றிய சைவநற் சிந்தனை உரைகளைக்

கேட்ட எனது மாணவர் திருமுறைச் செல்வர் திரு. சிவ. முத்துலிங்கம் பேச்சுக்களைக் கட்டுரைகளாக்கினால் நன்றாக இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்தார். அவர் எனது உரைகளை ஒலிப்பதிவு செய்வதிலும் நூல்களை வெளியிடுவதிலும் ஆர்வம் காட்டுபவர். ஞானசுரபி, ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களைக் குருவாகக் கொண்டு நல்ல சமயப் பணிகளைச் செய்துவரும் திருவாளர். அவர் சொற்படி பேசி முடித்த நற்சிந்தனைகளைக் கட்டுரை களாக்கியதோடு ஏனையவற்றை எழுதிவைத்துக் கொண்டு பேசும் வழக்கத்தையும் மேற்கொண்டேன். விளைவு: பல கட்டுரைகள்.

இவற்றில் பன்னிரண்டு கட்டுரைகளை நண்பர் திரு எஸ். திருச்செல்வம் அவர்கள் 'சிவ வழிபாடு' என்ற திருப்பெயரிலே தொகுத்துத் தமது ஒரே மகன் அகிலனின் பன்னிரண்டாவது ஆண்டு நினைவு தினத்தில் இலவச வெளியீடாக விநியோகித்தார்; விநியோகித்தும் வருகின்றார்.

இப்பொழுது சைவம் வளர்த்த குருமார்களைப் பற்றிய பேச்சுக்களில் பதினான்கினை 'குரு வழிபாடு' என்னும் அருட்பெயரிலே தொகுத்து ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை மூலம் அதன் உப செயலாளர் திருமுறைச் செல்வர் திரு. சிவ முத்துலிங்கம் அவர்கள் வெளியிடுகின்றார். ஆன்மீகத்தில் எம்மை வழிப்படுத்திய மகான்கள் இன்னும் பலர் உளர். அவர்களைப் பற்றிய தொகுதி ஒன்றை வெளியிடும் திட்டமும் இந்து சமயப் பேரவைக்கு உண்டு.

இதனை எழுதத் தூண்டிய திருமுறைச் செல்வருக்கும் வெளியிட்டுள்ள இந்து சமயப் பேரவைக்கும் அருள்பாலிக்க என் உள்ளத்தினுள்ளே உள்ள விநாயகப் பெருமானை வேண்டுகின்றேன்.

குருவழிபாடு குருடர்களுக்கும் பார்வை கொடுக்கும் சத்தி வாய்ந்தது. படித்துப் பயன்பெறுக!

குருவே துணை.

- வி. கந்தவனம்

# 1
# குரு வழிபாடு

பக்குவம் பெற்ற ஆன்மாக்களுக்கு இறைவன் குருவடிவாக எழுந்தருளுவான் என்பது சைவசித்தாந்தக் கொள்கை. சைவசித்தாந்த சாத்திரங்களில் முதன்மை நூலாகப் போற்றப்படுவது மெய்கண்டதேவ நாயனார் அருளிச் செய்த சிவஞானபோதம் ஆகும். இதில்வரும் எட்டாம் நூற்பா இறைவன் ஞானாசிரியனாக எழுந்தருளும் இயல்பை விளக்குகின்றது.

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்
தம்முதற் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அந்நியம் இன்மையின் அரன்கழல் செலுமே.

'ஆன்மா முற்பிறப்புக்களிற் செய்த சிவ வழிபாடாகிய தவத்தின் பயனாக, இதுகாறும் உயிர்க்குரியாய் மறைந்து நின்று அறிவைத் தந்த முதல்வன் இப்பொழுது குருவடிவம் கொண்டு நேரே எழுந்தருளிவந்து, "எமது மைந்தனாகிய நீ ஐம்பொறிகளாகிய வேடரிடத்து அகப்பட்டு அவர் வழியிலே வளர்ந்தமையால் உனது உண்மை இயல்பை மறந்து மயங்கித் துன்புறுகின்றாய்" என்று அறிவிக்க, அதனை அறிந்த ஆன்மா அப்பொழுதே அவ்வைம்புல வேடரை விடுத்து, முதல்வனுக்கும் தனக்கும் உள்ள உறவை உணர்ந்து, அவனது திருவடியை அடைந்துவிடும்' என்பது இந்நூற்பாவின் பொருள்.

மெய்கண்டாரின் வழிவந்த உமாபதி சிவாச்சாரியாரும் தமது திருவருட்பயன் என்னும் நூலிலே இக்கருத்தை வலியுறுத்துகின்றார். அருள் உருநிலை என்னும் அதிகாரத்திலே இறைவனுடைய

திருவருளே உயிர்களின் பாசப் பிணிப்பினைப் போக்கி மெய்யறிவினை ஊட்டுதற்பொருட்டுத் திருமேனி தாங்கிக் குருவடிவாக எழுந்தருளும் என்று கூறி, ஞானவடிவாகிய குருவினது இயல்புகளையும் விளக்குகின்றார்.

**அறியாமை உள்நின்று அளித்ததே காணும்**
**குறியாகி நீங்காத கோ.**

'தோன்றாத் துணையாகக் கூடவே இருந்து கலந்து நின்று காத்து வழிநடத்திய திருவருளே, கண்ணாற் காணக்கூடியவாறு குருவுருவம் கொண்டு சீடனுக்கு அருள்பாலிக்கின்றது' என்பது இதன் பொருள்.

இறைவன் குருவடிவாக எழுந்தருளுவான் என்னும் உண்மையை மணிவாசகப் பெருமானுடைய வரலாறு நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

திருவாதவூரிலே பிறந்த வாதவூரர் பாண்டிய மன்னனுக்குத் தலைமை அமைச்சராக விளங்கியவர். ஒருமுறை சோழநாட்டுக் கடற்கரையிற் சிறந்த வெளிநாட்டுக் குதிரைகள் விற்கப்படுவதை அறிந்த பாண்டியன் தனது தலைமை அமைச்சராகிய வாதவூரரிடம் பெருந்தொகைப் பொன்னையும் பொருளையும் கொடுத்துக் குதிரைகள் வாங்கிவருமாறு அனுப்பினான். வாதவூரரும் மன்னன் இட்ட பணியைச் செவ்வனே செய்யும் கருத்துடன் சோழநாட்டுக்குப் புறப்பட்டார். வழியிலே திருப்பெருந்துறை வந்தது. அங்கே குருந்த மரம் ஒன்றின் கீழே அமர்ந்திருந்த ஞானாசிரியர் ஒருவரின் போதனைகளைக் கேட்டு அவரால் ஈர்க்கப்பெற்று அவரது சீடர்களில் ஒருவராயினார். குதிரைகள் வாங்கக் கொண்டுசென்ற பொருள்களைத் திருப்பணிகளின் பொருட்டுச் செலவிட்டார்.

குருந்த மரத்தடியில் இருந்த ஞானாசிரியர் சிவபெருமானே என்பதை உணர்ந்து தெளிந்த வாதவூரர் அவன் அருளாலே அவன்தாள் வணங்கி அவன் பெருங்கருணைத் திறனை நினைந்துருகிப் பாடிய மணிவாசகங்களே திருவாசகம். திருவாசகத்திலே இறைவன் குருவடிவாக வந்து தம்மை ஆட்கொண்ட அனுபவத்தைப் பல இடங்களில் நேரடியாகவே தெரிவிக்கின்றார் மணிவாசகர். சிவபுராணத்திலே

**கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க**
**ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க**

என்று இறைவனை வாழ்த்துகையில் திருப்பெருந்துறையில் தம்மை ஆண்டருளிய குருமணியும் தூய அறிவே வடிவாக வந்து தம்மை அணுகியவனும் இறைவனே என்பதைத் தெரிவிக்கின்றார். சிவானந்த மேலீட்டினாலே பாடியருளிய 'உயிருண்ணிப் பத்து' என்னும் பதிகத்திலே வரும் ஒரு வாசகம் இது:

**வினைக் கேடரும் உளரோ**
**பிறர் சொல்லீர் வியன் உலகில்**
**எனைத்தான் புகுந்து ஆண்டான்**
**எனது என்பின் புரை உருக்கி**
**பினைத்தான் புகுந்து எல்லே**
**பெருந் துறையில் உறை பெம்மான்**
**மனத்தான் கண்ணின் அகத்தான்**
**மறு மாற்றத் திடையானே.**

'திருப்பெருந்துறையிலே எழுந்தருளி இருக்கும் எம்பெருமான் தானே வந்து என்னை ஆட்கொண்டான். பின்னர் என் உடல் புகுந்து எலும்பினை உருக்கினான். உருக்கி என் மனத்துள்ளே குடிகொண்டான். அதனால் நான் காணும் பொருள்களிலும் அவனே இருக்கின்றான்; எனது பேச்சிலும் அவனே கலந்துள்ளான்'.

இவ்விதம் குருவினால் ஆண்டுகொண்ட பின்னர் தான் பெற்ற மாற்றத்தை எண்ணி ஆனந்தம் அடைகின்றார் மணிவாசகப் பெருமான். மாற்றம் உய்யும்படியாக உள்ளத்திலே ஓங்காரமாக நின்ற மாற்றம்; பொய்யாயினவெல்லாம் போய் அகன்ற மாற்றம்; அஞ்ஞானத்தை அகற்றி மெய்ஞானத்தை மிளிரச் செய்த மாற்றம்; பாசமாம் பற்றறுத்துப் பாரித்த மாற்றம். அந்த மாற்றத்தை ஏற்படுத்த இறைவன் ஒருவனால் மட்டுமே முடியும் என்பதை உணர்த்த 'இந்தப் பரந்த உலகில் வினையைநீக்க வல்லவன் சிவபெருமானன்றி பிறர் யாரேனும் உளரோ? சொல்லீர்! என்றும் கேட்கின்றார்.

குருவருளினாலே ஞானத்தைப் பெறமுடியும், வினைகளைப் போக்க முடியும் என்பதனை அவ்வைப்பிராட்டியாரின் அனுபவத்தில்

இருந்தும் அறிய முடிகின்றது.

தாயாய் எனக்குத் தான்எழுந்து அருளி
மாயப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல்ஐந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உள்ளத்திற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருள் என
வாடா வகைதான் மகிழ்ந்து எனக்கு அருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என் செவியில்
தெவிட்டா ஞானத் தெளிவையும் காட்டி

என்று விநாயகர் அகவலிலே சொற்பதங் கடந்த கற்பகக் களிறாகிய விநாயகப் பெருமான் குருவடிவாக வந்து தமக்கு அருள் பாலித்த அனுபவத்தைக் கூறுகின்றார் அவ்வைப் பிராட்டியார்.

## குரு தீட்சை

இவ்விதம் இறைவன் குருவடிவில் வந்து ஆன்மாவின் கொடுவினையைக் களைந்து ஞானத்தை அளிக்கும் அருட் செயலுக்கு 'தீட்சை' என்று பெயர். ஆன்மாவின் பக்குவநிலைக்கு ஏற்ப அது பெறும் தீட்சையும் வேறுபடும். பக்குவம் முழுமையாகக் கனிந்த ஆன்மாக்களுக்கு இறைவன் உள்நின்றே உணர்த்தி வீடு அருளுவது இயல்பு. ஏனையவர்களுக்குக் குருவடிவில் தோன்றி ஞானத்தைக் கொடுக்கின்றான்.

தீட்சை அதனைப் பெறுபவரின் பக்குவநிலைக்குத் தக மூவகைப்படும் என்று சைவசித்தாந்தம் கூறுகின்றது. அவை 1. சமய தீட்சை, 2. விசேட தீட்சை, 3. நிருவாண தீட்சை என்பன.

சமயதீட்சை அனுபவ முதிர்ச்சியற்றவர்களுக்கும் விசேட தீட்சை அனுபவ முதிர்ச்சியால் அறிவு பெற்றவர்களுக்கும் நிருவாண தீட்சை வீடுபெறும் வேட்கையில் நிற்பவர்களுக்கும் செய்யப்படுவன. செய்து வைக்கும் முறையினாலே தீட்சை ஏழுவகைப்படும் என்று சிவப்பிரகாசம் என்னும் நூல் விளக்குகின்றது.

1. நயன தீட்சை: இது குரு தனது பார்வையினாலேயே சீடனின் பாசத்தை நீக்கும் முறை. மீன் தனது சினையைப் பார்வையால் வளர்த்தல் போல் குரு மாணவனை அருள்நோக்கம் செய்தல். இது கண்ணப்ப நாயனாருக்குக் காளத்தி அப்பராற் செய்யப்பெற்ற தீட்சை வகை.

2. பரிச தீட்சை: குரு மாணாக்கனைத் தொட்டுத் தூய்மை செய்தல் பரிச தீட்சை எனப்படும். பறவை முட்டையைச் சிறகினால் தொடுவதுபோல் குரு தமது திருக்கரத்தினாலோ திருவடியினாலோ தீண்டிப் பாசத்தைப் போக்குதல். மாணிக்கவாசகருக்குத் திருப்பெருந்துறையிலே கிடைத்த தீட்சை பரிச தீட்சையாகும்.

3. வாசக தீட்சை: இது வாசகத்தால் தீட்சை அளித்தல் என்று பொருள்படும். மாணாக்கரின் பக்குவத்துக்கேற்பச் சிவமூல மந்திரத்தைச் சொல்லிக் கொடுத்தல்.

4. மானச தீட்சை: மனத்தால் பாவனை செய்து பாசத்தைப் போக்குதல் மானச தீட்சையாகும். கருடனாகத் தன்னைப் பாவித்து விடவைத்தியன் விடம் தீண்டப் பெற்றவனின் நஞ்சைப் பார்வையால் நீக்குதல் போல், சிவனாகத் தன்னைப் பாவித்துக் குரு தனது மாணவனின் மலங்களைப் பார்வையால் நீக்குதல்.

5. சாத்திர தீட்சை: இது சைவ சாத்திரங்களைப் புகட்டித் தீட்சை அளித்தலைக் குறிக்கும்.

6. யோக தீட்சை: யோகப் பயிற்சியினாலே பாசங்களை நீக்கிச் சிவவடிவமாகும் முறையைச் சொல்லிக் கொடுத்தல் யோக தீட்சை எனப்படும். சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குச் சிவபெருமான் அளித்த தீட்சை யோக தீட்சையாகும்.

7. ஔத்திரி தீட்சை: இது ஓமம் வளர்த்து அக்கினி சாட்சியாகக் குரு மாணாக்கனின் மலங்களைச் சுட்டெரிக்கும் முறையினைக் குறிக்கும்.

இறைவன் ஆன்மாக்களின் வினைகளை நீக்கி ஞானத்தை அளிப்பதற்குத் தனது சுயவடிவில் தோன்றாது குருவடிவில் தோன்றுவதற்கு ஒரு காரணம் உண்டு. அவன் தனது உண்மை

வடிவில் தோன்றினால் மக்கட் பிறப்பெடுத்த மாணவர் அவனை இனங்கண்டு கொள்ளார். அதனாலேயே இறைவன் மானிடக் கோலத்திற் குருவாக எழுந்தருளுகின்றான்.

## குருவைத் தெரிதல்

இதனாலே சிறிய அளவிலாயினும் எமது அகவளர்ச்சிக்கு உதவுகின்ற குருமாரைக் கடவுளாகவே பாவித்து வழிபடும் முறை சைவ உலகத்தில் வளர்ந்தோங்கலாயிற்று. அத்தகைய வழிபாட்டினால் ஞானாசிரியனாகிய சிவபெருமானின் அருள் நோக்கத்தைப் பெறமுடியும் என்பது நம்பிக்கை. அதனாலே நாமும் அறிவிலும் ஒழுக்கத்திலும் கருணையிலும் நல்லெண்ணத்திலும் நற்செய்கையிலும் சிறந்த ஒருவரைக் குருவாகக் கொண்டு ஆன்ம ஈடேற்றம் பெற முயலுதல் வேண்டும்.

குரு என்றால் குற்றத்தை நீக்குபவன் என்று பொருள். குருவழிபாட்டினால் அறியாமைக்குக் காரணமாகிய ஆணவ மலமாகிய குற்றம் நீங்கும். அது நீங்க மெய்ஞ் ஞானத்துக்கான வழிபிறக்கும். ஆசிரிய தகைமை பெற்ற ஒருவரையே குருவாகக் கொள்ளுதல் வேண்டும். தீட்சை அளித்தவர், கல்வி புகட்டியவர் மற்றும் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற மாசற்ற மனத்துப் பேராசான் ஆகியோரில் ஒருவரைக் குருவாக வழிபடலாம். அல்லது தாய், தந்தை, தமையன் என்போரில் ஒருவரையும் குருவாகக் கொள்ளலாம். இவர்கள் எவராலும் கவரப்படாதவர் குருவைத் தேடிக் கண்டு கொள்ளுதல் வேண்டும். அமெரிக்கராகிய சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் குருவைத் தேடித்திரிந்த காலத்திலேயே ஈழத்துச் சிவயோக சுவாமிகளாற் பரிசதீட்சை பெற்றார்.

குருவைத் தெரிந்து கொண்டபின் அவரிடத்திலே சிவஞான நூல்களைப் பக்தி சிரத்தையுடன் முறைப்படி கற்றல் வேண்டும். கற்றதைச் சிந்தித்துத் தெளிதல் வேண்டும். தெளிந்த பின் அதன்படி ஒழுகுதல் வேண்டும்.

> கற்க கசடறக் கற்க கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக

என்பது திருக்குறள்.

## குரு தட்சணை

கற்பவை கற்றபின் சிவலிங்கப் பெருமானுக்கும் குருவுக்கும் விசேட பூசை செய்து அவர்முன் இயன்ற தட்சணை வைத்து வணங்குதல் வேண்டும். மாணாக்கர் குருவுக்குக் கொடுக்கும் தட்சணையை அவர் செய்த உதவிக்குக் கைம்மாறு கொடுப்பதாகக் கருதலாகாது. குருமார் நல்லொழுக்கமும் குருபக்தியுமுடைய நன்மாணாக்கருக்கு அவர்கள் ஈடேற்றம் கருதிக் கருணை கொண்டு படிப்பித்தலன்றி ஊதியம் கருதியோ பெயர் புகழ் கருதியோ கற்பிப்பதில்லை. அதனால் மாணாக்கர் தம் குருவுக்குப் பொருள் ஏதும் ஒப்படைக்கையில் அவரைச் சிவபெருமானாகக் கருதி அவற்றைப் பூசைப் பொருளாக வைத்து வணங்கி நிற்றல் வேண்டும்; தம்மையும் அடிமையாக ஒப்பித்தல் வேண்டும்.

சில சமயங்களிலே தீட்சைக்கு முன்னாகவோ பின்னாகவோ குரு மாணாக்கரின் பக்குவ நிலையைப் பரீட்சித்துப் பார்ப்பதும் உண்டு. உமாபதி சிவாச்சாரியார் தில்லைவாழ் அந்தணர் மரபில் உதித்தவர். இவர் அருணந்தி சிவத்தின் மாணாக்கரான மறைஞான சம்பந்தரிடம் பாடம் கேட்க விரும்பினார். உமாபதிசிவத்தின் உள்ளப் பக்குவத்தை உரைத்துப் பார்த்தற்பொருட்டு மறைஞான சம்பந்தர் பரீட்சை ஒன்றை நடத்தினார். தாழ்ந்த குலத்து நெசவுத் தொழிலாளர் ஒருவரின் வீட்டுக்குச் சென்று கூழ்வாங்கிக் குடித்தார். அவர் குடிக்கும்பொழுது சிந்திய கூழை உமாபதிசிவம் தமது கையால் ஏந்திப் பருகினார். எல்லோரும் ஒருகுலம் என்னும் பரந்த மனப்பான்மையும் குருவின் எச்சிற் கூழைக் குடிக்கும் பக்கவமும் உமாபதிசிவத்துக்கு இருப்பதைக் கண்டு அவருக்குச் சிவதீட்சை செய்து தமது மாணாக்கராக மறைஞானசம்பந்தர் ஏற்றுக்கொண்டார். இவரிடம் பாடம் கேட்ட உமபாதிசிவம் ஞான விளக்கம் பெற்றுச் சைவசித்தாந்த நூல்கள் எட்டினை எழுதும் தகுதி பெற்றார்.

## குருவழிபாடு இறைவழிபாடே

ஞான விளக்கத்தை ஒரு குருமூலமே பெறமுடியும். குரு என்பவர் அறிவிற் சிறந்தவர்; மாசற்ற மனத்தவர்; ஒழுக்கத்தில் உயர்ந்தவர்; 'நான்' என்னும் முனைப்பு அற்றவர்; எல்லாம் சிவன் செயலே என்று தெளிந்தவர். அத்தகைய சுத்த ஆன்மாவிடத்தில் இறைவன்

தயிரில் நெய்போல் விளங்கி நிற்பான். அத்தகைய ஒருவரைப் பற்றி நிற்றல் சிவனைப் பற்றுதலுக்குச் சரியாகும். அதாவது குருவழிபாடு இறைவழிபாட்டுக்கு நிகரானதாகும்.
'தாரமும் குருவும் தலைவிதி' என்பது பழமொழி. இல்லறத்துக்கு நல்ல மனைவியோ கணவனோ அமைதல் வேண்டும். அதுபோல அறிவு நலத்துக்கு தக்க குரு கிடைத்தல் வேண்டும். அத்தகைய குரு இறைவனால் ஒருவரின் வினைப்பயனுக்கு ஏற்ப விதிக்கப் படுகின்றார். இராமக்கிருஷ்ணருக்கு அவரது குருநாதர் கோதா புரியைக் காட்டியருளியவர் அவர் வணங்கிவந்த காளிதேவி. அதனாலே 'இவர் எனக்கு இறைவன் அருளினாலே கிடைக்கப்பெற்றவர்' என்று எண்ணிக் குருவைப் போற்றுதல் வேண்டும். 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்' என்பது வெற்றி வேற்கை.

## குரு பூசை

குரு சிவபதமடைந்தபின் அவர் சிவபதமடைந்த மாத நட்சத்திரத் திலாயினும் திதியிலாயினும் குருபூசை செய்து அவரை வழிபடல் வேண்டும். குருபூசையைத் திருக்கோயிலிலே செய்வது சிறப் புடையது. சிவலிங்கப் பெருமானுக்கும் குருவின் திருவுருவப்படம் அல்லது திருச்சிலைக்கும் விசேட பூசை செய்வித்துக் குருவின் பெயரால் ஏழைகளுக்கு அன்னதானம் செய்தல் அல்லது பிற அறப்பணிகளை ஆற்றுதல் தகுந்த முறையாகும். ஐயங்கள் நேரும் பொழுது குருவின் நூல்களைக் கற்றால் அல்லது அவரின் போதனைகளை மீளச் சிந்தித்தால் தெளிவு பிறக்கும். தளர்ச்சி ஏற்படுகையில் குருவின் நாமத்தைச் செப்பினால் உறுதி உண்டாகும். புத்திக்கும் சித்திக்கும் முத்திக்கும் குருஞானம் வித்தாகும் என்னும் நம்பிக்கையோடு குருவழிபாட்டைச் செய்துவரல் வேண்டும்.

குருவழிபாட்டால் சீவன்முத்தர் நிலையெய்தியவர் யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகள். யோகர் சுவாமிகளின் குரு செல்லப்பா சுவாமிகள். செல்லப்பா சுவாமிகள் தம்மை ஆண்டு கொண்டருளிய அற்புதத்தைச் சொல்லிச் சொல்லி வாழ்நாள் முழுவதும் வழிபட்டவர் யோகர் சுவாமிகள். அவரது அருள்வாக்குகளின் தொகுதிக்கு 'நற்சிந்தனை' என்று பெயர். நற்சிந்தனை 'எங்கள் குருநாதன்' என்னும் தலைப்பிலான குருவணக்கத்துடனேயே தொடங்குகின்றது.

என்னை எனக்கு அறிவித்தான் எங்கள்குரு நாதன்
இணையடியென் தலைவைத்தான் எங்கள்குரு நாதன்
அன்னைபிதா குருவானான் எங்கள்குரு நாதன்
அவனிஎல்லாம் ஆளவைத்தான் எங்கள்குரு நாதன்
முன்னைவினை நீக்கிவிட்டான் எங்கள்குரு நாதன்
மூவருக்கும் அறியவொண்ணான் எங்கள்குரு நாதன்
நன்மைதீமை அறியாதான் எங்கள்குரு நாதன்
நான்தானாய் விளங்குகின்றான் எங்கள்குரு நாதன்

என்பது முதலாவது பாடல்.

தீட்சாகுரு வித்தியாகுரு என்று தத்தமக்குரிய குருமாருக்கு மட்டுமல்லாது தமிழையும் சைவத்தையும் வளர்த்த சமயகுரவர், சந்தான குரவர் ஆகியோரையும் பிற அருளாளரையும் குருபூசை செய்து வழிபடும் முறையும் நன்கு வளர்ந்துள்ளது. சமயகுரவர் எனப்படுவோர் சிவன் அருளாற் பல அற்புதங்களைச் செய்து சைவத்தை வளர்த்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் நால்வர். சந்தான குரவர் என்போர் சைவசித் தாந்தத்தை வளர்த்தருளிய மெய்கண்டதேவர், அருணந்தி சிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார் ஆகியோர்.

நிறைவாக, கடலிலே தத்தளிப்பவனுக்குத் தெப்பம் போல, பிறவிக் கடலிலே தத்தளிப்பவருக்குக் குருவழிபாடு தென்பை அளிக்க வல்லது; சிவலோகமாகிய கரையை அடைந்து இன்புற உதவுவது. சிவனே குருவடிவாக வந்து உதவினார் அல்லது உதவுகின்றார் என்ற நம்பிக்கையோடு குருமார்களைப் போற்றி மெய்ஞ்ஞானத்தைப் பெறுவோமாக!

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருஉருச் சிந்தித்தல் தானே.

- திருமந்திரம்

# 2

# சம்பந்தமூர்த்தியாரின் சமூகப் பணிகள்

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வேதநெறி தழைத்தோங்கவும் மிகுசைவத் துறை விளங்கவும் தொண்டுகள் செய்தவர். அத்தோடு 'வண்தமிழ்செய்' தவத்தராகவும் அவர் விளங்கியவர்; நானூறுக்கும் மேற்பட்ட பதிகங்கள் பாடிப் பத்தித் தமிழை வளர்த்தவர்; திருத்தாளக் கருவி கொண்டு ஏழிசையும் தழைத்து ஓங்க இன்னிசை பாடியவர்; 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்' எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பாடப்பெற்றவர். தமிழ் உணர்வு குன்றி இருந்த பல்லவர் காலத்திலே தமிழ்மொழிக்கு முதன்மையளித்தவர்; தம்மைப் பாடல்களிற் குறிப்பிடுகையில் 'தமிழ் ஞானசம்பந்தன்', 'நற்றமிழ் விரகன்' என்றெல்லாம் கூறித் தம்மைத் தமிழன் என்று இனங்காட்டிக் கொள்வதிற் பெருமை கண்டவர்.

சமயப் புரட்சி, தமிழ்மொழி விழிப்புணர்வு என்பனவற்றோடு பலவித மான சமூகப் பணிகளிலும் ஞானசம்பந்தப் பெருமான் ஈடுபட்டிருக் கின்றார். மக்களுக்குப் பொதுவான நன்மைகள் விளைக்கும் தொண்டுகளைச் செய்ததோடு சமூகத்தைச் சீர்திருத்தும் செயற் பாடுகளையும் அவர் மேற்கொண்டார் என்பதைப் பெரியபுராணம்

வலியுறுத்துகின்றது. அவைபற்றிச் சிறிது சிந்திப்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## சமூகநலன் கருதிய அற்புதங்கள்

பிள்ளையாருடைய அற்புதங்கள் சில சமூகஞ் சார்ந்தவை. அவர் திருக்கொடிமாடச் செங்குன்றூரில் தங்கியிருக்கையில் மழைக் காலத்தைத் தொடர்ந்து வந்த பனிக் காலத்தில் குளிர் அதிகமாகி நளிர் சுரத்தினால் அவ்வூர் மக்கள் அவதியுற்றனர்.பிள்ளையார்

> அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லுவ தும் அறிவீர்
> உய்வினை நாடா திருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே
> கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
> செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்

எனத் தொடங்கும் திருநீலகண்டத் திருப்பதிகத்தைப் பாடியருளி நோய்வாய்ப்பட்டவர்களைச் சுகப்படுத்தினார். அவ்வூரில் நோய் முற்றாக இல்லாமற் போனதோடு கொங்கு நாட்டிலும் அது பரவாது நீங்கிற்று.

மற்றுமொரு நல்ல உதாரணம் பஞ்சந் தீர்த்த பணி. பிள்ளையாரும் அப்பர் பெருமானும் திருவீழிமிழலையில் தங்கியிருந்த காலத்தில் மழை குன்றியது. காவிரி வற்றியது. நிலம் வரண்டது. எங்கும் பஞ்சம் உண்டாயிற்று. மக்களைப் பசிப்பிணி வருத்தியது. பிள்ளையாரும் அப்பர் சுவாமிகளும் இறைவன் அருளால் பணம் பெற்று மக்களுக்கு அமுது செய்வித்தனர். இப்பணி மழை மீண்டும் பெய்து ஊர் வளம் பெறும்வரை தொடர்ந்து நடந்தது.

எல்லோருக்கும் பொதுவான நன்மைதரும் செயல்கள் என்றில்லாது தனிப்பட்டவர் துயரங்களைத் தீர்ப்பதிலும் பிள்ளையார் திருவுளம் காட்டியிருக்கின்றார். பின்வரும் இரு உதாரணங்களாற் சமுதாயத்தால் எவ்வித உதவியும் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருந்த இருவருக்குப் பிள்ளையார் உதவியருளிய கருணையைக் காண்கின்றோம்.

திருமருகலில் வணிகன் ஒருவன் பாம்பு தீண்டி இறந்துவிட்டான். அவனை மணம் புரிய இருந்த கன்னி, “இனி யாது செய்வேன்”

எனக் கதறி அழுதாள். அவளது அழுகை அத்திருப்பதியில் தங்கியிருந்த பிள்ளையார் திருச்செவிகளுக்கு எட்டியது. கருணை வள்ளலாகிய காழியர்கோன் தாமாக அவளிடம் சென்று துக்கம் விசாரித்தார்.

**சடையாய் எனுமால் சரண்ணீ எனுமால்**
**விடையாய் எனுமால் வெருவா விழுமால்**
**மடையார் குவளை மலரும் மருகல்**
**உடையாய் தகுமோ இவளுண் மெலிவே**

என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளி வணிகனை உயிர்ப்பித்தார். உயிர் பெற்ற வணிகனுக்கும் கன்னிக்கும் திருமணமும் செய்வித்தார்.

திருமயிலாப்பூரிலே சிவநேசர் என்னும் வணிகர் ஒருவர் இருந்தார். அவர் தமது மகள் பூம்பாவையாரை திருஞானசம்பந்தப் பெருமான் மணம்புரிய வேண்டும் என்று நினைத்திருந்தார். பூம்பாவையார் ஒருநாள் நந்தவனத்தில் பாம்பு தீண்டப்பெற்று இறந்தார். சிவநேசர், "இவள் திருஞானசம்பந்தருக்கு உரியவள். அதனால் இவள் உடலை எரித்து, எலும்பையும் சாம்பலையும் அவர் வரும்வரை பாதுகாத்து வைத்தலே முறை" என்று கருதினார்.

பின்னர், திருமயிலாப்பூருக்கு வருகை தந்த பிள்ளை அவர்கள் சிவநேசருக்கு நேர்ந்த கதியை அடியார் வாயிலாக அறிந்து, கபாலீச்சுரப் பெருமானை வணங்கிப் பூம்பாவையை உயிர்ப்பித்தார். சிவநேசர் பிள்ளையாரைப் பணிந்து, "எனது மகளை அடிகள் திருமணஞ் செய்து கொள்ள வேண்டும்" என்று வேண்டினார். பிள்ளையார், "உமது மகள் பாம்பின் விடத்தால் இறந்துவிட்டாள். இவளைத் திருவருளால் நாம் தோற்றுவித்தோம். அதனால் உமது வேண்டுகோள் தகாது" என மறுத்தருளினார்.

## சமத்துவ நோக்கு

திருஞானசம்பந்தர் காலத்துச் சமுதாயத்தில் சாதி வேறுபாடு இருந்தது. அதனைப் பெரிதான ஒரு பிரச்சனையாக்காது, அமைதி யான முறையில் மக்கள் எல்லோரும் ஒரு குலத்தவர் என்பதனை முதன்முதலாக வலியுறுத்திய பெருமை அவருக்கு உரியது.

திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்பவர் அக்காலத்தில் தாழ்ந்த குலத்தவராகக் கருதப்பட்டவர்; சிவபெருமான் திருப்புகழை யாழில் வாசிக்கும் திருத்தொண்டு புரிந்தவர். கோயிலுக்குள் செல்லாது கோயில் வாயிலில் நின்று அத்தொண்டைச் செய்வது அவர் வழக்கம். அவரை வேதியர் குலத்து ஞானசம்பந்தர் தமது பாடல்களுக்கு யாழ் வாசிக்க நியமித்தார்.

இதனால், திருவருட் செல்வர் சிந்தனை சாதி பேதங்களுக்கு அப்பாற்பட்டது என்பது சொல்லாமலே போதரும். இந்த நியமனத்தால் திருஞானசம்பந்தர் செல்லும் இடம் எல்லாம் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் செல்லும் தகுதியினைப் பெற்றார். மேலும், திருநீலகண்ட யாழ்ப்பாணருடன் அவரது மனைவியும் கூடவே சென்றார் என்பதையும் கவனித்தல் வேண்டும்.

இனி, திருஞானசம்பந்தர் யாழ்ப்பாணருடன் மிகுந்த மதிப்போடும் மரியாதையோடும் பழகி வந்தார் என்பதனைக் காட்ட பெரிய புராணத்தில் பல இடங்கள் உள.

ஒரு சிறந்த உதாரணம் அந்தணர் குலத்துப் பிள்ளையார் அரிசனரான யாழ்ப்பாணரை ‘ஐயர்’ என்று அழைத்தமை.

‘ஐயர்நீர் உளமகிழ இங்கணைந்த உறுதி உடையோம்’, ‘ஐயர்நீர் அவதரித்திட இப்பதி அளவில் மாதவம் முன்பு செய்த வாறென, ‘ஐயரே உற்ற இசை அளவினால் நீர் ஆக்கிய இக் கருவி’ என வரும் இடங்கள் உள்ளத்தை உருக்குவன.

இந்தக் காலத்துக் கண்ணோட்டத்தில், அன்று திருஞானசம்பந்தர் செய்தது பெரியதொரு சமுதாயப் புரட்சி என்பதில் ஐயமில்லை.

சைவ சமயத்தில் சாதி வேறுபாடுகளுக்கு இடம் இல்லை. மூவர் முதலிகளோ, பிற நாயன்மார்களோ அதனைப் பொருட்படுத்த வில்லை. பெரியபுராணம் பேசும் அறுபத்து மூவரும் ஒரே குலத்தவர் அல்லர். எனினும் அவர்களுக்கிடையில் எவ்வித பேதங்களும் காட்டப்படவில்லை. நாயன்மார் வழியே சைவ வாழ்க்கை நெறியாகும்.

இந்த இடத்தில் ‘சாதி பேதம் பாராத திருஞானசம்பந்தர் மதபேதம்

பார்த்தது எங்ஙனம் பொருந்தும்?' என்னும் கேள்வி ஒன்று வாசகர்கள் மனத்தில் இயல்பாகவே எழுதல்கூடும்.

திருஞானசம்பந்தர் பேதங்களுக்கு அப்பாற்பட்டவர். 'சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞான' வாழ்க்கை வாழ்ந்தவரது செம்மனம் உயர்ச்சி, தாழ்ச்சி, புகழ்ச்சி போன்ற உணர்வுகளுக்கு உட்பட்டிருந்தது என்று எண்ணுவது பேதைமை. அவர்களது செயல்களுக்குத் திருவருட் காரணம், பொதுநலக் காரணமன்றிச் சுயநலக் காரணங்கள் இருந்திருக்க முடியாது.

மதங்களுக்கு அவர் மாறானவர் அல்லர். மதம் என்ற பெயரால் பொய்யும் புரட்டும் கொடுமைகளும் செய்த மதவாதிகளையே அவர் 'ஈனர்கள்' என இகழ்ந்தார்.

> மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்
> பானல்வாயொரு பாலனீங்கிவன் என்றுநீபரி வெய்திடேல்
> ஆனைமாமலை ஆதியாய இடங்களிற்பல அல்லல்சேர்
> ஈனர்கட்கெளி யேனலேன்திரு வாலவாயரன் நிற்கவே.

இது 'வீடும் வேண்டா விறலின் விளங்கினார்க்கு' இயல்பேயாம். (ஆறுமுகநாவலர் பெருமானும் கிறித்தவ சமயத்தை எவ்விடத்திலும் தூற்றவில்லை. அவர் விவிலிய நூலையே தமிழில் தந்தவரல்லவா? சைவ சமயத்தை விளங்கிக்கொள்ளாது அதனைப் பழித்துக் கூறிச் சைவர்களை மதம் மாற்ற முயன்ற போலிக் கிறித்தவர்களையே அவர் கண்டித்தார்.)

சமணர்களைத் திருஞானசம்பந்தர் கழுவேற்றவில்லை. புனல் வாதத்தில் தோற்றால் தாம் கழுவேறத் தயார் என்று சமணர்கள் அளித்த வாக்குறுதிக்கு ஏற்ப பாண்டியனே அவர்களைக் கழுவேற்று வித்தான் என்பது புராண வரலாறு.

## மூட நம்பிக்கைகளின் மூக்கை அறுத்தவர்

சாதி வேற்றுமை பார்ப்பதுபோலவே சகுனம் பார்ப்பதுவும் மூடநம்பிக்கை வகையானது. திருஞானசம்பந்தப் பெருமானது 'வேயிறு தோளி பங்கன்' எனத் தொடங்கும் பதிகம் அவருக்கு நன்னிமித்தங்கள் பார்ப்பதில் நம்பிக்கை இல்லை என்பதனை

நன்கு எடுத்துக் காட்டுகிறது.

பாண்டிய மன்னன் சமணத்தை தழுவியபோதும் அவனது மனைவி மங்கையர்க்கரசியாரோ முதல் அமைச்சர் குலச்சிறையாரோ சமயம் மாறவில்லை. அவர்கள் இருவரதும் அழைப்பின் பேரில் திருஞான சம்பந்தர் பாண்டிநாடு செல்லத் துணிந்தார். அவ்வேளை அப்பர் சுவாமிகள், 'பிள்ளையாரே, சமணர்கள் பொல்லாதவர்கள். அவர் களால் தங்களுக்குக் கேடுகள் நேரலாம். மேலும் கோள் நிலையும் நன்றாக இல்லை. அதனால் பாண்டி நாட்டுக்குப் புறப்படும் தங்கள் எண்ணத்தை மறுபரிசீலனை செய்தல் நலம்' என்றார்.

அப்பர் சுவாமிகள் வயதில் முதிர்ந்தவர்; முன்பு சமண சமயத்தில் இருந்தவர்; சமணர்களால் கொடுமைப் படுத்தப்பட்டவர்; அனுபவத் தினால் சொல்லுகின்றார் என்பதெல்லாம் பிள்ளை யாருக்குத் தெரியாமல் இல்லை. இருப்பினும் அவர் கேட்கவில்லை. சிவபிரான் அருளால் எமக்கு எவ்வித தீங்கும் வராது என்று கூறிக் கோளறு பதிகத்தைப் பாடியருளினார்.

**வேயிறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்**
**மிகநல்ல வீணை தடவி**
**மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்**
**உளமே புகுந்த அதனால்**
**ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி**
**சனிபாம்பு இரண்டும் உடனே**
**ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல**
**அடியார் அவர்க்கு மிகவே.**

இவ்விதம் திருஞானசம்பந்தப் பெருமானது வாழ்க்கை, அவர் சமயப் புரட்சியன்றி சமூக மறுமலர்ச்சிக்கான பணிகளிலும் ஈடுபட்டமையை நன்கு காட்டுகிறது. அவரையொத்த புதுமைச் சிந்தனாவாதிகள் அவருக்கு முன் வாழ்ந்தமைக்குச் சான்றுகள் இல்லை. அதனால் தமிழ் உலகம் கண்ட முதற் சீர்திருத்தவாதியாக, புரட்சியாளராகத் திருஞானசம்பந்தப் பெருமான் திகழ்கின்றார்.

**வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க**
**பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத**
**சீதவள வயல்புகலித் திருஞான சம்பந்தர்**
**பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.**

# 3

# நமனுக்கும் அஞ்சா நாவுக்கரசர்

மூவர் முதலிகளிலே மூத்தவராகிய திருநாவுக்கரசு நாயனாரின் இயற்பெயர் மருள்நீக்கியார். இவர் தமிழகத்திலே திருமுனைப் பாடியிலே திருவாமூர் என்னும் பதியிலே 'உலகில்வரும் இருள்நீக்கி ஒளிவிளங்கு கதிர் போல' வந்து உதித்தவர். இவரது தந்தையார் புகழனார். தாயார் மாதினியார். தமக்கையார் திலகவதியார். இவர் சிறு பராயத்தவராக இருந்த காலத்திலேயே பெற்றோர்கள் இருவரும் இறைவனடி எய்திவிட்டனர்.

திலகவதியார் திருமணஞ் செய்யவிருந்த கலிப்பகையார் வடபுலத்துப் போரிலே மாண்டொழிந்ததால் திலகவதியாரும் உயிர் துறக்க எண்ணினார். எனினும் தம்பியை வளர்த்தற் பொருட்டு உயிர் வாழ்ந்தார்.

மருள்நீக்கியார் அறநெறியிலே வளர்ந்தார்; அறச்சாலைகள் அமைத்தார்; தண்ணீர்ப்பந்தர் வைத்து வழிப்போக்கரின் தாகத்தைத் தீர்த்தார்; சோலைகள் உண்டாக்கி இறை வழிபாட்டுக்குப் பூக்கள் வழங்கினார்; குளங்கள் வெட்டினார்; விருந்தளித்தார்; வேண்டு வார்க்குப் பொருள் உதவிகளுஞ் செய்தார்.

இவ்விதம் சைவத்திலே நின்று அறப்பணிகள் புரிந்துவரும் நாளிலே கல்வியில் மேலும் சிறந்து விளங்கும் கருத்துடன் பாடலீபுத்திரத்தில் இருந்த சமணப் பள்ளியிற் சேர்ந்தார். மருள்நீக்கியார் அங்கு சமண சமயக் கலைகளை நன்கு கற்றுத் தருமசேனர் என்னும்

பட்டத்தையும் பெற்றார். தருமசேனர் புத்தர்களை வாதில் வென்று சமணசமயத்தை நிலைநிறுத்தினார்.

## முதற் பதிகம்

திலகவதியார் படிக்கச் சென்ற தம்பியார் சமண சமயத்தைத் தழுவிய செய்தி கேட்டு வருந்தினார். திருவதிகை வீரட்டானத்துப் பெருமானை வணங்கி, தம்பியாரை சமணத்திலிருந்து மீட்க வேண்டும் என்று வேண்டினார். இறைவர் தருமசேனருக்குச் சூலை நோயை உண்டாக்கினார். எந்த மருந்துக்கும் மாறாது சூலைநோய் தொடர்ந்து வருத்தியது. அவ்வேளை அவருக்குச் சிவசிந்தனை மேலிட்டது. சிவநெறியை விடுத்து அவநெறியைத் தழுவியதற்கு இச்சூலைநோய் தண்டனையாக அமைந்தது என்று எண்ணித் தமக்கையாரை அடைந்தார். திலகவதியார் திருவைந்தெழுத்தை ஓதித் திருநீற்றை அவருக்குக் கொடுத்தார். மருணீக்கியார் அதனைப் பெற்று அணிந்த அளவிலேயே சூலை நோயின் தாக்கம் குறையத் தொடங்கிவிட்டது. தமக்கையாருடன் சென்று வீரட்டானேசுவரரைத் தொழுது சூலைநோய் முற்றாக ஒழிய வேண்டினார்.

**கூற்றாயின வாறு விலக்ககிலீர்**
**கொடுமைபல செய்தன நானறியேன்**
**ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்**
**பிரியாது வணங்குவன் எப்பொழுதும்**
**தோற்றாதென் வயிற்றின் அகம்படியே**
**குடரோடு துடக்கி முடக்கியிட**
**ஆற்றேனடி யேன்அதி கைக்கெடில**
**வீரட்டா னத்துறை யம்மானே.**

இது மருள்நீக்கியார் பாடியருளிய முதல் பாடல். தொடர்ந்து பத்துப் பாடல்களைப் பாடி திருவதிகை வீரட்டானேசுவரர் மீதான பதிகத்தை நிறைவு செய்தார்.

இந்தப் பதிகம் மிகவும் முக்கியமானது. இது அவர் பாடியருளிய முதற் பதிகம் என்பது மட்டுமல்லாது பத்துப் பாடல்களைக் கேட்ட அளவிலேயே அவரது பத்தியையும் பைந்தமிழையும் பாராட்டிப் பரமசிவன் 'நாவுக்கரசு' என்னும் பட்டத்தையும் வழங்கிய சிறப்பு இப்பதிகத்துக்கு உரியது. மேலும் அவரைப் பல நாட்களாகப்

படாத பாடுபடுத்திய சூலைநோயையும் மாற்றிய பெருமை இதற்கு உண்டு.

இது குறித்து ஒருவிடயத்தை இங்கே கவனித்தல் வேண்டும். சூலைநோயை மாற்றியருளும்படியே திருநாவுக்கரசர் இப்பதிகத் திலே இறைவனை வேண்டுகின்றார். இதிலுள்ள ஒவ்வொரு தேவாரத்திலும் தனது வருத்தத்தைக் குறிப்பிட்டுப் பாடுகின்றார். பாடி முடிந்ததும் வருத்தமும் நீங்கிவிடுகின்றது. அருள்மிகுந்த இத்தேவாரத்தை வயிறு தொடர்பான வருத்தங்கள் வரும் வேளைகளில் நாமும் ஓதலாம். மற்றும்படி இப்பதிகத்தில் உள்ள எத்தேவாரத்தையேனும் கண்டபடி ஓதுவது நல்லதல்ல. என் வயிற்றின் அகம்படியே, குடரோடு துடக்கி முடக்கியிட ஆற்றேன் அடியேன்' என்று அப்பர் சொல்லிப் பாடியதை அவ்வித வயிற்று நோய் இல்லாதவர்கள் எப்படிப் பாடமுடியும்? அப்படிப் பாடுவது இறைவனையே ஏமாற்றுகின்ற செயலாகின்றது. இறைவனிடத் திலேயே பொய் சொல்லுகின்ற நிலையை நாம் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

## இருவழித் தொடர்பு

நாவுக்கரசர் தமது முதலாவது பதிகத்திலேயே அவரது உளப்பாங் கையும் உணர்த்துகின்றார். அது, ஒருவரிடத்தில் ஒன்றைக் கேட்கின்ற பொழுது அதனைச் சும்மா கேட்கக்கூடாது என்பது. கேட்கப் படுபவர் எல்லாம் வல்ல இறைவனாக இருந்தாலும் கூட நன்கொடையாக எதனையும் கேட்கக்கூடாது என்பது நாவுக்கரசர் திருவுள்ளம். அவர் இறைவனிடம் கேட்பது கடுமையாக வருத்து கின்ற கொடுமையான சூலைநோயைத் தீர்க்கும்படி. அப்படிக் கேட்கையில் 'இரவும் பகலும் பிரியாது எப்பொழுதும் நான் உன்னை வணங்குவேன்' என்று அவர் குறிப்பிடுவதைக் கவனித்தல் வேண்டும். அதாவது நான் இதைச் செய்கிறேன் நீ அதைச் செய் என்கின்ற பண்டமாற்று வியாபாரம் ஒன்றை இங்கே நடத்துகின்றார். அடுத்த அடுத்த பாடல்களிலும் பேரம்பேசுதல் தொடர்கிறது:

நெஞ்சம் உமக்கே இடமாய் வைத்தேன்
நினையாது ஒருபோதும் இருந்தறியேன்

சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்

என்றெல்லாம் குறிப்பிட்டுச் சூலை நோயைத் தீர்க்கும்படி கேட்கின்றார்.

இவ்விதமான வேண்டுதல் முறை அப்பர் பெருமானின் பிறதேவாரங் களிலும் வெளிப்படுகின்றது. பின்வரும் தேவாரம் நல்ல உதாரணம்:

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபாதி ரிப்புலி யூரரனே.

திருப்பாதிரிப் புலியூரிலே இறைவர் தோன்றாத்துணை நாதராக எழுந்தருளியிருக்கின்றார். அவரிடத்திலே அப்பர் சுவாமிகள் கேட்பது ஒரு கதி - சிவகதி. அதனை அவர் சும்மா கேட்கவில்லை.

'யான் கருவாய்க் கிடக்கையிலேயே உன் திருவடிகளை நினைக்கத் தொடங்கிவிட்டேன். பின்னர் பிறந்து உன்னைக் கண்டு உனது நாமத்தைப் பயின்றேன். அடுத்து, உனது அருளினாலே சிவாயநம என்று சொல்லி நீறணிந்தேன். மூன்று விடயங்களை உன்பொருட்டு யான் செய்திருக்கின்றேன். நீ என்பொருட்டு ஒன்றை மட்டும் செய்ய வேண்டும். சிவகதி தரவேண்டும் என்று கேட்கின்றார். இந்த வியாபாரத்தில் இலாபம் உனக்குத்தான் என்பதையும் சொல்லாமற் சொல்கின்றார்.

அப்பர் பெருமானிடம் கற்ற பாடமோ என்னவோ அவ்வைப் பிராட்டியாரும் 'நல்வழி'யின் கடவுள் வாழ்த்திலே விநாயகப் பெருமானுடன் ஒரு பண்டமாற்றுச் செய்கின்றார்.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் – கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந்தா

என்ற பாடலிலே 'பால், தேன், பாகு, பருப்பு ஆகிய நான்கையும் யான் தருகின்றேன். நீ எனக்கு இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்று சொல்லப்படுகின்ற மூவகைச் சங்கத் தமிழையும் தந்தருள வேண்டும்' என்று விநாயகப் பெருமானிடம் கேட்கின்றார் அவ்வைப் பிராட்டியார்.

இவ்விதம் கேட்கின்றபொழுது, அப்பராயினும் சரி, அவ்வை யாராயினும்சரி, தாங்கள் செய்ததை அல்லது செய்யப்போவதை முதலிலே சொல்லியே பின்னர் இறைவனிடம் வரம் கேட்கின்ற பண்பையும் கவனித்தல் வேண்டும்.

நாம் ஒரு பதவியைப் பெற முயலும் பொழுது எமது சுயவிவரக் கொத்தில் எமது படிப்பு, பட்டம், அனுபவங்கள் போன்றவற்றை எல்லாம் காட்டித்தானே விண்ணப்பிக்கின்றோம். அதுபோலவே இறைவனுக்குச் செய்யும் விண்ணப்பத்திலும் எமது தகைமையைச் சொல்லி விண்ணப்பித்தல் வேண்டும் என்பது நாவுக்கரசரின் நல்லெண்ணம்.

## வேண்டுதற்கு வேண்டும் தகைமை

இறைவனிடத்தில் ஏதாவது வேண்டுவதற்கு ஒருவருக்கு இருக்கக்கூடிய ஆகக்குறைந்த தகைமை இறைவனை மனத்தில் இருத்தல் என்பது அப்பர் பெருமானின் கருத்து. இதனை "எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே", "புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே வழுவாதிருக்க வரந்தர வேண்டும் இவ்வையகத்தே", ''மனத்தகத்தான் தலைமேலான் வாக்கில் உள்ளான்", "வாயானை மனத்தானை மனத்துள் நின்ற கருத் தானை", "நினையுமா நினைந்தக்கால் உய்யலாமே" என்பனவும் பிறவுமாய அவரது கூற்றுக்களாலேயே அறிந்து கொள்ளலாம்.

அப்பர் பெருமான் சரியையிலே நின்று இறைவனை வழிபட்டவர். நித்தலும் சிவபெருமான் கோயில் சென்று 'புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித் தலையாரக்' கும்பிட்டவர். இறைவனைப் 'பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே' என்று எண்ணி அவனது புகழைப் பாடிப் பாடிப் போற்றியவர். அப்படியெல்லாம் வணங்குகின்ற பொழுது

இறைவனைத் தம் உள்ளத்திலும் வைத்திருந்தவர்.

## உள்ளத்தில் உள்ளான் இறைவன்

இறைவன் எங்கும் இருக்கிறான்; உள்ளத்திலும் இருக்கின்றான். அங்கிங்கு தேடி அலையாமல் அவனை உள்ளத்திலே முதலிலே கண்டு தெளிய வேண்டும் என்பது அப்பர் வாக்கு.

**தேடிக் கண்டு கொண்டேன்**
**திருமாலொடு நான் முகனும்**
**தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே**
**தேடிக் கண்டு கொண்டேன்**

என்று அவர் தமது அனுபவத்தைப் பாடிக்காட்டுவது எமக் காகத்தான். மேலும் உள்ளத்திலே இறைவனைக் காணாது ஊர் ஊராக இறைவனைத் தேடி யாத்திரை செய்வதிலோ தீர்த்தங்கள் ஆடுவதிலோ எவ்வித பயனுமில்லை என்றும் அறிவுரை சொல்கின்றார்.

**கங்கை ஆடிலென் காவிரி ஆடிலென்**
**கொங்கு தண்கும ரித்துறை ஆடிலென்**
**ஒங்கு மாகடல் ஓதநீர் ஆடிலென்**
**எங்கும் ஈசன் எனாதவர்க் கில்லையே.**

‘சிலபேர் வடநாட்டுக்கு யாத்திரை செய்து கங்கையிலே நீராடு கிறார்கள். சிலபேர் காவிரியிலே நீராடுகிறார்கள். குளிர்ச்சி பொருந்திய கன்னியாகுமரித் துறையில் சிலர் குளிக்கின்றனர். இன்னுஞ் சிலர் ஒலிக்கின்ற பெரிய கடலிலே மூழ்கி எழுகின்றனர். எங்குதான் புனித தீர்த்தங்களைத் தேடிச் சென்றாலும் மனத்திலே ஈசனை நினையாதவருக்கு, ஈசன் தோன்றமாட்டான்’ என்கின்றார் அப்பர் சுவாமிகள். இறுதி அடியை இன்னொரு வகையாகவும் பொருள் கொள்ளலாம். எங்கும் ஈசன் - இறைவன் எல்லா இடங் களிலும் இருக்கின்றான். இருக்கின்ற இடத்திலேயே இறைவனைக் காணமுடியாதவர்கள், எவ்வித தீர்த்த யாத்திரை செய்தாலும் காணமாட்டார்கள் என்றும் பொருள் கொள்ளலாம்.

இறைவனை உள்ளத்திலே கண்டு சிந்தித்திராது அந்தத் தீர்த்தம்

நல்லது இந்தத் தலம் நல்லது என்று யாத்திரை செய்கின்றவர்களை அப்பர் சுவாமிகள் வன்மையாக கண்டிப்பதைப் பார்க்கின்றோம். இதுமட்டுமன்று. இறைவனை மனத்திலே நினைந்துருகாது, வேதங்கள் ஓதுகின்றவர்களையும் விழாக்கள், வேள்விகள் செய்கின்றவர்களையும் நீதி நியாயங்கள் பேசுகின்றவர்களையும் வேதாங்கங்களில் வல்லவர் என்று தம்மைக் கூறிக் கொள்பவரையுங் கூட அப்பர் பின்வருமாறு கண்டிக்கின்றார்:

வேதம் ஓதிலென் வேள்விகள் செய்கிலென்
நீதி நூல்பல நித்தம் பயிற்றிலென்
ஓதி அங்கமோர் ஆறும் உணரிலென்
ஈசனை உள்கு வார்க்கன்றி இல்லையே.

## யமனுக்கும் அஞ்சாத பத்தி

இதிலிருந்து போலிச் சமயிகள் இன்றுமட்டுமல்ல அன்றும் இருந்தனர் என்பது தெளிவாகின்றது. போலிச் சமயிகளையன்றிப் போலி அதிகாரிகளையும் எதிர்க்கின்றார் அப்பர் பெருமான். சமண சமயத்தை விட்டுச் சைவத்துக்குத் தருமசேனர் மீண்டும் சென்று விட்டதை அறிந்த சமண அரசன் அவரை அழைத்து வருமாறு அமைச்சர்களை அனுப்பினான். அமைச்சர்கள் திருவதிகையை அடைந்து திருநாவுக்கரசரிடம் அரசன் அழைப்பதாகக் கூறினார்கள். அவர் அடிபணிய மறுக்கின்றார்.

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணி அறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை
தாமார்க்கும் குடி அல்லாத் தன்மை யான
சங்கரனைச் சங்கவெண் குழையோர் காதற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே.

அப்பர் பெருமான் தர்க்க சாத்திரத்திலே வல்லவர். எதனையும் காரண காரியத்தோடு விளக்கும் இயல்பினர். இத்தேவாரமும் அவரது விவாதத் திறனுக்குப் பெயர் பெற்றது.

“அரசன் அழைக்கின்றான்” என்கின்றார்கள் அமைச்சர்கள். அரசன் யாரை அவ்விதம் அழைக்க முடியும்? தனது குடிமகனைத்தானே அழைக்க முடியும்? அதனாலே தான் அவனது குடிமகன் அல்லன் என்பதை உணர்த்த “நாம் யார்க்கும் குடியல்லோம்” என்கின்றார். அடுத்துத் தம்மை ஆள்பவன் சங்கரன்; அரசன் அல்லன் என்கிறார். சங்கரன் அரசனைவிடப் பெரிய அரசன். ஏனெனில் அவனுக்கு மேலான அரசன் எவரும் இலர் என்கிறார். அத்தோடு அவர் நின்றுவிடவில்லை. இப்படிச் சொன்னால் அரசன் விட்டு விடுவானா? துன்புறுத்துவான் அல்லவா? கொல்லவும் கூடும் அல்லவா? அதனாலே, “நமனை அஞ்சோம்” என்கிறார். “சாவதற்கும் அஞ்சேன்! அரசன் செய்வதைச் செய்வானாக! யான் வரமாட்டேன் என்று போய்ச் சொல்லுங்கள்” என்று அமைச்சர்களைத் திருப்பி அனுப்புகின்றார்.

இந்தத் துணிவு அவருக்கு எங்ஙனம் வந்தது? இறைவன் மீதுள்ள அசையாத நம்பிக்கையால் வந்தது.

கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியினையே குறுகி னோமே

என்னும் அடிகள் இந்த நம்பிக்கையின் வெளிப்பாட்டால் வந்தவை. இந்த நம்பிக்கையை உணர்த்தும் அப்பர் பெருமானின் மற்றொரு பாடல் இது:

அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்கு
எல்லை யில்லதோர் அடிமைபூண் டேனுக்கே.

## பிறவி வேண்டும்

தம்மை முழுமையாக இறைவனிடம் ஒப்படைத்துவிட்ட நிலையில் பிறவித் துன்பங்கள் எதற்கும் அஞ்சாத அவரது வைராக்கியத்தை இப்பாடல் எடுத்துக் காட்டுகின்றது. அல்லல், அருவினை, தொல்லை வல்வினை முதலியன பிறவியுடன் தொடர்புடையன. பிறவி துன்பம் நிறைந்தது; தொடர்ந்து வருவது. அதிலிருந்து விடுபட வேண்டும்.

விடுபடுவதற்கு சிவபெருமானை வணங்க வேண்டும். இதனையே பலரும் சொல்கிறார்கள். இவர்களின் கூற்றுக்கு மாறாக அப்பர் சுவாமிகள் பிறப்பு வேண்டும் என்கிறார். வியப்பாக இல்லை....?

**குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிழ் சிரிப்பும்**
**பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்**
**இனித்தம் உடைய எடுத்தபொற் பாதமும் காணப் பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே**

என்னும் தேவாரம் அவரது வித்தியாசமான சிந்தனைக்கு நல்ல சான்று. பிறவியை வெறுத்த அப்பர் இறைவனின் அழகிய நடனத் தோற்றத்தைக் கண்டபின் தான் பெற்ற மனித்தப் பிறப்பை எண்ணி மகிழ்ச்சி அடைகின்றார்.

மற்றுமொரு வித்தியாசமான விளக்கம் இறைவனின் திருவடி இன்பம் பற்றியது. இறைவனின் திருவடி இன்பம் இறந்தபின்னர்தான் கிடைக்கும் என்று மக்கள் பலர் நினைக்கின்றார்கள். அப்பர் சுவாமிகள் இறைவனைத் தம்முள்ளே தேடிக் கண்டு கொண்டு காயமே கோயிலாக மனமணி இலிங்கமாக நேயமே நெய்யும் பாலாய் நிறைய நீராட்டி இறைவனைப் பூசித்தவர். இறைவனைச் சதா சிந்தித்து அவரது திருவடி இன்பத்தை இப்பிறப்பிலேயே அனுபவித்தவர். அந்த அனுபவத்தை விளக்கும் அருமந்த தேவாரம் இது:

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
பூசல் வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

## பணிசெய்தல் கடன்

இறைவனின் இணையடி இன்பத்தைத் தொண்டு செய்வதன் மூலமும் அனுபவித்தவர் அப்பர் பெருமான். சரியைத் தொண்டுகளோடு தாமாகவும் திருஞானசம்பந்தப் பெருமானோடு சேர்ந்தும் பலவகையான மக்கள் தொண்டுகள் செய்தவர். வழிபாட்டுச்

சமயத்தைத் தொண்டுச் சமயமாக மாற்றி மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதனை இந்த வையகத்துக்கு உணர்த்திய பெருமை திருநாவுக்கரசு நாயனாரைச் சாரும்.

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையும் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.

திருநாவுக்கரசு நாயனாரின் வாழ்க்கையிலிருந்து நாம் படிக்க வேண்டிய பாடங்கள் எவ்வளவோ உள. இறைவனை எம்முள்ளே தேடிக் கண்டு கொள்வோம். எதற்கும் அஞ்சாது வாழ்வோம். மனித்தப் பிறப்பை நேசிப்போம். மக்களுக்குத் தொண்டு செய்வோம். முத்தி இன்பத்தை எமது தெய்வீகச் சிந்தனைகளாலும் செயல்களாலும் இப்பிறப்பிலேயே அனுபவிப்போம்.

# 4

# சுந்தரர் சொற்றமிழ்

சுந்தரமூர்த்தி நாயனார் திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூர் என்னும் பதியிலே சடையனார் என்னும் வேதியருக்கும் இசைஞானியார் என்னும் அம்மையாருக்கும் பிள்ளையாக அவதரித்தவர்.

சேக்கிழார் பெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் குலச்சிறப்பையும் அவதார நோக்கத்தையும்,

மாதொரு பாக னார்க்கு வழிவழி அடிமை செய்யும்
வேதியர் குலத்துள் தோன்றி மேம்படு சடைய னாருக்(கு)
ஏதமில் கற்பின் வாழ்க்கை மனைஇசை ஞானியார்பால்
தீது அகன்று உலகம் உய்யத் திருஅவ தாரஞ் செய்தார்

என்று விளக்குகின்றார். 'தீது அகன்று உலகம் உய்ய' நம்பியாரூரர் அவதரித்தார் என்கின்றார் சேக்கிழார் பெருமான். நம்பியாரூரர் என்பது சுந்தரருக்குப் பெற்றோர் இட்ட பெயர்.

உலகத்தின் தீமைகளை அகற்றுவதற்கு அவ்வப்போது இறைவன் அருளால் பெரியோர்கள் பிறப்பதுண்டு. உலகத்தின் தீமைகளுக்கு மனிதரிடத்திலேயுள்ள அசுர குணங்களே காரணம். இவற்றையே நாம் பொதுவாகத் தீய குணங்கள் என்கின்றோம். தீய குணங்கள் பத்து வகை. பொய் சொல்லுதல், கோள் மூட்டுதல், கோபித்துக் கொடுஞ் சொற்களைச் சொல்லுதல், பயனில சொல்லுதல் ஆகிய நான்கும் வாக்கினால் வெளிப்படும் தீக்குணங்கள். களவாடல்,

கொலை செய்தல், பயனற்ற தொழில்களைச் செய்தல் ஆகிய மூன்றும் காயத்தால் தொழிற்படும் தீக்குணங்கள். கொலை செய்ய நினைத்தல், காமம், பேராசை இம்மூன்றும் மனத்தால் வரும் தீக்குணங்கள். கொலை, களவு, பொய், கள் குடித்தல், குரு நிந்தை ஆகிய ஐந்தும் மனித குலத்துக்குப் பாதகம் விளைவிக்கும் தீய செயல்களாகும்.

இத்தகையவும் பிறவுமாய தீமைகளைக் களைந்து உலகத்தை ஓங்குவிக்கப் பிறந்த பெருமையுடையவர் நம்பியாரூரர். அவரது பெருமை திருவருள் கலந்தது; திருவருளால் வளர்ந்தது. சிவபெருமான் தடுத்து ஆட்கொண்டதாலும் தோழனாகத் தொண்டு செய்ததாலும் நம்பியாரூரர் பெருமை அளவிறந்ததாகின்றது.

## தடுத்து ஆண்டமை

நம்பியாரூரருக்கும் சடங்கவி சிவாச்சாரியாரின் மகளுக்கும் திருமணம் நடக்கவுள்ள மங்கலப் பொழுதிலே, சிவபெருமான் நம்பியாரூரரைத் தடுத்து ஆட்கொள்ளும் பொருட்டு, முதிய அந்தணர் வடிவந் தாங்கி எழுந்தருளினார். மணக்கோலத்திலே இருக்கும் நம்பி தமக்கு அடிமையானவர் என்று வாதிட்டார். அதனைக் கேட்ட நம்பியாரூரர் “சைவ அந்தணர் மற்றோர் அந்தணனுக்கு அடிமையாவது இல்லை. மாறாக, உமக்கு நான் அடிமை, என்று கூறும் நீர், ஒரு பித்தனாகத்தான் இருக்க வேண்டும்” என்றார்.

வழக்கு திருவெண்ணெய் நல்லூர் அவைக்கு இடம்மாறியது. வேதியர் அவை அந்தணர் காட்டிய மூல ஓலையை ஆராய்ந்து, நம்பியாரூரர் முதியவருக்கு அடிமைதான் என்றும் அவருக்கு ஏவல் செய்வதே கடமையாகும் என்றும் தீர்ப்பு வழங்கியது.

முற்பிறப்பு நிகழ்வுகள் ஆன்மாக்களுக்கு இப்பிறப்பில் பெரிதும் தெரிவதில்லை. அந்தணராக வந்த சிவபெருமான் உமாதேவி யாருடன் இடப வாகனத்திலே எழுந்தருளிக் காட்சி தந்து, நம்பியாரூரர் முற்பிறப்பிலே கைலையிலே, தமக்குத் தொண்டராக இருந்ததையும் பெண்ணாசை கொண்டதால் மண்ணுலகத்தில் பிறந்ததையும், முன்பு விருப்பம் வைத்த பெண்களை மணவாது வேறு ஒருபெண்ணைத் திருமணம் செய்ய ஏற்பாடுகள் நிகழ்ந்ததால்,

அதனைத் தடுத்துத் தாம் ஆட்கொண்டதையும் நினைவு படுத்துகின்றார்.

அவற்றைக் கேட்ட நம்பியாரூரர், தாய்ப் பசுவின் குரலினைக் கேட்ட கன்றினைப் போல உருகினார்; கதறினார்; செய்வது அறியாது பதறினார். அப்பொழுது சிவபெருமான் தமது அடியவரை நோக்கி, "உன்னை ஆட்கொள்ள வந்தபோது நம்மிடம் வன்மை பேசியதால் 'வன்தொண்டன்' என்னும் பெயரினை இனிப் பெறுவாயாக! நமக்குச் சிறப்பான அர்ச்சனை அன்பு கலந்த பாட்டேயாகும். ஆதலால் அன்புச் சொற்களால் என்னைப் பாடுவாயாக" என்று கூறி அருளினார்.

மற்றுநீ வன்மை பேசி வன்றொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு(க) என்றார் தூமறை பாடும் வாயார்.

சொற்றமிழ் என்ற தொடருக்கு இரு வகையாகப் பொருள் கூறலாம். வெளிப்படையான பொருள் தமிழ்ச் சொற்கள் என்பது. தமிழ்ப் பாட்டு, அதாவது தேவாரங்களே இறைவனுக்குப் பிடித்த மாலை என்பதைச் சேக்கிழார் பெருமான் வலியுறுத்துகின்றார் என்று கருதலாம்.

சொற்றமிழுக்கு மற்றும் ஒரு பொருள் 'அன்புச்சொல்' என்பது. தமிழ் என்ற சொல்லுக்கு அன்பு என்னும் பொருளும் உண்டு. 'தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்' என்ற அப்பர் பெருமான் வாக்கில் தமிழ் அன்பு என்ற பொருளிலே வருகின்றது. 'அன்போடு உன் புகழைப் பாட மறவேன்' என்பது இதன் பொருள். எனவே சொற் றமிழ் என்பதற்கு அன்புச் சொல் என்றும் பொருள்.

வன்தொண்டருக்கு அன்பு பெருகுகின்றது. ஆனால் பாடுவதற்குச் சொல் வரமாட்டேன் என்கிறது. "நீ முன்பு மணப்பந்தலிலே நம்மைப் 'பித்தன்' என்று கூறினாய்! ஆதலால் நம்மைப் பித்தனென்றே விரித்துப் பாடுவாயாக" என்று அருளினார் இறைவர். வன்தொண்டர், வலிந்து ஆட்கொண்டவர் மகிழ, வையகம் உய்யத் திருவாய் மலர்கின்றார்.

பித்தாபிறை சூடிபெரு மானே அருளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன் மனத்துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர்
அருட்டுறையுள்
அத்தாஉனக் காளாயினி அல்லேன் எனலாமே.

'நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்' என்பது பழமொழி. சுந்தரரை இறைவன் தடுத்து ஆட்கொண்ட சம்பவம் இதற்கு நல்ல உதாரணம். திருமணம் செய்வதற்கு மணப்பந்தரிலே அமர்ந்து இருந்தவருடைய திருமணம் நடைபெறாமல் போய் விடுகிறது. திருமணம் தடைப்படும் என்று எவருமே எதிர்பார்க்க வில்லை. எதிர்பாராதது நடந்து விடுகின்றது.

எமது வாழ்க்கையிலும் இவ்விதம் எதிர்பாராத சம்பவங்கள் நடைபெறுவதுண்டு. நம்பியாரூரர் நடந்து கொண்டதைப் போலவே நாமும் சீறிச்சினந்து எமது முயற்சிகளுக்குத் தடையாய் இருப்பவர்களைக் கடும் மொழிகளால் ஏசுவதுண்டு. பகைமை பாராட்டி அவர்களின் தொடர்பை முறித்துக் கொள்வதும் உண்டு.

வாழ்க்கையில் நடக்க வேண்டிய தொன்று நடக்காது போனால் அது இறைவனுக்குச் சித்தம் இல்லைப் போலும் என்று நினைத்து, மேற்கொண்டு நடக்கவேண்டிய அலுவல்களைப் பார்த்தலே கவலையில்லாத வாழ்க்கைக்கு வழியாகும்.

சுந்தரர் திருமணம் நின்று போனதைப் பற்றி எள்ளளவும் கவலைப்படவில்லை. இறைவனே தன்னை வந்து ஆட்கொண்டான் என்பதை அறிந்தபின், கவலைப்படுவதற்கு என்ன இருக்கிறது? இறைவன் கட்டளைப்படியே தலங்கள் தோறும் சென்று அன்பு கலந்த பாடல்களினால் அவருக்கு அர்ச்சனை செய்வதைத் தலைமேற்கொண்டார். தில்லையிலே, சுந்தரர் தன்னை மறந்து இறைவனை வணங்கிய தன்மையைச் சேக்கிழார் பெருமான் எமது கண்முன் காட்டும் சிறப்புப் பாடல் இது:

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணம் ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக

இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

பத்திச் சுவை நனிசொட்டும் இந்தப் பாடலிலே, சுந்தரரின் உயர்ந்த, ஒப்பற்ற பத்தி நிலையைச் சித்திரிக்கும் வகையில் பத்தி என்றால் என்ன, அது எப்படி இருக்கும் என்பதையும் சுட்டிக் காட்டுகின்றார் சேக்கிழார் பெருமான்.

பக்தி என்பது இறைவன் மீது ஆன்மா கொண்டிருக்கும் மாசற்ற அன்பு. இது இறைவனே தனக்கு இணையற்ற துணையாவான் என்று ஆன்மா அவன் மீது வைக்கும் ஓர் உள்ளார்ந்த நம்பிக்கையால் வளர்கின்றது. இறைவன் ஆட்கொண்டு அருளிய அனுபவத் தால் இந்த நம்பிக்கை சுந்தரரிடம் மிக ஆழமாகவே வேரூன்றி விட்டது. நம்பிக்கை மதிப்பாகி, மதிப்பு பத்தியாகி, பத்தி பரவசமாகிய உச்சநிலையை இந்தப் பாடல் காட்டுகின்றது. இறைவனின் திருநடனக் கோலத்தைக் கண்ட சுந்தரரின் கண்கள் அந்தக் கோலத்தில் குத்திட்டு நின்றன. மெய், வாய், செவி, மூக்கு என்னும் ஏனைய புலன்களும் செயல் இழந்து கண்களுக்குக் கட்டுப்பட்டு நின்றன. அதுபோல மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய கரணங்கள் நான்கும் மனத்திலே படிந்தன. குணங்கள் மூன்று. அவை இராசதம், தாமதம், சாத்வீகம். இவையும் சிறந்த குணமாகிய சாத்துவிகமாயின. அதாவது கண்கள் காண, மனம் ஒருமையுற, குணங்கள் சாத்துவிகமாக, இறைவனின் எல்லையற்ற கூத்தினாலே வந்த பேரின்ப வெள்ளத்தில் திளைத்து, மகிழ்ந்து, மலர்ந்து,

தெண்ணிலா மலர்ந்த வேணியாய்
உந்தன் திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

கண்ணீர் சொரிதல், கைம்மலர் உச்சிமேற் குவித்தல், பாடுதல், பரவுதல், பணிதல் எல்லாம் அளவற்ற பக்தியின் அறிகுறிகள்.

திருவாசகத்திலே மணிவாசகப் பெருமானும்

**மெய்தான் அரும்பி விதிர்விதித்து உன் விரையார் கழற்கு என்**
**கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்**
**பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி சயசய போற்றி என்னும்**
**கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக் கண்டு கொள்ளே.**

என்று பாடியிருப்பதுவும் கவனிக்கத் தக்கது.

## தோழமை

தடுத்து ஆட்கொண்ட பெருமையை அடுத்துச் சுந்தரருக்குக் கிடைத்த மற்றொரு சிறப்பு, இறைவனுடைய தோழமை.

இறைவன் அருளாலே சுந்தரர் திருவாரூருக்குச் சென்ற பொழுது அவருக்குப் பெரும் வரவேற்பு அங்கு அளிக்கப்பட்டது. அங்கு, அவர் தியாகேசப் பெருமானை விழுந்து வணங்கிய பொழுது "நம்மை உனக்குத் தோழமையாகத் தந்தோம்! நாம் முன்பு திருநாவலூரிலே தடுத்து ஆட்கொண்ட பொழுது நீ பூண்டிருந்த மணக்கோலத்துடனேயே எந்நாளும் இனி வாழ்வாயாக!" என்ற திருவாக்கு எழுந்தது,

வாழிய மாமறைப் புற்றிடங்கொள்
மன்னவனார் அருளாலோர் வாக்குத்
தோழமையாக உனக்கு நம்மைத்
தந்தமை நாம்முன்பு தொண்டு கொண்ட
வேள்வியில் அன்று நீ கொண்ட கோலம்
என்றும் புனைந்துநின் வேட்கை தீர
வாழிமண் மேல் விளை யாடுவாய் என்று
ஆரூரர் கேட்க எழுந்த தன்றே.

அன்று முதலாக அடியார்கள் சுந்தரரைத் 'தம்பிரான் தோழர்' என்று அழைக்கலாயினர். இறைவனுடைய தோழமை சுந்தரருக்குக்

கிடைத்தமைக்கு ஒரு காரணம் உண்டு. சரியை, கிரியை, யோகம், ஞான்ம் என்னும் நால்வகை வழிபாட்டு நெறிகளிலே சுந்தரர் யோகநெறியில் நின்று இறைவனை வழிபட்டவர். இது இடரினும் தளரினும் எப்பொழுதும் இறைவனை அகத்தில் எழுந்தருளச் செய்து வழிபடும் ஓர் உயர் நெறியாகும். இதன் பலனாகக் கிடைத்த பரிசே இறைவருடைய தோழமை. தோழமைநெறி சகமார்க்கம் என்றும் அழைக்கப்படும். சகமார்க்கத்தில் சிவன் உருப்பெற்று அவரோடு அளவளாவும் உரிமை உடையவரானார் சுந்தரர். தமக்குக் கிடைத்த தோழமைபற்றி அவரே குறிப்பிடும் தேவாரம் இது:

ஏழிசையாய் இசைப்பயனாய்
இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான் செய்யும்
துரிசுகளுக்கு உடனாகி
மாழையொண்கண் பரவையைத் தந்து
ஆண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன்
என்னாரூர் இறைவனையே.

தோழராக இருந்து இறைவர் சுந்தரருக்குப் பலவித உதவிகளையும் செய்கின்றார். தோள் கொடுத்து உதவுகின்றவன் தானே தோழன்.

ஒருவருக்குத் திருமணம் என்பது முன்வினைப் பயன் என்பார்கள். சுந்தரரைத் திருமணஞ் செய்வதற்கென்றே இரு பெண்கள் பிறந்துள்ளனர். திருக்கயிலாயத்திலே, உமாதேவியாரின் தோழியர்களில் ஒருவர் கமலினியார் என்பவர். அவர் திருவாரூரிலே பரவையாராகப் பிறந்துள்ளார். உமாதேவியாரின் மற்றுமொரு தோழி அனிந்திதையார் என்பவர். அவர் ஞாயிறு என்னும் பதியிலே சங்கிலியாராகப் பிறந்து இருக்கின்றார். இவர்கள் இருவரையும் சுந்தரருக்கு இனம் காட்டித் திருமணஞ் செய்து வைக்கின்றார் இறைவர். அதுமட்டுமன்று, அவர்களது வாழ்க்கை இனிதே நடைபெற நெல்லும் பொன்னும் கொடுத்தும் உதவுகின்றார். கொடுத்த நெல்லைக் கொண்டு செல்வதற்குக்கூட "ஆளில்லை எம்பெருமான் அவை அட்டித் தரப் பணியே" என்று பாடி இறைவனின் உதவியை நாடுகின்றார் சுந்தரர். எதனையும் இறையருளை முன்வைத்து செய்து குறைவற வாழ்ந்தவர் அவர்.

அதனாலேயே,

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும்
சார்கினும் தொண்டர் தருகிலாப்
பொய்மை யாளரைப் பாடா தேயெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்(கு)
யாதும் ஐயற வில்லையே.

என்று அனுபவத்தால் பெற்ற அறிவுரையை எமக்கு முன்வைக்கின்றார். மற்றுமொரு அனுபவப் பாடல் இது:

பொன்னும் மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
போக முந்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை என்பிழை யைப்பொறுப்பானைப்
பிழையெ லாந்தவிரப் பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறி யொண்ணா
எம்மா னைஎளி வந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தன்
ஆரூரானை மறக்கலு மாமே.

இதிலே 'பின்னை என் பிழையைப் பொறுப்பானை' என்ற அடியைக் கவனித்தல் வேண்டும். திருவொற்றியூரிலே, சங்கிலியாருக்கு 'உன்னை விட்டுப் பிரியேன்' என்று சத்தியம் செய்து கொடுத்தவர் சுந்தரர். அந்தச் சத்தியத்தை மீறியதால் அவரது கண்கள் இரண்டும் பார்வையை இழந்தன. மீறியது வேறு ஒன்றுக்காகவும் அல்ல. திருவாரூர் வசந்த விழாவிற்குச் செல்வதற்கே. ஆரூர் இறைவனை சொற்றமிழால் அர்ச்சிப்பதற்கே. இருந்தாலும் குற்றம் குற்றமே! தன் தோழனாக இருந்தாலும் கொடுத்த வாக்குறுதியை மீறியதற்குரிய தண்டனையை வழங்கி விடுகிறார் இறைவர். தன்னை வணங்கும் பொருட்டே தோழன் வாக்குறுதியை மீறினான் என்று கூட இறைவர் சலுகை காட்டவில்லை.

இந்தச் சம்பவம் எம் எல்லோருக்குமே நல்லதொரு பாடத்தைப்

படிப்பிக்கின்றது. ஒருவருக்குக் கொடுத்த வாக்குறுதியை எக் காரணமுங் கொண்டு மீறல் கூடாது. இறைவன் பொருட்டும் மீறக் கூடாது. கோயில் தொண்டு என்ற பெயரால் குடும்பத்தைப் புறக்கணிக்கின்றவர்கள் இதனை ஊன்றிக் கவனித்தல் வேண்டும். பொதுச் சேவை என்ற பெயரால் பிள்ளைகளுக்கும் சொந்த பந்தங்களுக்கும் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யாது விடுகின்றவர்கள் சுந்தரர் வாழ்க்கையில் இருந்து படிக்க வேண்டிய நல்லதொரு பாடம் இது.

பின்னர் தன் பிழையினை உணர்ந்து இறைவனை வேண்டிக் கண் பார்வையை மீளப் பெற்ற கருணையை நினைந்தே,

" பின்னை என் பிழையைப் பொறுப்பானை
பிழையெலாந் தவிரப் பணிப்பானை"

என்று பாடுகின்றார் தம்பிரான் தோழர்.

## திருத்தொண்டத்தொகை

தம்பிரான் தோழர் தமிழுக்கும் சைவத்துக்குஞ் செய்த தலையாய சேவை திருத்தொண்டத் தொகை பாடியருளியமை.

திருவாரூரிலே திருக்கோயிலிலே விளங்கும் தேவாசிரிய மண்டபத்திலே சிவனடியார்கள் கூடியிருப்பது வழக்கம். சுந்தரமூர்த்தி நாயனார் கோயிலுக்குச் செல்லும் போதெல்லாம் அந்த அடியார்களுக்கெல்லாம் அடியானாகத் தான் தொண்டு செய்ய வேண்டும் என்னும் எண்ணம் அவருக்கு எழுந்ததுண்டு. ஒருநாள், 'நீ எமது அடியார்கள்மீது சொற்றமிழ் பாடு' என்றார் இறைவர். அவரது அருளால் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்

அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே

என்று தொடங்கித் திருத்தொண்டத் தொகையைப் பாடியருளினார். இப்பதிகத்திலே அறுபத்திமூன்று திருத்தொண்டர்களைப் பட்டியற் படுத்துகின்றார். அத்துடன் தொகை அடியார்கள் என்றும் பெயர் தெரியாத ஏனைய அடியார்களுக்கும் தான் என்றென்றும் அடிமை என்றும் பாடுகின்றார்.

திருத்தொண்டத்தொகையே சேக்கிழார் பெருமான் அருளிச்செய்த பெரியபுராணத்திற்கு முதல்நூலாகும். அவ்வகையில் அரியதொரு வரலாற்று நூலுக்கு வித்திட்ட பெருமையும் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கே உரியதாகின்றது.

தொண்டு செய்வதைக் கடமையாகக் கொண்டவர் அப்பர் பெருமான். தொண்டர்களுக்குத் தொண்டனாக இருப்பதில் இன்பங் கண்டவர் சுந்தரர். அவர்களது பெருமையைப் பாடி உலகெலாம் பரவும்வகை செய்தமைக்குச் சைவ உலகம் சுந்தரமூர்த்தி நாயனாருக்கு என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார் தேவாரங்களைப் போலவே சுந்தரமூர்த்தி நாயனாரின் தேவாரங்களும் இறைவன் அருளால் பாடப்பெற்றவை. அதனால் திருவருட் சக்தி வாய்ந்தவை. அவற்றை நாமும் பொருள் உணர்ந்து ஓதினால் நன்மை பெறலாம். நன்மையாவது இறைவனது திருவருளைப் பெறுதல்.

வறுமை வந்துற்றால் 'தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்' என்று தொடங்கும் பதிகத்தை அல்லது 'பொன்னும் மெய்ப் பொருளும் தருவானை' என்று தொடங்கும் பதிகத்தை முறைப்படி ஓதி இறைவனை வணங்கிவரின் செல்வம் கொழிக்கும்.

கண்ணில் அல்லது உடம்பில் நோய் நொடிகள் வரின் 'அழுக்கு மெய்கொடுன் திருவடி அடைந்தேன்' என்று தொடங்கும் திருப்பதிகத்தை அல்லது 'தூவாயா' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடுதல் வேண்டும். காரணமற்ற அச்சம் அல்லது

வேறு வகையான மனக்கவலைகள் தோன்றின் 'மற்றுப் பற்றெனக்கின்றி நின் திருப்பாதமே மனம் பாவித்தேன்' என்னும் நமச்சிவாயப் பதிகத்தை ஓதுதல் வேண்டும். பொருள் பண்டங்கள் காணாமற் போனால் 'பொன் செய்த மேனியீர்' என்று தொடங்கும் பதிகத்தைப் பக்தியுடன் பாடுதல் வேண்டும்.

இவ்விதம் தேவைகளுக்கு ஏற்ற சொற்றமிழ்ப் பாடல்களைத் தெரிந்து பாடி எமது தேவைகளைத் திருவருளால் நிறைவேற்றி நிகரில்லா வாழ்வு வாழ்வோமாக!

செப்பலருங் குண்டையூர் நெல்ல ளைத்துத்
    திருப்புகலூர்ச் செங்கல்செழும் பொன்னாய்ச் செய்து
தப்பின் முது குன்றர்தரும் பொருளாற் றிட்டுத்
    தடத்தெடுத்துச் சங்கிலிதோள் சார்ந்து நாதன்
ஒப்பிறனித் தூதுவந்து ஆறூடு கீறி
    உறுமுதலை சிறுமதலை உமிழ நல்கி
மெய்ப் பெரிய களிறுஏறி அருளாற் சேர
    வேந்தருடன் வடகயிலை மேவினாரே.

- உமாபதி சிவாசாரியார்

# 5

# மணிவாசகப் பெருமானின் பத்தி வைராக்கியம்

வைராக்கியம் என்பது விடாப்பிடியான உறுதிப்பாடு. பத்தி வைராக்கியம் இறைபத்தியில் ஊன்றி நிற்கும் மனவலிமையைக் குறித்து நிற்கின்றது. வைரக்கற்களுக்கும் சாதாரண கற்களுக்கும் வேறுபாடு இருப்பதைப் போலவே வைராக்கிய பத்திக்கும் சாதாரண பத்திக்கும் பெரும் வேறுபாடுண்டு. சாதாரண பத்தியில் பலன் எதிர்பார்ப்பு இருக்கும். வைராக்கிய பத்தியில் இறைவனிடத்தில் இருந்து எவ்வித பலனும் எதிர்பார்க்கப்படுவதில்லை.

## வீர பத்தி

பெரிய புராணத்திலே பத்தி வைராக்கியத்தை 'விறல்' என்று குறிப்பிடுகின்றார் சேக்கிழார் பெருமான்.

> கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
> ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
> கூடும் அன்பினில் கும்பிட லேயன்றி
> வீடும் வேண்டா விறலின் விளங்கினார்

என்று திருத்தொண்டரின் இயல்பை விளக்குகையில் 'விறல்' என்ற சொல்லைக் கையாளுகின்றார்.

இந்தச் சரீரம் எமக்குக் கிடைத்தது இறைவனை வணங்கி முத்தி

இன்பம் பெறும் பொருட்டேயாம். ஆனால், திருத்தொண்டர்களோ பத்திப் பெருக்கத்தினால் இறைவனை வணங்குதலால் ஆகும் இன்பமே போதும் என்று இருப்பவர்கள். முத்திப் பேற்றினைத் தன்னும் அவர்கள் எதிர்பார்ப்பதில்லை. அத்தகைய 'விறல்' மிகுந்தவர்கள் என்கிறார் சேக்கிழார் பெருமான். விறல் என்பது வலிமையை அல்லது வீரத்தைக் குறிக்கும். இரு பொருள்களுமே இங்கு நன்கு பொருந்தி வருகின்றன. பத்தி வலிமைக்கு மனத்தை ஒருநிலைப்படுத்துதல் வேண்டும். இது ஒரு பக்குவநிலை. மனத்தோடு போராடி அதனை அடிமைப்படுத்தியவருக்கே இந்தநிலை சாத்தியமாகும். இந்தப் போரிலே வென்றவர்கள் திருத்தொண்டர்கள். அதனால் அவர்கள் வீரர்கள் ஆகின்றனர். பத்தி முற்றிய நிலையில் பரமன் பணியன்றி வேறுபணி செய்யாத இவர்களை 'வீரத்தார்' என்று சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகிறார்.

மணிவாசகப் பெருமான் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகப் போற்றியவர். சிவனன்றிப் பிற தெய்வங்களை வணங்காத வைராக்கிய நெஞ்சு படைத்தவர். இந்த வைராக்கியத்தைத் திருவாசகத்திலே பல இடங்களில் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

> கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
> நள்ளேன் நினதடி யாரொடு அல்லால் நரகம்புகினும்
> எள்ளேன் திருவருளாலே இருக்கப் பெறினிறைவா
> உள்ளேன் பிறதெய்வம் உன்னையல் லாதெங்கள் உத்தமனே

என்று திருச்சதகத்திலே பாடுகின்றார். கற்புள்ள பெண் தற்கொண்டானையன்றிப் பிற ஆடவரை மனத்தாலும் நினையா திருத்தல் போல, பக்குவப்பட்ட ஆன்மா தன்னை ஆட்கொண்ட சிவனையன்றிப் பிறதெய்வங்களைக் குடியே கெட்டுப் போனாலும் மதியாதிருக்கும் மனத்திட்பத்தை இவ்வாசகம் முன்வைக்கின்றது.

## முத்திக் கலப்பு வைராக்கியம்

பிடித்த பத்து மற்றுமோர் உதாரணம். 'உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்து அருளுவது இனியே' என்று சிவபெருமானுக்கே சவால் விடுகின்ற வைராக்கியம், முத்திக்

கலப்பு வைராக்கியம் எனப்படும்.

இந்தக் கலப்பு அனுபவத்தை மற்றவர்களும் பெற வேண்டும் என்னும் பரந்த நோக்கோடு யாத்திரைப் பத்திலே மற்றைய அடியவர்களையும் அழைக்கின்றார். சிவனின் பெருமையைக் கூறுகின்றார். வாழ்க்கை நிலையாமை பற்றி அறிவுறுத்துகின்றார். அடியவர்களின் சிறப்பை விளக்குகின்றார். புகழ்மின் தொழுமின் பூப்புனைமின், புயங்கன் தாளே புந்தி வையுங்கள் என்று வேண்டுகின்றார். சிவபுரத்தின் சிறப்புக்களைப் பலவாறு எடுத்துக்காட்டி அங்கு சென்று சிவனை வணங்கி மனம் உருகி நிற்போம் வாருங்கள் என்று பரிந்து அழைக்கின்றார். பலர் யாத்திரையில் கலந்து கொள்ளவில்லை. அவர்களுக்காக இனியும் காத்திருக்க அவர் விரும்பவில்லை. அவரது வைராக்கியம் இப்படிப் பேசுகிறது:

> நிற்பார் நிற்க நில்லா உலகில் நில்லோம் இனிநாம்
> செல்வோமே
> பொற்பால் ஒப்பாம் திருமேனிப் புயங்கன் ஆள்வான்
> பொன்னடிக்கே
> நிற்பீர் எல்லாம் தாழாதே நிற்கும் பரிசே ஒருப்படுமின்
> பிற்பால் நின்று பேழ்கணித்தால் பெறுதற் கரியன் பெருமானே.

## பத்திப் பெருமிதம்

சிவபெருமான் தனக்கு அருள்செய்த பெருங்கருணைத் திறத்தை எண்ணி, எண்ணி வியப்பது மணிவாசகப் பெருமானது இயல்பு. இந்த இயல்பு அச்சோப் பதிகத்தில் பெருமிதமாகின்றது. 'எனக்கு ஐயன் அருளியவாறு வேறு யார் பெறுவார்?' என்று பெருமையோடு கேட்கின்றார்; ஆச்சரியப்படுகின்றார். இதுவும் பத்தி வைராக்கியத்தின் வெளிப்பாடேயாகும்.

சிவன் வான நாடரும் அறியொணாதவன்; வேத முடிபுகளாலும் தொடரமுடியாதவன்; பெரிய கூத்தன். அவன் கூத்தை யாரறிவார்? 'நான் அறிவேன். அறியும்படி எனக்கு அவன் அருள் செய்தான். அதுவும் எவ்விதமான தகுதியும் இல்லாத எனக்கு அருள்செய்தான். அவநெறியிற் சென்ற என்னைச் சிவநெறிக்கு இட்டுச் சென்றான்.

அவ்விதமான அருள் வேறு எவருக்கும் கிடையாது. எனக்குக் கிடைத்தது பெரிய ஆச்சரியம்' என்று மணிவாசகர் பெருமைப்படும் பாடல்களில் இதுவும் ஒன்று:

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தையெனக்கு
அறியும் வண்ணம் அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

நாயன்மார்கள் சிவனுக்கு ஆட்பட்டவர்கள். அதனால் எவ்வித இடரும் வராது என்ற நம்பிக்கைக்கு உட்பட்டவர்கள். இந்த நம்பிக்கை அசைக்க முடியாத நம்பிக்கை. அப்பர் சுவாமிகள் பாடுகிறார்:

அல்லல் என்செய்யும் அருவினை என்செய்யும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செய்யும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்கு
எல்லை இல்லதோர் அடிமை பூண்டே னுக்கே.

தில்லையம்பலத்தில் உள்ள சிவனுக்கு அடிமைபூண்ட எனக்கு அல்லலோ அருவினையோ முன்னைய தீ வினைகளோ எதுவும் செய்யாது என்று நாவுக்கரசர் இறும்பூதெய்துகின்ற நிலையை இங்கு காண்கின்றோம். வயதிற் சிறுவராகிய திருஞானசம்பந்தப் பிள்ளையாரைக் கண்ட பாண்டிமாதேவிக்கு ஒரு சந்தேகம். சமணர்களோ எண்ணில்லாதவர். அவர்களை இப்பாலகர் வாதிலே வெல்வாரா என்று கவலையுற்றார். பிள்ளையார் இதனை அறிந்து கொண்டு, "மாதேவியே, என்னை நீ பாலன் என்று கருதி வருந்த வேண்டாம். அல்லல் சேர் சமணர்களுக்கு நான் எளியேன் அல்லேன். காரணம் திருவாலவாயின் கண்ணே எழுந்தருளி இருக்கும் அரன் என் பக்கத்தில் நிற்கின்றான்; வெல்வேன்; அஞ்ச வேண்டாம்" என்று வழுதியின் தேவிக்கு ஆறுதல் கூறுமுகமாக 'மானினேர்விழி மாதராய்' என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளினார். இறைவன் துணை நிற்கின்றான் என்கின்ற உறுதிப்பாடு அவருக்குத் துணிவைத் தந்தது.

## என்ன குறையும் இலோம்

திருவெம்பாவையிலும் இத்தகைய உறுதிப்பாட்டை மணிவாசகப் பெருமான் வெளிப்படுத்துவதைப் பார்க்கிறோம். சிவனைப் பிரானாகப் பெற்றவர்கள் சிவனையன்றி, சிவனது அடியார்களையும் அதிகம் நம்புகின்றவர்கள். கன்னிப் பெண்கள் மிகுந்த உறுதியோடு சிவபிரானுக்கே கூறுகின்றார்கள்:

**உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்**
**உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்**
**அன்னவரே எங்கணவர் ஆவார் அவர் உகந்து**
**சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்**

இந்தச் சைவப் பெண்கள் சிறந்த படிப்பாளியோ உயர்ந்த உத்தியோகத்தரோ பெரிய பணக்காரரோ தமக்குக் கணவராக வரவேண்டும் என்று விரும்பவில்லை. தமக்கு வரவிருக்கும் கணவர்மாரின் தகைமையை இப்பொழுதே தீர்மானித்து விட்டார்கள். அவர்கள் சிவனடியாராக இருத்தல் வேண்டும். சிவனடியார் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் இல்லாத, அறத்தவர்; ஈர அன்பினர்; யாதும் குறைவிலார்; வீரம் மிகுந்தவர். அவர்களுடன் வாழ்க்கை நடத்துவது பெரிய பேறு. எந்தவித குறையும் வராது.

**“இன்னவகையே எமக்கு எங்கோன் நல்குதியேல்**
**என்னகுறையும் இலோம்”**

என்னும் அவர்களது கூற்றில் சிவ நம்பிக்கையால் விளைந்த தன்னம்பிக்கை நறுக்கெனத் தொனிக்கின்றது.

## எங்கெழிலென் ஞாயிறு

திருமணம் குறித்த இதே வைராக்கியம் பின்வரும் பாடலிலும் வெளிப்படுகின்றது:

**உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று**
**அங்கப் பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்**

எங்கள் பெருமான் உனக்கொன்று உரைப்போம் கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார் தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கு எங்கோன் நல்குதியேல்
எங்கெழில் என் ஞாயிறு எமக்கு ஏலோர் எம்பாவாய்.

'உன் அன்பர் எமக்குக் கணவராதல் வேண்டும். உனக்கே பகலும் இரவும் தொண்டு புரிதல் வேண்டும். எமது இந்த விருப்பத்தை நீ நிறைவேற்றுவாயேல் சூரியன் எங்கு உதித்தாலும் எமக்கு என்ன?' என்கின்றார்கள். 'குடிகெடினும் உன்னையே கொள்வேன்' என்று திருச்சதகத்தில் வெளிப்படுத்திய வைராக்கியம் இங்கு 'சூரியன் நிலை திரிந்தாலும் சிவவாழ்வு கிடைத்தால் போதும்' என்னும் அஞ்சாத நிலைப்பாட்டைக் காட்டுகின்றது. சிவநெறியில் எதுவும் நிலை தளராது என்பது குறிப்புப் பொருள்.

இவ்விதம் தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த சிவபெருமானின் பெருங்கருணைத் திறத்தில் ஊறித்திளைத்த மணிவாசகப் பெருமான், அவ்வனுபவ ஆனந்தத்தினால் சிவவாழ்விலும் சிறந்ததொன்றில்லை என்ற பத்தி வைராக்கியம் உடையராயிருத் தலை அவரது திருவாசகம் நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

# 6

# சாத்திரம் விளக்கிய சந்தான குரவர்

சைவ சமயத்திலே பத்திநெறியால் சைவத்தை வளர்த்தவர்கள் சமயகுரவர் என்றும் அறிவு பூர்வமாகச் சைவ தத்துவங்களைப் பரப்பியவர்கள் சந்தான குரவர் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

சிவபெருமான் மீது ஆராத அன்பு செலுத்தித் திருத்தலங்கள் தோறும் நற்றமிழால் தோத்திரங்கள் பாடியும் பிற சமயத்தவருடன் வாதாடியும் சைவ சமயத்தை வளர்த்த திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் ஆகிய நால்வரும் சமயகுரவர்களில் முதன்மையானவர்களாகப் போற்றப்படுகின்றனர்.

தோத்திர வகையாற் சைவத்தை வளர்த்த இக்குரவர்களைத் தொடர்ந்து சாத்திர முறையால் சைவ சமயத்தைப் பரப்பியவர்கள் சந்தானகுரவர் எனப்படுவர். சந்தானகுரவர் என்றால் சந்ததி முறையாக வளர்ந்து வந்த குருபரம்பரையைச் சேர்ந்த ஆசிரியர்கள் என்று பொருள். இந்தப் பரம்பரை சிவபெருமானையே குருவாகக் கொண்டு வளர்ந்த பரம்பரையாகும்.

சிவபெருமான் எல்லாம் அறிந்தவர். தூய அறிவே வடிவானவர். அவர் அருளாலேயே ஆன்மாக்கள் அறிவு பெறுகின்றன. அதனால் அவரே முதற்குரு; ஞானகுரு. அவர் திருநந்திதேவருக்கு ஞானத்தை அளித்தவர். திருநந்திதேவர் சனற்குமாரற்கும் அவர் சத்திய ஞானதரிசனிகளுக்கும் அவர் பரஞ்சோதி மகாமுனிவருக்கும்

குருவாக விளங்கியவர்கள். இறைவனைக் குருவாகக் கொண்ட மரபில், வந்த இந்நால்வரும் திருக்கைலையில் வாழ்ந்தவர் ஆதலால் இவர்கள் **அகச்சந்தான குரவர்** எனப்படுவர்.

அகச்சந்தான குரவர்களில் நான்காவது பரம்பரையைச் சேர்ந்த பரஞ்சோதி மாமுனிவர் தமது குருவின் திருநோக்கின்படி திருக்கைலாசத்திலிருந்து பூவுலகத்துக்கு எழுந்தருளி மெய்கண்ட தேவருக்கு ஞானோபதேசஞ் செய்தருளினார். மெய்கண்ட தேவர் தமது தவத்தின் பயனாகக் கிடைக்கப்பெற்ற ஞானத்தை அருள்நந்தி சிவனாருக்கும் அவர் உமாபதி சிவத்தாருக்கும் உபதேசம் செய்தனர். மெய்கண்ட தேவர் மரபில் வளர்ந்த இந்நால்வரும் மண்ணுலகத்தவராதலின் **புறச்சந்தான குரவர்** எனப்படுவர். சந்தான குரவர் நால்வர் என்றும் இவர் குறிக்கப்படுவர்.

## 1. திருவியலூர் உய்ய வந்த தேவநாயனார்

சந்தான பரம்பரையில் வராத குருமார்களும் சைவதத்துவ ஆய்வில் ஈடுபட்டுள்ளனர். அவர்களில் முதன்மையானவர் திருவியலூர் உய்யவந்த தேவநாயனார். கி.பி. பதினொராம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த இவர் மெய்கண்ட தேவருக்குக் காலத்தால் முற்பட்டவர். அதனால் இவர் செய்த திருவுந்தியார் எனும் நூலும் சைவ சாத்திர நூல்கள் வரிசையில் முதல் இடத்தைப் பெறுகின்றது.

திருவுந்தியார் நாற்பத்தைந்து கலித்தாழிசைப் பாக்களால் ஆக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தாழிசையும் 'உந்தீ பற' என்று முடிவுறுவதால் இது 'உந்தியார்' என்னும் பெயரைப் பெற்றது. உந்திபறத்தல் மகளிர் ஆடும் விளையாட்டுக்களில் ஒன்று. இதில் ஒரு பெண் மற்றொருத்தியைத் தள்ள, அவள் இன்னொருத்தியைத் துரத்த ஆட்டம் தொடரும். இதே மகளிர் விளையாட்டை வைத்து மணிவாசகப் பெருமானும் தில்லையில் 'திருவுந்தியார்' பாடியிருக்கின்றார். அவர் அதில் ஞானவெற்றியைப் பாடுகின்றார். திருவியலூர் ஆசிரியரும் தமது திருவுந்தியாரில் சிவஞானத்தின் சிறப்பினைப் போற்றுகின்றார். நூல் பின்வருமாறு தொடங்குகின்றது:

அகளமாய் யாரும் அறிவு அரிது அப்பொருள்
சகளமாய் வந்தது என்று உந்தீ பற
தானாகத் தந்தது என்று உந்தீபற.

## 2. திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார்

இவர் ஆளுடைய தேவநாயனாரின் மாணவர். ஆளுடைய தேவநாயனார் திருவியலூர் உய்யவந்த தேவநாயனாரின் மாணவராவர். திருக்கடவூராரின் காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு.

இவர் இயற்றிய திருக்களிற்றுப் படியார் என்னும் நூல் சைவசித்தாந்த நூல்களில் இரண்டாவதாக விளங்குகின்றது. இந்நூலை ஆசிரியர் நிறைவு செய்து தில்லையை அடைந்து பொன்னம்பலத்துத் திருப்படிகளில் அதனை வைத்து வணங்கி நின்றார். அவ்வேளை அப்படியில் உள்ள களிற்றுச் சிலையின் கை நிமிர்ந்து நூலை எடுத்து ஆடற்பெருமான் திருவடியில் வைத்த அருட்செய்கையால் இந்நூல் திருக்களிற்றுப் படியார் எனப் பெயர் பெறலாயிற்று.

நூறு வெண்பாக்களால் ஆக்கப்பெற்ற இந்நூல் திருவுந்தியார் கூறும் கருத்துக்களை விளக்குகின்றன.

சாத்திரத்தை ஓதினர்க்குச் சற்குருவின் தன்வசன
மாத்திரத்தே வாய்த்தவளம் வந்துறுமே – ஆர்த்தகடல்
தண்ணீர் குடித்தவர்க்குத் தாகந் தணிந்திடுமோ
தெண்ணீர்மை யாயிதனைச் செப்பு.

என்பது திருக்களிற்றுப் படியாரில் உள்ள ஒரு வெண்பா. 'கடல் நீர் அதிகம் உள்ளது. ஆனால் அதனைக் குடித்துத் தாகத்தைத் தீர்த்துக் கொள்ள முடியாது. கடல் நீர் மேகத்தின் வழி நன்னீராக வந்தாலே அதனைப் பருகித் தாகத்தைத் தணிக்க முடியும். அதுபோல, சாத்திரமும் குருவழியாற் பெற்றாலே பயன் உள்ளதாக அமையும்' என்பது இதன் பொருள்.

இவ்விதமாகச் சித்தாந்தம், திருவடிப்பேறு, திருவைந்தெழுத்து

ஆகியவற்றின் சிறப்புகள், பதி பசு பாச இயல்புகள், சமயகுரவர் நால்வரின் பெருமை, குருவின் மகிமை போன்ற பல பொருள்களை இந்நூல் தெளிவுபடுத்துகின்றது.

## 3. மெய்கண்ட தேவநாயனார்

மெய்கண்ட தேவர் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்தவர். அகச்சந்தான குரவர் பரஞ்சோதி மாமுனிவரிடம் ஞானோபதேசம் பெற்ற பேறுடையவர். புறச்சந்தான குருபரம்பரையின் முதல்வர். மெய்கண்டார் என்பது உண்மையைக் கண்டறியும் ஞானத் திறத்தினால் அவருக்கு ஆன்றோர் வைத்த சிறப்புப் பெயராகும். அவரது பிள்ளைத் திருநாமம் சுவேதனப் பெருமாள் என்பது.

இவர் அருளிச் செய்த நூல் சிவஞானபோதம் ஆகும். இப்பெயரில் சிவம், ஞானம், போதம் என்னும் மூன்று சொற்கள் அடங்கியுள்ளன. ஞானம் என்பது அறிவு. உலகத்துக்குக் கர்த்தாவாகிய சிவபெரு மானை உள்ளவாறு உணரும் அறிவு சிவஞானம் எனப்படும். போதம் என்பது போதித்தல். போதித்தல் என்பது ஐயப்பாடுகளைப் போக்கித் தெளிவுபிறக்கும் வகையில் மாணவருக்கு அறிவுறுத்தல். எனவே சிவஞான போதம் என்பது சிவஞானத்தை ஐயந்திரிபு இன்றி உணர்த்த எழுந்த நூலாகின்றது.

சிவஞான போதம் பன்னிரண்டு நூற்பாக்களால் ஆக்கப்பெற்றுள்ளது. பொருள்நிலை கருதி நூற்பாக்கள் முப்பத்தொன்பது அதிகரணங் களாக வகுக்கப்பட்டுள்ளன. உதாரண வெண்பாக்களாக எண்பத்தொன்று இடம்பெற்றுள்ளன. இது பிரமாண இயல், இலக்கண இயல், சாதன இயல், பயன் இயல் என நான்கு இயல்களைக் கொண்டுள்ளது. பிரமாண இயல் பதி பசு பாசம் ஆகிய முப்பொருள்களின் உண்மையையும் இலக்கண இயல் அவற்றின் இலக்கணங்களையும் உணர்த்துகின்றன. சாதன இயல் அதிகாரி, சாதனம், சாதிக்கும் முறை என்பனவற்றைக் கூறுகின்றது. பயன் இயல் பாசநீக்கம், சிவப்பேறு, சீவன் முத்தர் இயல்பு ஆகியவைபற்றி விளக்குகின்றது.

இந்நூலுக்கு முன்னரும் பல சித்தாந்த நூல்கள் தோன்றியிருந்தன.

எனினும் அவை சித்தாந்தப் பொருளை இந்நூலைப் போன்று முழுமையாக விளக்கிச் சொல்லவில்லை. அதனால் சிவஞானபோதம் 'சித்தாந்த முதல் நூல்' எனப் போற்றப்படுகின்றது.

இந்நூல் நுட்பம் மிகுந்த நூற்பாக்களால் அமைந்திருப்பதால் அதன் பொருளைப் பல அறிஞர் விரித்து விளக்கி உரைகண்டனர். அவற்றுள் **சிவஞான முனிவர்** என்பார் கண்ட உரையே சிறந்ததென அறிஞர்களாற் போற்றப்படுகின்றது.

## 4. அருள்நந்தி சிவாச்சாரியார்

சகலாகம பண்டிதராக விளங்கிய இவரது காலமும் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டாகும். மெய்கண்ட தேவருக்கு வயதில் மூத்தவர். எனினும் அவரின் ஞானத்திறங் கண்டு அவரைக் குருவாகக் கொண்டவர். மெய்கண்ட தேவர் சகலாகம பண்டிதருக்கு அருள்நந்தி சிவம் என்னும் பெயரைச் சூட்டி, தாம் செய்த சிவஞான போதத்துக்கு விளக்கவுரை எழுதும்படி பணித்தார். அவ்வண்ணமே அருள்நந்தி சிவமும் விளக்கவுரையை **சிவஞான சித்தியார்** என்ற பெயரில் எழுதினார்.

சிவஞான சித்தியார் பரபக்கம், சுபக்கம் என இரு பகுதிகளைக் கொண்டது. பரபக்கப் பகுதி அக்காலத்துப் பிற சமயங்களை எடுத்துக் கூறி அவற்றைக் காரணங்கள் காட்டி மறுக்கின்றது. சுபக்கப் பகுதி சிவஞான போதத்துக்கு விளக்கம் அளிக்கின்றது. சிவஞான போதத்தின் முதற்பா பின்வருமாறு:

> அவன் அவள் அதுவெனும் அவைமூ வினைமையின்
> தோற்றிய திதியே ஒடுங்கி மலத்து உளதாம்
> அந்தம் ஆதி என்மனார் புலவர்.

இதனைச் சித்தியார் பின்வருமாறு விளக்குகின்றது:

> ஒருவனோடு ஒருத்தி ஒன்றென்று
> உரைத்திடும் உலகம் எல்லாம்
> வருமுறை வந்து நின்று
> போவதும் ஆத லாலே

தருபவன் ஒருவன் வேண்டும்
தான்முதல் ஈறும் ஆகி
மருவிடும் அநாதி முத்த
சித்துரு மன்னி நின்றே.

'ஒருவன் என்றும் ஒருத்தி என்றும் ஒன்று என்றும் பலவாறு அழைக்கப்படும் இவ்வுலகம் தோன்றுதல், நிற்றல், அழிதல் என்னும் நியதிக்கு உட்பட்டது. ஆதலால் இதனைத் தருபவன் ஒருவன் இருத்தல் வேண்டும். அவனே இறைவன்' என்பது இதன் பொருள்.

இவ்விதமாகப் பல அரிய விளக்கங்களைக் கொண்டு விளங்கும் சிவஞான சித்தியார் சிவஞான போதம் சுருக்கமாகக் கூறிய நுண்ணிய தத்துவங்களைத் தெளிவுபடுத்தி நிற்பதால் சிவஞான போதத்தின் வழிநூல் என்று போற்றப்படுகின்றது.

அருள்நந்தி சிவாச்சாரியார் அருளிய இரண்டாவது நூல் **இருபா இருபஃது** என்பது. வெண்பா, ஆசிரியப்பா என்னும் இருவகைப் பாக்களால் ஆக்கப்பெற்றமையாலும் இருபது செய்யுட்களைக் கொண்டுள்ளமையாலும் இது இருபா இருப∴து எனப் பெயர் பெறலாயிற்று. இது அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது.

நூலாசிரியர் தமக்கு ஏற்பட்ட ஐயங்களைத் தமது ஞானகுருவாகிய மெய்கண்ட தேவநாயனாரிடம் வினாவி அறிவதுபோல இந்நூலை ஆக்கியிருக்கின்றார். சிவபிரானே மெய்கண்ட தேவராகக் குருவடிவம் கொண்டார் என்ற கருத்தில் வினாக்கள் எழுப்பப்படுகின்றன. உதரரணமாக,

'பெருமானே, நீ எங்கும் நிறைந்திருப்பவன். எனது உள்ளத்திலும் நீங்காது இருக்கும் தன்மை உனக்கு உண்டு. அப்படி இருந்தும் என் உயிர் ஆணவ மலத்தினால் பிணிக்கப்பட்டு அறியாமையே வடிவாய் நிற்பது ஏன்?'

என்பது போன்ற பல வினாக்களை வினவி அவற்றுக்கான விடைகளையும் விளக்குகின்றது இந்நூல்.

## 5. மனவாசகங் கடந்தார்

இவரும் மெய்கண்ட தேவநாயனார் காலத்தவர். அவரது நாற்பத்தொன்பது மாணவர்களுள் ஒருவர்; திருவதிகையிற் பிறந்தவர். அதனால் திருவதிகை மனவாசகங் கடந்தார் என அழைக்கப்படுபவர். இவர் ஒரு சிறந்த ஞானி என்பது இவரது **உண்மை விளக்கம்** என்னும் நூலால் தெரியவருகின்றது. காப்புச் செய்யுள் உட்பட இந்நூலில் ஐம்பத்தைந்து வெண்பாக்கள் உள்ளன. நூலாசிரியருக்கும் அவரது குருவாகிய மெய்கண்ட தேவநாயனாருக்கும் இடையில் நடைபெறும் உரையாடல் போல் இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. முப்பத்தாறு தத்துவங்கள் ஆணவம், வினை, ஆன்மாவின் சொரூபம், திருக்கூத்து, திருவைந்தெழுத்து முதலாய பல சித்தாந்தக் கருத்துக்களைச் சுருக்கமாக விளக்கும் நூல் இது.

## 6. உமாபதி சிவாச்சாரியார்

கி.பி. பதிநான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த உமாபதி சிவாச்சாரியார் சோழநாட்டில் திருப்புலியூரில் அவதரித்தவர். தில்லை மூவாயிர அந்தணர்களுள் ஒருவர். வேத சிவாகமங்களை ஓதியுணர்ந்த பேரறிஞர். தமது கல்விச் சிறப்பாலும் ஒழுக்க விழுப்பத்தாலும் சிவிகையூர்ந்து செல்லும் உரிமையைப் பெற்றவர்.

இவரது காலத்தவர் அருள்நந்தி சிவாச்சாரியாரின் மாணவரான திருக்கடந்தை மறைஞான சம்பந்தர். அவர் ஒரு நாள் தில்லை வீதியில் உமாபதிசிவம் சிவிகையிற் சென்றதைக் கண்டு “பட்ட கட்டையிற் பகற் குருடு போகுது” என்றார். ‘பட்ட கட்டை’ என்பது பட்ட மரத்தாற் செய்யப்பட்ட பல்லக்கு. பல்லக்கு முன் பகலிலும் பணியாளர்கள் விளக்கேந்திச் சென்றதால் பல்லக்கில் இருந்தவரைப் ‘பகற்குருடு’ என்றார்.

அதனைக் கேட்டு உணர்ந்த உமாபதி சிவத்துக்கு அகந்தை அகன்றது; ஞானம் பிறந்தது. குருவை இனங்காணும் பக்குவமும் கூடியது. இறைவனே மறைஞான சம்பந்தர் வடிவில் எழுந்தருளினார் என்பதை உணர்ந்து, பல்லக்கிலிருந்து இறங்கி மறைஞான சம்பந்தரை வணங்கி நின்றார்.

உமாபதி சிவத்தின் பக்குவ முதிர்ச்சியைச் சோதிக்க விரும்பிய மறைஞான சம்பந்தர் எதுவும் பேசாது நடந்தார். உமாபதி சிவம் பின் தொடர்ந்தார். மறைஞான சம்பந்தர் தாழ்ந்த குலத்து நெசவுத் தொழிலாளர் வாழும் தெருவை அடைந்து, அங்கு ஒருவர் கொடுத்த உப்பில்லாக் கஞ்சியைக் கைகளில் வாங்கிக் குடித்தார். அப்பொழுது அவரது புறங்கைவழியே ஒழுகிய எச்சிலைப் பிரசாதமாகக் கருதி உமாபதி சிவம் அருந்தினார். அதனைக் கண்ட மறைஞான சம்பந்தர் உமாபதி சிவத்துக்குச் சிவதீட்சை செய்து தமது மாணாக்கராக ஏற்றுக்கொண்டார்.

உமாபதி சிவத்தின் இச் செயலைப் பொறுக்காத தில்லைவாழ் அந்தணர்கள் தாழ்ந்த குலத்தவர் குடிசையில் கஞ்சி அருந்தியதால் உமாபதி சிவம் அந்தணர் குலத்து ஆசாரத்திலிருந்து வழுவினார் என்று குற்றஞ் சாட்டி அவரைத் தம் சாதியிலிருந்து விலக்கி வைத்தனர்.

உமாபதி சிவம் மனந்தளராது தில்லைக்கு அணித்தாகவுள்ள கொற்றவன்குடி என்னும் பதியில் திருமடம் ஒன்றை அமைத்துச் சிவயோகத்தில் ஈடுபடலானார். தில்லைக்கூத்தருக்குப் பூசை செய்யும் முறை தமக்கு வந்தபோது உமாபதி சிவம் கோயிலுக்குச் சென்றார். அங்குள்ளோர் அவரைப் பூசை செய்ய விடாது தடுத்து, வேறு அந்தணர் ஒருவருக்குப் பூசை செய்யும் உரிமையை அளித்தனர். அவர் திருக்கோயிலை அடைந்து பூசைக்கான ஆயத்தங்களைச் செய்கையிற் பூசைப் பெட்டகத்திற் பெருமான் இல்லாது மறைந்தருளினார். அது குறித்து அவ் அந்தணர் திகைத்து வருந்தி நிற்கையில் “யாம் உமாபதிப் பெட்டகத்தில் இருக்கின்றோம்” என்ற அசரீரி எழுந்தது. அதனைக் கேட்ட அந்தணர்கள் தமது தவறை உணர்ந்து உமாபதி சிவத்தை அழைத்துப் பூசையைச் செய்தருள வேண்டினர். அவரும் அதனை ஏற்று முன்புபோல் வழிபாடு செய்யலானார்.

உமாபதி சிவாச்சாரியார் தமது தவயோகத்தாற் பல அற்புதங் களைச் செய்தார். கொற்றவன்குடித் திருமடத்துக்கு விறகு கொண்டு வந்து கொடுக்கும் திருத்தொண்டைச் செய்துவந்த **பெற்றான் சாம்பான்** என்ற தாழ்ந்த வகுப்பினருக்குச் சத்தியோநிருவாண

தீட்சையால் முத்தியளித்தார். அதுமட்டுமன்றி தாம் நாளும் வழிபட்டுவந்த சிவலிங்கப் பெருமானுக்கு அபிடேகம் செய்த திருமஞ்சன நீரால் வளர்ந்த முள்ளிச் செடி ஒன்றுக்கும் திருநோக்கால் வீடு பேறு அளித்தார். ஒருமுறை சிதம்பரத்தில் கொடியேற்றம் தடைப்பட்டது. உமாபதி சிவாச்சாரியார் இறைவனை வணங்கிக் 'கொடிக்கவி' என்னும் நூலை அருளிச் செய்து கொடியை ஏற்றினார்.

சைவசமயத்தின் தத்துவங்களை விளக்கும் நூல்கள் பதினான்கு. அவை சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபாஇருப.்.து, திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்ப.்.றொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, சங்கற்ப நிராகரணம், உண்மைநெறி விளக்கம் என்பன. இவற்றுள் சிவப்பிரகாசம் முதல் உண்மைநெறி விளக்கம்வரையுள்ள எட்டு நூல்களையும் ஆக்கிய பெருமை யுடையவர் உமாபதி சிவாச்சாரியார். இவ் எட்டு நூல்களும் சித்தாந்த அட்டகம் எனப்படும். இனி இவரது நூல்கள் கூறும் சித்தாந்தக் கருத்துகள் பற்றிச் சிறிது சிந்திப்போம்.

**1. சிவப்பிரகாசம்:** இந்நூல் மெய்கண்ட தேவர் அருளிச் செய்த சிவஞானபோதம் என்னும் நூலுக்குச் சார்பு நூலாக அமைந்துள்ளது. நூல் கூறும் பொருளைப் பின்வருமாறு முன்வைக்கின்றார் உமாபதி சிவாச்சாரியார்:

புறச்சமயத் தவர்க்கிருளாய் அகச்சமயத் தொளியாய்ப்
        புகலனவைக்கு அளவாகிப் பொற்பணிபோல் அபேதப்
பிறப்பிலதாய் இருள்வெளிபோற் பேதமுஞ்சொற் பொருள்போற்
        பேதாபே தமும்இன்றிப் பெருநூல் சொன்ன
அறத்திறனால் விளைவதாய் உடல்உயிர்க்கண் ணருக்கன்
        அறிவொளிபோற் பிறிவரும்அத் துவிதமாகும்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாஞ் சைவ
        சித்தாந்தத் திறன்இங்குத் தெரிக்க லுற்றாம்.

சிவப்பிரகாசம் சைவசித்தாந்தத்தின் இயல்பினைத் தெரிவிக்கும் நூல் என்று குறிப்பிடுகையில் சைவசித்தாந்தம் என்றால் என்ன என்பதையும் கூறிவிடுகின்றார் நூலாசிரியர். 'வேதாந்தத் தெளிவாஞ்

சைவசித்தாந்தம்' என்ற தொடர் சிந்திக்கத் தக்கது. அந்தம் என்பது முடிவை அல்லது எல்லையைக் குறிக்கும். வேதத்தின் அந்தமாக விளங்குவன உபநிடதங்கள். இதனால் இவை வேதசிரசு என்றும் அழைக்கப்படுகின்றன. அத்தகைய உபநிடதங்களின் கருத்துத் தெளிவே சைவசித்தாந்தம். வேதம் தாமரை மலர். உபநிடதங்கள் தாமரை மலரின் மகரந்தம். சைவசித்தாந்தம் அந்த மகரந்தத்திலிருந்து பெறப்பட்ட தேன்.

சித்தாந்தம் என்ற சொல்லுக்குள் இரு சொற்கள் புணர்ந்திருக் கின்றன. ஒன்று சித்தம். மற்றையது அந்தம். சித்தம் என்றால் முடிபு. அந்தம் என்பதும் முடிபு. அதாவது, சித்தாந்தம் என்றால் முடிந்த முடிபு என்று பொருள். சைவத்தின் முடிந்த முடிபு முத்திநிலை.

வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத்தின் திறத்தை விளக்க எழுந்த 'சிவப்பிரகாசம்' பொது இயல்பு, சிறப்பு இயல்பு என்னும் இரு பிரிவுகளைக் கொண்டது. பொது இயல்பில் ஐம்பதும் சிறப்பியல்பில் ஐம்பதுமாக நூறு விருத்தப்பாக்கள் உள்ளன. இவை சிவஞானபோதத்தின் சூத்திரக் கருத்துக்களை விளக்கு கின்றன. பொதுவியலில் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களின் இயல்புகளும் சிறப்பியல்பில் உயிர்களின் பலவிதமான இயல்புகள், அவை வினைகளை அனுபவிக்கும் முறை, இறைவன் குருவாய் வருதல், ஞானத்தின் பயன், ஐந்தெழுத்து அருள்நிலை, அணைந்தோர் தன்மை முதலியனவும் விளக்கப்பட்டுள்ளன.

**2. திருவருட்பயன்:** இது இறைவனது சக்தியாக விளங்கும் அருள் ஒளியை நூறு குறள் வெண்பாக்களால் விளக்குகின்றது. ஒவ்வொன்றும் பத்துக் குறள்களைக் கொண்ட பத்து அதிகாரங் களையுடைய இந்நூல் பதிமுது நிலை முதலாக அணைந்தோர் தன்மை வரை நுண்ணியதான பல சித்தாந்த உண்மைகளைத் தெளிவு படுத்துகின்றது.

**3. வினாவெண்பா:** இந்நூல் பதின்மூன்று வெண்பாக்களால் ஆனது. இவற்றுள் முதற் பன்னிரண்டு வெண்பாக்களும் உமாபதி சிவனார் தமது குருவாகிய மறைஞான சம்பந்தரிடம் கேட்கும் கேள்விகளாகவும் பதின்மூன்றாவது வெண்பா நூற்பயனைக்

கூறுவதாகவும் அமைந்துள்ளன. அருள்நந்தி சிவாச்சாரியாரின் இருபா இருப.்.து என்னும் நூலைப் போன்று வினாவெண்பாவும் சித்தாந்தக் கருத்துக்களிற் பலருக்கும் இருக்கக்கூடிய ஐயப்பாடுகளை வினாவாக எழுப்பி அவற்றுக்கான விடைகள் குறித்துச் சிந்திக்க வைக்கின்றது.

**4. போற்றிப் பஃறொடை:** ப.்.றொடை என்பது ஒருவகை வெண்பா யாப்பு. பல தொடை பெறுவதால் ப.்.றொடை எனப்பட்டது. (பல + தொடை = ப.்.றொடை.) ஆசிரியர் தமது குருவாகிய மறைஞான சம்பந்தரைச் சிவனாகவே எண்ணிப் போற்றுவதால் இந்நூல் போற்றிப் ப.்.றொடை எனப் பெயர் பெறலாயிற்று. இந்நூலில் சிவபெருமானின் பெருங்கருணையைப் போற்றுகின்றார் உமாபதி சிவாச்சாரியார். நூலின் இறுதி வரி 'என்கொண்டு போற்றி செய்கேன் யான்' என்று முடிவது இறைவனைப் போற்றுதலாகிய வழிபாடு முடிவில்லாதது என்பதனை உணர்த்துகின்றது.

**5. கொடிக்கவி:** இது நான்கு செய்யுள்களால் மட்டுமே ஆக்கப்பெற்ற சிறிய நூல். செய்யுள்களுள் ஒன்று கட்டளைக் கலித்துறை மற்றையவை வெண்பாக்கள். தில்லையில் கொடியேற்றத் திருவிழாவில் கொடி ஏறாது நிற்க, உமாபதி சிவாச்சாரியார் இதனைப் பாடிக் கொடியை ஏற்றியதால் இது கொடிக்கவி எனப்பட்டது.

**6. நெஞ்சுவிடு தூது:** இந்நூலில் ஆசிரியர் தமது ஞான குருவாகிய மறைஞான சம்பந்தரிடம் திருக்கொன்றை மாலையை வாங்கி வருமாறு தமது நெஞ்சைத் தூதாக அனுப்புகின்றார். தூது ஒருவகைச் சிற்றிலக்கியம். சைவசித்தாந்த நூல்களில் நெஞ்சுவிடுதூது ஒன்றே சிற்றிலக்கிய வகையில் அமைந்துள்ளது.

இந்நூலில் மறைஞான சம்பந்தர் சிவபெருமானாகவே போற்றப் படுகின்றார். உலகாயதம், சமணம், ஏகான்ம வாதம், பௌத்தம் முதலிய நெறிகளை நாடாது, இணையற்ற தலைவனாகிய சிவபெருமானிடம் சென்று பூங்கொன்றை மாலையைப் பெற்று வருமாறு தமது நெஞ்சுக்கு உரைக்கின்றார் ஆசிரியர்.

**7. உண்மை நெறி விளக்கம்:** இதுவும் கொடிக்கவி போன்று

அளவால் மிகவும் சிறியது. ஆறு விருத்தப் பாக்களால் மட்டுமே ஆனது. ஆன்மா பக்குவம் பெறுவதற்கு மேற்கொள்ள வேண்டிய பத்துச் செயன்முறைகள் தசகாரியம் எனப்படும். அவை தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்பன. இவற்றை உண்மை நெறி விளக்கம் தெளிவுபடுத்துகின்றது.

**8. சங்கற்ப நிராகரணம்:** சங்கற்பம் என்பது கொள்கை விளக்கம். நிராகரணம் என்பது கொள்கை மறுப்பு. காப்பு, பாயிரம் உட்பட இருபது அகவற் பாக்களைக் கொண்டுள்ளது. இந்நூலில் ஒன்பது சமயங்களின் கொள்கைகளை மறுத்துக் கூறிச் சைவ சித்தாந்தத்தை வலியுறுத்துகின்றார் உமாபதி சிவாச்சாரியார். மெய்கண்ட சாத்திரங்கள் எனப்படும் பதினான்கு சைவசித்தாந்த நூல்களில் இறுதி நூலாகச் சங்கற்ப நிராகரணம் வைத்துப் போற்றப்படுகின்றது.

# 7

# கச்சியப்பர் கனிந்த கந்தபுராணம்

கச்சியப்ப சிவாச்சாரியார் பிற்காலச் சோழர் காலத்திலே காஞ்சிபுரத்திலே வாழ்ந்த காளத்தியப்ப சிவாச்சாரியாரின் குமாரர். காஞ்சிபுரத்தில் உள்ள குமரகோட்டத்து அர்ச்சகராக இருந்தவர். குமரகோட்டம் என்பது குமரக்கடவுள் எழுந்தருளியுள்ள திருக் கோயில். முருகப் பெருமானைக் குலதெய்வமாக வழிபட்டு வந்த கச்சியப்ப சிவாச்சாரியார் வடமொழி, தமிழ்மொழி இரண்டிலும் புலமை மிகுந்தவர்; வேதாகமங்களில் வல்லவர்; சூதமுனிவரின் புராணங்களையும் கற்றுத் தெளிந்தவர்.

இவ்விதம் தமது அடியவரின் தகைமையை நன்கு வளர்த்த முருகப் பெருமான் ஒருநாள் அவரது கனவிலே தோன்றி, “அன்பனே நமது சரித்திரத்தைத் தமிழிலே பாடுவாயாக” என்று பணித்து ‘திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்’ என்று அடியும் எடுத்துக் கொடுத்து மறைந்தருளினார். முருகப் பெருமானின் ஆணையைத் தலை மேற்கொண்டு அன்று முதலாகக் கந்தபுராணத்தைப் பாடத் தொடங்கினார் கச்சியப்பர். ஒவ்வொரு நாளும் பாடிய பாடல்களைக் குமரப் பெருமானின் சந்நிதியில் இரவு பூசை முடிந்ததும் வைத்து விட்டுச் செல்வார். இவ்விதமாக முருகன் அருளால் கந்த புராணத்தைப் பாடி முடித்துக் குமரகோட்டத்திலே புலவர்கள் முன்னிலையில் அரங்கேற்றினார்.

## அரங்கேற்றம்

அந்தக் காலத்து வழக்கத்தின்படி நூலை இயற்றிய புலவன் தனது நூலைப் புலவர்கள் நிறைந்த சபையிலே அரங்கேற்றி அவர்களது அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

அங்கீகாரமும் எளிதிலே கிடைக்கக்கூடியதன்று. புலவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு நூலாசிரியர் தக்க விளக்கங்களை அளித்தல் வேண்டும்.

கச்சியப்ப சிவாச்சாரியாருக்கு நூல் அரங்கேற்றத்தின்போது நிகழ்ந்த சங்கடம் ஒன்று செவிவழியாக இன்றும் பேசப்பட்டு வருகின்றது. அவரது காப்புச் செய்யுளிலேயே புலவர் ஒருவர் பிழை கண்டு பிடித்தார். காப்புச் செய்யுள் என்பது நூலிற் குற்றங்கள் நேராவண்ணம் காத்தருளுமாறு இறைவனை வேண்டிப்பாடும் முதற்பாட்டு. எக்கருமத்தையும் முட்டின்றி முடிக்கத் துணையாக இருப்பவர் விநாயகராதலால் நூல்களைச் செய்வோரும் முதலிலே விநாயகரை வணங்கித் தொடங்குவது மரபு. கச்சியப்ப சிவாச்சாரியாரும் விநாயகரைப் போற்றி நூலைத் தொடங்குகின்றார்.

**திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்**<br>
**சகட சக்கரத் தாமரை நாயகன்**<br>
**அகட சக்கர வின்மணி யாவுறை**<br>
**விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.**

காஞ்சியில் உள்ள ஏகாம்பரநாதர் கோயிலிலே அமர்ந்தருளும் விநாயகருக்கு விகடசக்கர விநாயகர் என்று பெயர். அப் பெருமானுக்கு வணக்கம் செலுத்தும் இப்பாடலைப் பாடி அவைப் புலவருக்கு விளக்கம் அளிக்கின்றார் கச்சியப்பர்.

'திகட சக்கரம் - திகழ் தசக் கரம். விளங்குகின்ற பத்துக் கரங் களையும் ஐந்து அழகிய கருணை முகங்களையும் கொண்டு தாராக்கன், கமலாக்கன், வித்யுன்மாலி ஆகிய அசுரர்களின் முப்புரங்களையும் அழிப்பதற்குச் சிவபெருமான் அழகிய நெடுந்தேரிலே ஏறியபோது அதன் அச்சை ஒடித்தவரும், தாமரைக்கு நாயகன் என்று சொல்லப்படுகின்ற சூரியன் தமது இடுப்பிலே எடுப்பாக இருந்த நாகபாம்பின் தலையிலே மணியைப் போல் தோன்ற முன்பு விசுவரூபம் எடுத்தவரும், திருமாலின் சேனைத் தலைவரான விசுவசேனரை விகடக் கூத்து ஆடவைத்த காரணத்தினாலே விகட சக்கரன் என்னும் திருநாமத்தோடு காஞ்சி ஏகாம்பரநாதர் சந்நிதானத்திலே கோயில் கொண்டருளுபவருமாகிய விநாயகப் பெருமானது மெய்யடிகளை வணங்குவாம்' என்பது

இக்காப்புச் செய்யுளின் பொருள்.

இந்த விளக்கத்தைக் கேட்டு அவையிலே இருந்த புலவர் ஒருவர் எழுந்தார். திகழ் என்ற சொல்லும் தசக்கரம் என்ற சொல்லும் 'திகட சக்கரம்' என்று புணர இலக்கணத்தில் இடமில்லை என்று வாதிட்டார். இதனை எதிர்பாராத கச்சியப்பருக்குக் குழப்பம் ஏற்பட்டது. 'திகட சக்கரம்' என்று அடி எடுத்துக் கொடுத்தவரே முருகப் பெருமான்தான். அவரா இவ்விதம் சோதிக்கின்றார் என்று கவலை கொண்டு வணங்கினார். அப்பொழுது புலவர்கள் மத்தியிலிருந்து புதிய புலவர் ஒருவர் எழுந்து நின்று 'ழகரம், ளகரம் ஆகிய இரண்டின் முன்னும் தகரம் வந்தால் டகரமாகும்' என்று வீரசோழியம் என்ற இலக்கண நூலின் 18ஆவது சூத்திரத்தை எடுத்துக் காட்டி விளக்கம் அளித்து, எல்லோரும் காண மறைந்தருளினார். முருகப் பெருமானே அவ்விதம் புலவர் வேடந் தாங்கித் தம்மைக் காத்தருளினார் என்று கச்சியப்ப சிவாச்சாரியார் எழுந்து புலவர் மறைந்த திசைநோக்கி வணங்கினார். புலவராக வந்தவர் மறைந்தருளிய அற்புதத்தைக் கண்ட ஏனைய புலவர்களும் கச்சியப்ப சிவாச்சாரியார் தெய்வப்புலவரே எனத் தெளிந்து, அவரை வணங்கியும் அவர் அருளிச் செய்த கந்த புராணத்தைத் தொட்டுக் கும்பிட்டும் தொடர்ந்து நூல் முழுவதையும் கேட்டு இன்புற்றனர் என்னும் செவிவழி வரலாறு இன்றும் கந்த புராணத்தின் தெய்வீகத் தன்மையை வளர்த்துக் கொண்டிருக் கின்றது.

முருகன் புலவர் அவையேறிக் கந்தபுராணத்தின் காப்புப் பாடலுக்கு இலக்கணம் சொன்ன கதையை முருக பக்தராகிய அருணகிரிநாதர்

> முற்பட்ட இலக்கண நூலிடை
> தப்புற்ற கவிக்கெனவே அகவ
> முற்பட்டு புதுத்துறை மாறிய புலவோனே

என்று பாடிப் போற்றுகின்றார்.

## முதல் நூல்

கச்சியப்ப சிவாச்சாரியாரது கந்தபுராணத்துக்கு சூதமுனிவரின்

ஸ்கந்தபுராணம் முதல் நூலாக அமைகின்றது. சூதமுனிவர் உலகம் உய்தற்பொருட்டுச் செய்தருளிய புராணங்கள் பதினெட்டாகும். அவற்றுட் சிவபுராணங்கள் பத்து. வேதங்களும் ஆகமங்களும் போற்றும் சிவனைத் தமது புராணங்கள் மூலம் உலகறியச் செய்து சைவத்தை வளர்த்த முனிபுங்கவர் சூதர். சிவபிரானே பரம்பொருள் என்றும் பரஞ்சோதி என்றும் மங்கலங்களை அளிப்பவர் என்றும் சகல மங்கலங்களையுமுடைய அம்பாளுடன் கூடியிருப்பவர் என்றும் தூய வடிவினர் என்றும் அழிவற்றவர் என்றும் பலவாறு தமது புராணங்களிலே போற்றுகின்றார்.

சூதமுனிவர் இயற்றிய பத்துச் சிவபுராணங்களுள்ளும் ஸ்கந்த புராணமே மிகவும் பெரியதாகும். இது ஆறு பெரும் பிரிவுகளில் ஒரு இலட்சம் சுலோகங்களைக் கொண்டது. பெரும் பிரிவு ஒவ்வொன்றும் சங்கிதை எனப்படும். ஒவ்வொரு சங்கிதையும் கண்டங்கள் எனப்படும் உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது.

கச்சியப்பர் தமது நூலுக்கு வேண்டிய பொருளை ஐந்தாவது சங்கிதையிலிருந்து மட்டுமே தெரிவு செய்துள்ளார். ஐந்தாவது சங்கிதை சங்கர சங்கிதை எனப்படும். இதில் 30,000 சுலோகங்களும் பன்னிரண்டு கண்டங்களும் உள்ளன. இப்பன்னிரண்டு கண்டங் களுள் சிவரகசியம் என்பது ஒன்று. இது 13,000 சுலோகங்களையும் ஏழு காண்டங்களையும் கொண்டது. இக்காண்டங்கள் உற்பத்திக் காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தக்க காண்டம், உபதேச காண்டம் என்பனவாகும். இவற்றுள் முதல் ஆறுகாண்டங்களையே கச்சியப்ப சிவாச்சாரியார் கருணைத் தமிழ் பொழியும் கந்தபுராணமாக 10345 செய்யுள்களிற் பாடியிருக்கின்றார். ஏழாவது காண்டமாகிய உபதேச காண்டத்தை இவரது மாணாக்கராகிய கோனேரியப்ப கவிராயர், ஞானவரோதயர் ஆகிய இருவரும் தனித்தனியாகப் பாடியுள்ளனர்.

## கந்தபுராணச் சிறப்பு

கந்தபுராணத்தை அரங்கேற்றுவதற்கு முருகப் பெருமானே துணையாக இருந்திருக்கின்றான் என்றால் அதன் பெருமையை வேறொருவர் பேச வேண்டியதில்லை. இருப்பினும் அதனை ஆழ்ந்து படித்து முருகனாம் சிவக்கனியைச் சுவைத்த ஒருசிலரின்

அனுபவங்களை நாமும் அறிந்து இன்புறுவது நல்லது. கந்தபுராணச் சிறப்புப் பாயிரம் அதன் பெருமையைப் பின்வருமாறு கூறுகின்றது:

உச்சித மாஞ்சிவ வேதியன்
காளத்தி ஓங்குமைந்தன்
கச்சியப் பன்செய்த கந்தபு
ராணக் கலைக்கடலில்
மெச்சிய கல்வி மதியும்வெண்
டாமரை மேவுமின்னும்
இச்செவி நாவினுக் கின்பமாம்
அமுதும் எழுந்தனவே.

'தேவர்களும் அசுரர்களும் திருப்பாற் கடலைக் கடைந்தபோது திருமகள் தோன்றினாள்; சந்திரன் பிறந்தான்; அமுதமும் திரண்டது. அதுபோல மேன்மைகொள் காளத்தியப்ப சிவவேதியரின் பெருமை மிகுந்த மைந்தன் கச்சியப்பன் செய்த கந்தபுராணக் கலைக் கடலைக் கடைந்து கற்கின்றபோது கல்வியறிவோடு கூடிய கூர்மதியாகிய சந்திரனும் வெள்ளைத் தாமரையில் வீற்றிருக்கும் கலைவாணியும் செவிக்கும் நாவுக்கும் இன்பம் பயக்கும் அமுதும் எழுந்தனவே' என்பது இச்சிறப்புப் பாயிரத்தின் பொருள்.

கந்தபுராணத்தைப் படித்தால் புத்தி விரிவு பெறும்; சித்தம் சிறக்கும்; கலைஞானம் பிறக்கும். அவை மட்டுமல்ல; அமுதமும் தோன்றும். தேவர்கள் திருப்பாற்கடல் அமுதையுண்டு சாகாவரம் பெற்றனர். கந்தபுராண அமுதத்தை உண்டால் பிறவாவரம் பெறலாம். மற்று மொரு சிறப்புரையையும் இங்கு குறிப்பிடல் வேண்டும். இதனை வழங்கியிருப்பவர் தவச்செல்வர் சம்பந்த சரணாலயத்தம்பிரான் சுவாமிகளாவர். இவர் திருத்தருமை ஆதீனத்திலே முனிவராய்த் திகழ்ந்தவர். கந்தபுராணத்திலே தோய்ந்து கந்தபுராணச் சுருக்கம் என்ற நூலை இயற்றியவர்.

ஆன்ற புலமையும் பெருமையும் மிகுந்த சுவாமிகள் கச்சியப்பரை ஒரு முகிலுக்கு ஒப்பிடுகின்றார். அந்த முகில் சூதமுனிவர் இயற்றிய ஸ்காந்த புராணம் என்ற புகழ்க் கடலிற் படிந்தது என்கிறார். படிந்து அக்கடலிலே பொருந்தியிருந்த கந்தப்பெருமான் என்னும்

மேன்மைமிகு நீரைக் குடித்து இவ்வுலகம் உய்யும் பொருட்டு மலர்ச்சோலைகள் நிறைந்த காஞ்சிப்பதியின் பிறவித் துயராகிய வெப்பம் தணிவதற்கு கடல் அமுதினை ஒத்த செந்தமிழ்ப் பாக்களாலான கந்தபுராணம் என்னும் அன்பு மழையாகப் பொழிந்தது. அத்தகைய அருட்கொண்டலாகிய கச்சியப்ப சிவாச் சாரியாரின் பாதங்கள் இரண்டிலும் எமது உச்சி பொருந்தும்படியாக வீழ்ந்து வணங்குவாம் என்று வணக்கம் செலுத்துகின்றார். அற்புதமான கற்பனை வளம் நிறைந்த தம்பிரான் சுவாமிகளின் பாடல் இது:

போதமுறு சூதமுனி புகன்ற காந்தப்
புகழ்க் கடலிற் படிந்ததன்கட் பொருளதான
மேதகுவண் புனலருந்தி வைய முய்ய
வெய்ய துயர்ப் பிறவியெனும் வெம்மைதீரத்
தாதவிழ்பூம் பொழிற்காஞ்சிக் குவட்டிலேறிச்
சலதியமு தினைநிகர்செந் தமிழ தான
காதன்மழை பொழிந்தவருட் கொண்ட லான
கச்சியப்பன் இருபாதம் உச்சி வைப்பாம்.

இத்தகைய சிறப்பு மிகுந்த கந்தபுராணம் என்னும் அமுதத்தில் நாமும் தோய்ந்து உய்வோமாக!

## சைவசித்தாந்த நூல்

சைவசமயத்தின் கண்களாகப் போற்றப்படும் புராணங்கள் மூன்று. அவை பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம் என்பன.

கந்தபுராணம் சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து உதித்த ஆறுமுகப் பெருமானின் வரலாற்றைக் கூறுகின்றது. கச்சியப்பர் ஆறுமுகப் பெருமானையும் சிவபெருமானையும் ஒருவராகவே காண்கிறார். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் விளங்கும் பரம்பொருளே முருகனாக வந்து உதித்தான் என்று திருவவதாரப் படலத்திலே பாடுகின்றார்.

அருவமும் உருவும் ஆகி
அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்

பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனி ஆகக்
கருணைகூர் முகங்கள் ஆறும்
கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு
உதித்தனன் உலகம் உய்ய.

முருகப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய உறுதிப்பொருள்களைக் கூறும் காப்பியம் கந்தபுராணம். பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மையை விளக்கும் சைவசித்தாந்த நூலாக இது விளங்குகின்றது. 'முருகவேள் பரம்பொருளாகவும், வேல் ஞான மாகவும் மயில் விந்துவாகவும் சேவல் நாதமாகவும், வள்ளிப்பிராட்டி இச்சா சக்தியாகவும், தெய்வயானை கிரியாசக்தியாகவும், சூரன், சிங்கன் தாரகன் மும்மலங்களாகவும், அமைய விளங்குவது கந்தபுராண தத்துவம். ஆன்மாக்களைத் துன்புறுத்தும் ஆணவ மலத்தின் வலியைக் கெடுத்து ஆன்மாக்களுக்கு அருள்புரிவதே கந்தபுராண வரலாறு' என்று கந்தபுராண தத்துவத்தை விளக்குகின்றார் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். (பத்துச் சொற்பொழிவுகள், 1998.)

## பத்திச் சுவை

பத்திச் சுவை ஆறாகப் பெருக்கெடுத்தோடும் காப்பியம் கந்தபுராணம். முருகப் பெருமான் போருக்கு எழும் காட்சியை எத்தகு பத்தியோடு கச்சியப்பர் பாடுகின்றார் என்று பாருங்கள்:

மூவர்கள் முதல்வன் வந்தான்
முக்கணவன் குமரன் வந்தான்
மேவலர் மடங்கல் வந்தான்
வேற்படை வீரன் வந்தான்
ஏவரும் தெரிதல் தேற்றா(து)
இருந்திடும் ஒருவன் வந்தான்
தேவர்கள் தேவன் வந்தான்
என்றன சின்ன மெல்லாம்.

இறைவன் மீது பத்தி ஒருவருக்கு எளிதிலே வந்துவிடாது. பத்தி செய்வதற்கும் பரமனின் அருள் வேண்டும். 'அவன் அருளாலே அவன்தாள் வணங்கி' என்கின்றார் மணிவாசகப் பெருமான். அவன் அருளைப் பெறுவதற்கு அவனைப் பற்றி முதலிலே நன்கு அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

சூரன் முருகப் பெருமானை அறியாதவன்; அவரது ஆற்றலை விளங்காதவன். அவனது ஆணவம் அவ்வளவுக்கு இருண்டு திரண்டிருந்தது. ஆறுமுகப் பெருமான் தமது பேருருவத்தைச் சூரனுக்குக் காட்டி அவனுக்குச் சிறிதே நல்லுணர்வை அருளிச் செய்கின்றார். அந்த அருளினாலே சூரனுக்குப் பத்தி பிறக்கின்றது.

ஆயிரங் கோடி காமர்
அழகெலாம் திரண்டொன் றாகி
மேயின எனினுஞ் செவ்வேள்
விமலமாம் சரணந் தன்னில்
தூயநல் லெழிலுக் காற்றா
தென்றிடின் இனைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம்
உவமையார் வகுக்க வல்லார்.

இங்கே பகைவனே பத்தி செலுத்துகின்ற காட்சியைப் பார்க்கின்றோம். கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களும் கந்தபுராணத்தைப் படித்தால் ஆத்திகராவார் என்பதற்கு இந்த ஒரு காட்சியே சாட்சியாகும்.

## கந்தபுராண கலாச்சாரம்

பத்திச்சுவை சொட்டும் கந்தபுராணத்தின் அருமையையும் பெருமையையும் நன்குணர்ந்து அதனைச் சைவத்தமிழ் மக்கள் படித்துய்ய வழிவகை செய்தவர் யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர் அவர்கள். 1869ம் ஆண்டு நாவலர் பெருமான் கந்தபுராணத்தைப் பரிசோதித்துப் பதிப்பித்தார். அத்தோடு நின்றுவிடாது அதனைக் கோயில்களிலும் திருமடங்களிலும் படனம் செய்யும் வண்ணம் மக்களை ஊக்குவித்தார். இத்தொண்டிற் பல இடங்களில், முக்கியமாகத் தமிழ் ஈழத்தில் அவருக்குப் பெருவெற்றியும்

கிடைத்தது. தமிழ் ஈழத்தில் கந்தபுராண கலாச்சார வாழ்க்கை முறை ஒன்றுக்கு வழிவகுத்த பெருமை நாவலர் பெருமானுக்கே யுரியது. கந்தப் பெருமான் குறித்து விரதம் இருத்தல், விழாக்கள் எடுத்தல், காவடிக் கலை பழகுதல், காவடி எடுத்தல், வள்ளி திருமணம் நாடகம் நடித்தல், கந்தபுராணம் படித்தல், கந்தபுராணச் சொற்பெருக்கு ஆற்றுதல் போன்றவை இந்த வாழ்க்கை முறையின் கூறுகளாயின. நாவலர் பெருமானுக்குப் பின் அவரது மாணாக்கர் இக் கலாச்சாரத்தை வளர்த்துச் செல்லும் பணியில் ஈடுபட்டனர். கடந்த நூற்றாண்டில் பண்டிதமணி கலாநிதி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் நாவலரின் அடிச்சுவட்டில் கந்தபுராணத்தைப் பற்றி நிறையவே எழுதியும் பேசியும் புராண படனங்கள் நிகழ்த்தியும் முருக வழிபாட்டு மூலம் சைவத்தை வளர்க்க உதவினார்.

யாமும் கலியுகவரதன் கந்தன் கதையை, காஞ்சிவளர் கச்சியப்பக் கற்பகதாரு படைத்த காப்பியத்தை, ‘வாதமுறு புலவர் குழாம் மகிழ்ந்து’ போற்றிய கந்தபுராணத்தைக் காதலுடன் ஓதி, இந்திரராகிப் பார்மேல் இன்பமுற் றிருப்போமாக!

**இந்திர ராகிப் பார்மேல் இன்பமுற் றினிது மேவிச்**
**சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதி யதனிற் சேர்வர்**
**அந்தமில் அவுணர் தங்கள் அடல்கெட முனிந்த செவ்வேற்**
**கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தோது வோரே.**

- கந்தப்பராணம்: பாயிரம்

# 8

# சேக்கிழார் பெருமானின் திருத்தொண்டர் புராணம்

சைவத் திருமுறையிலே பன்னிரண்டாவது நூலாக விளங்குவது பெரியபுராணம் எனப் போற்றப்படும் திருத்தொண்டர் புராணம். திருத்தொண்டர் புராணத்தைப் பாடியருளியவர் சேக்கிழார் பெருமான். இவர் சென்னை பட்டினத்துக்கு அணித்தாகவுள்ள குன்றத்தூரிற் பிறந்தவர். சோழப் பேரரசன் 2ஆம் குலோத்துங் கனுக்குத் தலைமை அமைச்சராக இருந்து பணியாற்றிய பெருமையுடையவர். இவரது காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு.

திருத்தொண்டர் புராணத்தைச் சேக்கிழார் பெருமான் பாடுவதற்கு ஆதாரமாக இருந்த முதல் நூல் சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய திருத்தொண்டத்தொகை. இதனைச் சற்று விரிவாக்கி நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி என்ற நூலை ஆக்கியருளினார். இது சேக்கிழார் பெருமானுக்கு வழிநூல் ஆயிற்று.

## வரலாற்று ஆசிரியர்

சுந்தரமூர்த்தி நாயனார் தொண்டர்களை முதன்முதலாகப் பட்டியற்படுத்திய பெருமைக்குரியவர். அவர் பதினொரு பாடல் களில் 63 தொண்டர்களின் பெயர்களையும் இரண்டொரு அடைமொழிகளால் அவர்களது பண்புகளையும் மட்டுமே கூறிச் சென்றார். இத்தகவல்களைச் சற்று விரித்துத் தொண்டர்களின் ஊர், குலம் பற்றிய விவரங்களுடன் 89 பாடல்களில் திருத்தொண்டர் திருவந்தாதியைப் பாடினார் நம்பியாண்டார்நம்பி. இவர்கள் இருவரும்

பதிவு செய்த தகவல்களை வைத்துக் கொண்டு மேலும் விவரங்களைத் திரட்டி அவற்றை ஆராய்ந்து, உண்மைகளைக் கண்டறிந்து தொண்டர்களின் வரலாற்றை விரித்து உரைத்த பெருந்தொண்டைச் செய்திருக்கின்றார் சேக்கிழார் பெருமான். அவர் முதல் அமைச்சராக இருந்த காரணத்தினால் வேண்டிய தகவல்களைத் திரட்டவும் அவற்றின் சரிபிழைகளை ஆராயவும் அவருக்கு வாய்ப்பும் வசதிகளும் நிறையவே இருந்தன. வாய்ப்பும் வசதிகளும் இருந்தாலும் கால இடைவெளி ஒன்று அவருக்குத் தடையாக இருந்தது என்பதனைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். சேக்கிழார் பெருமான் வாழ்ந்த காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு. அப்பர் பெருமான் வாழ்ந்த காலம் கி.பி. 6ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி. அவருக்கு முற்பட்டவர்கள் காரைக்கால் அம்மையாரும் கண்ணப்ப நாயனாரும். காரைக்கால் அம்மையார் காலம் மூன்றாம் நூற்றாண்டளவினதென்பர். எனவே ஏறத்தாழ 800 ஆண்டு காலப்பரப்பில் அவ்வப்போது வாழ்ந்த அடியார்களின் வரலாற்றை அறிந்து கொள்வதென்பது எளிதான செயலன்று. எனினும் தமது பதவி, அறிவாற்றல், ஆளணி ஆகிய வற்றைக் கொண்டு முடிந்த அளவுக்கு எவ்வளவு தகவல்களைத் திரட்ட முடியுமோ அவ்வளவையும் திரட்டினார். திரட்டியபின் அவற்றை ஆராய்ந்து தமக்குச் சரியெனப்பட்டதை மட்டும எடுத்துக் கொண்டார். அவ்வகையில் ஒரு சிறந்த ஆய்வாளராக விளங்குகின்றார் சேக்கிழார் பெருமான்.

தெரியாதவற்றைச் சொல்லக்கூடாது, பிழையானவற்றைப் பதிவுசெய்யக்கூடாது என்ற கொள்கையில் அவரது நேர்மைத் திறத்தையும் நாம் காண்கிறோம். நாம் வாழும் காலத்திலேயே எமது நாட்டில் சிங்கள வரலாற்று ஆசிரியர் தமிழர் வரலாற்றை மூடிமறைக்க முயல்வதைப் பார்க்கிறோம். சில பொதுவுடைமை நாடுகளிலும் வரலாறு திரிக்கப்படுவதை அந்நாட்டு அறிஞர்களே சுட்டிக் காட்டியுள்ளனர். சேக்கிழார் பெருமான் பாடவருவது திருத்தொண்டர்களை. சிவனடியார்களைப் பற்றிச் சிவனடியார் எழுதுகையில் பிழையான தகவல்கள் இடம்பெறமுடியுமா என்ன? அறுபத்து மூன்று பெரியார்களின் வரலாற்றை ஆராய்ந்து அறிந்து எழுதிய சேக்கிழார் பெருமான் தமிழர் கண்ட முதல் வரலாற்று ஆசிரியராக விளங்குகின்றார்.

## சைவக் காப்பியம்

இரண்டாவதாக, சைவசமய தத்துவங்களை விரித்து உரைக்கும் ஒரு காவியத்தை முதன்முதலாகப் பாடிய பெருமையும் சேக்கிழாருக்கே உரியதாகின்றது. சிவதொண்டர் ஒருவரை - சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் கதாநாயகராக வைத்துப் பாடப்பெற்ற பத்திச் சுவைக் காப்பியம் திருத்தொண்டர் புராணம். காப்பியம் என்று சொல்கின்றபொழுது, முன்னுக்குச் சொன்ன வரலாறுபற்றிய கருத்துடன் இது முரண்படுகின்றதே என்று எண்ணத் தோன்றும்.

வரலாறு என்பது உண்மைச் சம்பவங்களோடு கூடியது. காப்பியம் கற்பனையோடு கூடியது. இவை இரண்டும் எங்ஙனம் இணைந்து போகும் என்று கேட்பவர்களுக்கு, கிடைத்த வரலாற்றுக் குறிப்புகளில் இருக்கக்கூடிய இடைவெளிகளைக் கற்பனையால் நிரப்பியிருக்கின்றார் சேக்கிழார் என்ற பதிலைச் சொல்லவில்லை. தெரியாத வரலாற்றுக் கட்டங்களைக் கற்பனையால் சிவனடியே சிந்திக்கும் சிவஞானி ஒருவர் வருவித்திருக்கமாட்டார்.

வரலாற்றைச் சுவைபடச் சொல்வதற்கு அவர் கையாண்ட உத்திமுறைகளிலேயே அவரது கற்பனைத்திறம் பயன்படுத்தப் பட்டிருக்கின்றது. உதாரணமாக, தொண்டை நாட்டில் வாழ்ந்த திருக்குறிப்புத் தொண்டநாயனார் வரலாற்றைப் பாடுகையில் மருதநிலத்தை இவ்விதம் வருணிப்பதைக் காண்கிறோம்:

> பிள்ளை தைவரப் பெருகுபால் சொரிமுலைத் தாய்போல்
> மள்ளர் வேனிலின் மணல்திடர் பிசைந்துகை வருட
> வெள்ள நீர்இரு மருங்குகால் வழிமிதந்து ஏறிப்
> பள்ள நீள்வயல் பருமடை உடைப்பது பாலி.

‘பிள்ளைகள் தமது பிஞ்சுக் கைகளால் தடவிய அளவிலேயே பெருகிப் பாலைச் சொரிகின்ற முலைகளையுடைய தாயைப்போல உழவர்கள் வேனிற் காலத்திலே பாலி ஆற்றின் மணலைத் தோண்டினால் நீர் பெருகி வாய்க்கால்களின் வழியோடிப் பக்கத்துத் தாழ்நிலங்களில் உள்ள வயல்களை எல்லாம் நிரப்பி அவற்றின் வரம்புகளை உடைக்கும்’ என்கின்றார் சேக்கிழார்.

இது கவிநயக் கற்பனை என்றாலும் பாலி ஆற்று நீர் வயல்களில்

தேங்குவதும் வரம்புகளை உடைப்பதும் நடந்திருக்கக்கூடிய இயற்கை நிகழ்ச்சியல்ல என்று யாராவது சொல்வார்களா? கற்பனைகளும் வருணனைகளும் காப்பியத்துக்கு இன்றியமை யாதன. கம்பரது கற்பனைகளோடு ஒப்பிடுகையில் சேக்கிழாரின் கற்பனைகள் மிக இயல்பானவையாகவும் அளவானவையாகவும் இருப்பதைக் கண்டு இன்புறலாம்.

## தொண்டர் பெருமை

சைவ சமயத்தை ஒரு தொண்டுச் சமயமாக, தொண்டர் நெறியாக நிலைநிறுத்துகின்றார் சேக்கிழார் பெருமான். தொண்டர்களின் வாழ்க்கை சாதாரண வாழ்க்கையன்று. பத்தியும் பரவசமும் வீரமும் தீரமும் அற்புதமும் நிறைந்த தொண்டு வாழ்க்கை.

அவர்கள் அகிலகாரணர் தாள்பணிந்தவர்கள்; அவரால் ஆட்கொள்ளப்பட்டவர்கள்; அன்பினால் மெய்தழைத்தல், விதிர்ப் புறுதல் போன்ற பரவச வாழ்க்கை வாழ்ந்தவர்கள்; கைத்திருத் தொண்டு செய்வதைக் கடமையாகக் கொண்டவர்கள்; பூசுநீறுபோல் உள்ளும் புனிதர்கள்; தேசினால் எத்திசையும் விளக்கியவர்கள்; பேசுதற்கு முடியாத பெருமை மிகுந்தவர்கள்; பூதம் ஐந்தும் நிலையில் மாறுபட்டாலும் மாதோர் பாகனை மறவாது வணங்கும் காதல் நெறியில் கலங்காது நின்றவர்கள்; குற்றமில்லாத குணக்குன்றுகளாக விளங்கியவர்கள்.

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்

ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணியலது ஒன்றிலார்
ஈர அன்பினர் யாதும் குறை விலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ

என்றெல்லாம் தொண்டர்களின் இயல்புகளையும் பெருமைகளையும் திருக்கூட்டச் சிறப்பிலே எடுத்துக் காட்டுகின்றார் சேக்கிழார்

பெருமான்.

கூடும் அன்பு, ஈர அன்பு என்னும் சொற்றொடர்களைக் கவனித்தல் வேண்டும். பெரிய புராணம் ஓர் அன்புக் கடல் என்பார் திரு.வி. கலியாணசுந்தரனார். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் 'பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ' என்று சேக்கிழாரைப் போற்றுகின்றார். இந்தச் சுவையை மிக அற்புதமாகவே சொட்டுகிறது இப்பாடல்:

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்
திருந்து சாத்துவிகமே ஆக
இந்துவாழ் கடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெரும் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

நம்பியாரூரர் இறைவனை வணங்கும் காட்சி இது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

## முப்பொருள் உண்மை

மாறிலா மகிழ்ச்சி - 'இறவாத இன்ப அன்பு'. இன்ப அன்பு வாழ்க்கைக்கு வழிகாட்டுவதே சேக்கிழார் பெருமானின் நோக்கம். அதனால் இன்ப அன்பு வாழ்க்கைக்கு ஆதாரமான கடவுள், உயிர், உலகு ஆகிய மூன்று பற்றியும் காப்பியத்திலே பேசுகின்றார். இவை முறையே பதி, பசு, பாசம் எனப்படும். இவை சைவசித்தாந்தத்தின் முப்பொருள் உண்மைகள்.

பசு பதிமீது கொள்ளும் உயர்ந்த அன்பு பத்தி எனப்படும். இது பிற தரும, ஞான, யோகங்களிலும் உயர்ந்தது. பத்தி 11 வழிகளில் வெளிப்படுகிறது என்று 'நாரத பத்தி சூத்திரம்' கூறுகின்றது. அவை பின்வருமாறு:

1. இறைவனின் கல்யாண குணங்களைப் புகழ்தல்

2. அவனுடைய முருகியல் அழகில் ஈடுபடுதல்
3. அவனை வழிபடுவதில் இன்பங் காணல்
4. அவனை ஓயாது நினைத்தல்
5. அவனுக்குத் தொண்டு செய்தல்
6. அவனை நண்பனாக நினைத்தல்
7. அவனைத் தந்தையாக நினைத்தல்
8. அவனைக் கணவனாக நினைத்தல்
9. அவனிடம் தன்னை முற்றாகத் தியாகம் செய்துவிடல்
10. அவனிடமே முழுவதுமாக அமிழ்ந்துவிடல்
11. அவனைப் பிரிய நேர்ந்தால் அதற்காகப் பெரிதும் வருந்துதல்

இக்கருத்துக்கள் திருத்தொண்டர்களின் பத்திநிலைகளோடு நன்கு ஒத்திருப்பதைக் காணலாம். சைவ சமயம் அன்பு நெறி என்பதனை மிக அழுத்தமாகவே வலியுறுத்துகின்றார் சேக்கிழார் பெருமான்.

## மேன்மைகொள் சைவ நீதி

அன்பை இறைவனிடம் மட்டும் செலுத்தினால் போதாது. எல்லா உயிர்களிடத்தும் செலுத்த வேண்டும். இது மேன்மை கொள் சைவநீதியின் கட்டளைகளில் ஒன்று. உயிர்களிடத்தில் அன்பு வைத்திருந்தால் அவைகளைக் கொல்ல அந்த அன்பு விடாது. எனவே கொல்லாமை சைவநீதியின் அடுத்த கட்டளையாகின்றது. இந்த நீதியைக் காப்பியத்தின் ஆரம்பத்திலேயே திருவாரூர்த் திருநகரச் சிறப்பில் நிலைநாட்டி விடுகின்றார் சேக்கிழார் பெருமான்.

மனுநீதிச் சோழன் மகன் - ஒரே மகன் அரச வீதியில் தேரின் மீது செல்கையில் பசுக்கன்று ஒன்றைத் தெரியாமல் கொன்று விடுகிறான். கன்றினை இழந்த பசு தாங்கொணாத் துயரத்துடன் ஆராய்ச்சி மணியைக் கொம்பினால் அசைத்து அடிக்கிறது, நீதிகேட்டு.

மனுநீதிச் சோழன் நடந்ததை விசாரித்து அறிந்து அமைச்சர் ஒருவரை அழைத்து பசுக்கன்றைக் கொன்ற தன் மகனை அதே வீதியிலே தேர்க்காலினில் வைத்துக் கொல்லும்படி கட்டளை யிடுகிறான். அமைச்சர் அக்கட்டளையை நிறைவேற்ற மனமில்லாது தனது உயிரைப் போக்கிக் கொள்கிறார். அதுகேட்ட சோழன்

தனக்கு ஒரேயொரு மகன்தான் உள்ளான் என்பதைக்கூட எண்ணிப்பாராது, தன் மகன்மீது தானே தேரைச் செலுத்திக் கொன்றான். சேக்கிழார் பாடுகின்றார்:

ஒருமைந்தன் தன்குலத்துக்கு
உள்ளான் என்பதும் உணரான்
தருமம் தன்வழிச் செய்கை
கடன் என்று தன்மைந்தன்
மருமம் தன்தேர் ஆழி
உற ஊர்ந்தான் மனு வேந்தன்
அருமந்த அரசாட்சி
அரிதோ மற்று எளிதோதான்.

இத்தகைய நீதியோடு கூடிய ஆட்சியை நடத்துவது என்பது எளிதன்று. சிவதருமத்தில் நிற்கும் சிவசிந்தனையாளருக்குத்தான் அது கைகூடும்.

இன்று உலகத்திலே இலங்கை உட்பட எத்தனையோ நாடுகளில் அரச கொடுமைகள் நடந்து வருவதைப் பார்க்கின்றோம். அவர்களுக்கெல்லாம் இந்த மனுநீதிச் சோழன் வரலாறு தெரியுமோ என்னவோ? தெரிந்த தமிழ்நாட்டில்தான் என்ன நடக்கிறது?

உண்மையில் உலகம் முழுவதிலும் நீதிபரிபாலனம் நடக்க வேண்டும் என்பதே சேக்கிழாரின் நோக்கம் - பரந்த நோக்கம். அதனாலேயே அவர் 'உலகெலாம்' என்று தமது காப்பியத்தைத் தொடங்கி 'உலகெலாம்' என்று நிறைவு செய்கின்றார். சைவர்கள், தமிழர்கள் மட்டுமல்லாது உலகம் முழுவதும் தழைத்தோங்க வேண்டும் என்பது அவரது சிந்தனை. நீதி வழுவா நெறிமுறையில் நின்று நிலைத்தோங்க வேண்டும் என்பது அவரது பெரு விருப்பம்.

## சமூகப் புரட்சி

மனுதருமம் கூறும் எல்லாவற்றையும் சேக்கிழார் ஏற்றுக் கொள்ளவில்லை. உதாரணம் சாதி வேறுபாடு. ஆதித்தமிழர் மத்தியிற் சாதிப் பிரிவுகள் இருக்கவில்லை. சங்க இலக்கியங்கள் இதுபற்றிப் பெரிதாக ஒன்றும் பேசவில்லை. ஆரியர் வருகையுடன்

தென்னாட்டுக்கு மனுதருமமும் வந்து சேர்ந்தது. மனுதருமம் என்ற பெயரில் சாதி வேற்றுமைகள் தமிழ்நாட்டிலும் பரவத் தொடங்கின.

நாயன்மார்கள் காலத்தில் சாதிவேறுபாடுகள் தமிழ்நாட்டில் இருந்தன. குலப்பெயர் கொண்டு மனிதரைக் குறிக்கும் வழக்கமும் இருந்தது. அந்த வழக்கத்தையொட்டி நாயன்மார்களின் குலப் பெயரைச் சேக்கிழார் குறிப்பிடுவதற்குக் காரணம் எக்குலத்த வராயினும் இறைவன் முன்னிலையில் எல்லோரும் சமம் என்பதனை உணர்த்துவதற்கேயாகும். அறுபத்துமூன்று நாயன்மார்களும் வெவ்வேறு குலத்தவர்கள். எனினும் இறைவன் குலம் கோத்திரம் பார்த்து அவர்களை ஆட்கொள்ளவில்லை. அவர்களின் உள்ளப் பக்குவத்தை நோக்கி, அவர்களின் அன்பின் பொருட்டு ஆட்கொண்டான். இதனை இன்னொரு வகையில் சொன்னால் - சைவசமயத்தில் சாதிகள் இல்லை. சாதி வேறுபாடுகளுக்கு சைவ நீதியில் இடம் இல்லை என்பதனைப் பெரியபுராணத்தின் வாயிலாக எமக்குப் படிப்பிக்கின்றார் சேக்கிழார் பெருமான். இது அவர் தமது பக்குவ உள்ளத்தாலும் நாயன்மார்கள் காட்டிய நடத்தைகளாலும் உணர்ந்து கொண்ட நீதி.

திருஞானசம்பந்தர் பிறப்பால் அந்தணர். அவர் சாதிபேதம் பார்ப்பதில்லை. பிறப்பால் அக்காலத்தில் தீண்டத் தகாதவர் என்று கருதப்பட்ட திருநீலகண்ட யாழ்ப்பாணர் மனைவியார் மதங்க சூளாமணியாருடன் சீர்காழியில் எழுந்தருளியிருந்த திருஞானசம்பந்தரைக் காணச் செல்கிறார். பிள்ளையார் மிகவும் மகிழ்ச்சியடைந்து "ஐயர் நீர் உளம் மகிழ இங்கு அணைந்த உறுதியுடையோம்" என்று கூறி வரவேற்கின்றார்.

இங்கே 'ஐயர்' என்ற சொல்லைக் கவனித்தல் வேண்டும். இது அன்றும் சரி இன்றும் சரி பெரு மரியாதைக்குரியவர்களை விளிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு சொல். அந்தணர் குலத்துத் திருஞானசம்பந்தர் தாழ்ந்த குலத்துப் பாணரை 'ஐயர்' என்று மிகுந்த மதிப்போடு அழைப்பதைக் காண்கின்றோம். அதுமட்டுமல்ல, தமது தேவாரங்களுக்கு இசை அமைக்கும் திருப்பணியையும் பாணருக்குக் கொடுக்கின்றார் பிள்ளையார். அதனால் சமூகம் வழங்காத ஓர் உரிமையையும் பிள்ளையார் அவருக்கு வழங்கிவிடுகின்றார். அதுவரை காலமும் கோயில்களுக்கு வெளியே

நின்று வணங்கிவந்த யாழ்ப்பாணர் பிள்ளையாருடன் கோயிலுக் குள்ளே செல்லும் உரிமையையும் பெற்றுவிடுகின்றார்.

பிள்ளையார் பாணருடன் பேசுகின்ற பொழுதெல்லாம் அவரை "ஐயர்' என்றே விளிக்கின்றார். அப்படி விளிக்க வைப்பவர் சேக்கிழார் பெருமானே. இவர்களது சந்திப்பும் உறவும் வரலாற்று உண்மை. எனினும் அவர்களது உரையாடல் சேக்கிழாரின் கற்பனை - பொருத்தமான கற்பனை. ஞானசம்பந்தரின் சமூகப் புரட்சியை சேக்கிழார் முழுமையாக ஆதரித்தார் என்பதற்கு இவ்விதமான உதாரணங்கள் பல பெரியபுராணத்திலே உள்ளன.

## சமயப் புரட்சி

மற்றும் பல புரட்சிகரமான சிந்தனைகள் ஆங்காங்கு விதைக்கப் பட்டுள்ளன. மரபுவழிப் பூசை முறைகளிலும் அன்புவழிப் பூசை சிறந்தது என்ற கருத்தைக் கண்ணப்பநாயனார் வரலாற்றில் வலியுறுத்துகின்றார்.

மந்திரங்களால் மட்டுமன்றித் தமிழ் மொழியாலும் இறைவனை அர்ச்சிக்கலாம் என்ற கருத்தைத் தடுத்து ஆட்கொண்ட புராணத்தில் இறைவன் வாக்காகவே முன்வைக்கின்றார்.

மற்றுநீ வன்மை பேசி வன்தொண்டன் என்னும் நாமம்
பெற்றனை நமக்கும் அன்பின் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே யாகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்.

என்ன சிறப்பாகத் தமது கருத்துக்குச் சேக்கிழார் வலுவேற்று கின்றார் பாருங்கள். வேதமுதல்வர் சொற்றமிழ் பாடுக என்கிறார். அப்படி மொட்டையாகவும் அவர் சொல்லவில்லை. "நமக்கும் அன்போடு கலந்த சிறந்த அர்ச்சனை பாட்டேயாகும். ஆதலால் பாடுக" என்கிறார். தூய மறைபாடு வாயார் தமிழ்ப் பாட்டைக் கேட்க விரும்புகிறார் என்றால் அதன் இனிமை பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

வேதங்களை நன்கு அறிந்த திருஞானசம்பந்தரும் தமிழுக்கு

முதன்மை அளித்தவர். அவர் பாடிய பதிகங்களில் இரண்டினைத் தவிர மற்றைய வற்றின் இறுதிப்பாடலில் தம்மைக் குறிப்பிடும் போதெல்லாம் தமிழோடு சேர்த்துக் குறிப்பிடுவதைப் பார்க்கின்றோம்.

தமிழ் ஞானசம்பந்தன்
நற்றமிழ் விரகன்
தமிழ் விரகன்
ஞானசம்பந்தன் செந்தமிழ்
ஞானசம்பந்தன் சொன்ன தமிழ்

என்றெல்லாம் குறிப்பிடுவார். இத்தன்மையையும் தமிழ் மரபுக்குத் தமது பாடல்களிலே அவர் அளிக்கும் சிறப்பையும் அவதானித்த சேக்கிழார் பெருமான்,

திசையனைத்தின் பெருமையெலாம்
தென்திசையே வென்றேற
மிசை உலகும் பிற உலகும்
மேதினியே தனிவெல்ல
அசைவில் செழுந் தமிழ் வழக்கே
அயல் வழக்கின் துறை வெல்ல
இசைமுழுதும் மெய்யறிவும்
இடங்கொள்ளும் நிலைபெருக.

அவதரித்தார் என்று பாடுகின்றார். தாமும் தமது காப்பியத்தில் தமிழ் நாட்டின் நீர் நில வளங்களையும் இயற்கை எழிலையும் மக்கள் பண்பையும் அவர்களின் தொழில்களையும் காதல், வீரம், கொடைத்திறன், தியாகம் முதலியவற்றையும் எடுத்துக் கூறுகின்றார்.

இவ்விதம் சேக்கிழார் பெருமான் ஒரு சிறந்த வரலாற்று ஆசிரியராக வும் சைவசித்தாந்தியாகவும், உன்னதமான நீதிமானாகவும் உலகெல்லாம் வாழவேண்டும் என்ற உயர்ந்த உள்ளமுடைய வராகவும் சீர்திருத்த வாதியாகவும் தமிழ் வழக்கின் பாதுகாவல ராகவும், தமிழ் அறிந்த பெரும் புலவராகவும் விளங்குவதை அவர் அருளிச் செய்த பெரியபுராணம் எனப்படும் திருத்தொண்டர் புராணத்தால் அறிய முடிகிறது என்பதனை இதுவரை பார்த்தோம்.

பெரியபுராணம் சைவப் பெருமக்களுக்குக் கிடைத்த இணையற்ற வொரு இன்பக் களஞ்சியம். படித்துப் பயனடைவோமாக!

தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கி னாற்சொல வல்ல பிரான் எங்கள்
பாக்கி யப்பய னாப்பதி குன்றைவாழ்
சேக்கி ழானடி சென்னி இருத்துவாம்.

- சிவஞான சுவாமிகள்

# 9
# பரஞ்சோதி முனிவரின் தமிழ்ப்பற்றுப் புராணம்

## வரலாறு

பரஞ்சோதி முனிவர் சோழ வளநாட்டில் வேதாரணியம் என வழங்கும் திருமறைக்காட்டில் அவதரித்தவர். இவரது தந்தையார் மீனாட்சிசுந்தர தேசிகர் சைவாசாரியாராக விளங்கியவர். தந்தையாரிடம் முறையாகச் சமயதீட்சை, விசேட தீட்சை, நிருவாண தீட்சை ஆகியவற்றைப் பெற்றுச் சிவாகமங்களையும் சைவசித்தாந்த சாத்திரங்களையும் தேவாரம் திருவாசகம் முதலிய தோத்திரங் களையும் கற்று உணர்ந்தவர். தமிழ் மொழியோடு வடமொழியையும் நன்கு கற்றுப் புலமை பெற்றுத் திகழ்ந்தவர்.

பரஞ்சோதி முனிவர் சிவயாத்திரை மேற்கொண்டு பல சிவதலங்களைத் தரிசித்துத் திருவாலவாய் என்னும் மதுரைப் பெரும்பதியை அடைந்தார். அத்திருப்பதியில் அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த சொக்கலிங்கப் பெருமானை வழிபட்டுவருங் காலத்தில் ஞான விளக்கம் பெற்றுச் சந்நியாசம் பூண்டார். முனிவரின் அகன்ற அறிவையும் கவிபாடும் திறத்தையும் நன்கு அறிந்த அவ்வூர்ப் பெருமக்கள் வடமொழி நூலாகிய 'ஆலாசிய மான்மியத்தை' தமிழிற் பாடும்படி கேட்டனர். கனவிலும் நினைவிலும் சிவபெருமான் திருவிளையாடல்களையே உன்னி உருகி வாழ்ந்து கொண்டிருந்த முனிவரின் கனவிலே மதுரை மீனாட்சி அம்மையாரும் ஒருநாள் தோன்றி "அன்பனே, நம் பெருமான் திருவிளையாடல்களைப் பாடுவாயாக!'' என்று பணித்தருளினார். முனிவர் விழித்தெழுந்து எல்லாம் வல்ல பராசக்தி

கூறியருளிய சொல்லையே சுருதியாகக் கொண்டு ‘சத்தியாய்’ என்ற அருள்மொழியில் தொடங்கித் ‘திருவிளையாடற் புராணம்’ என்னும் நூலைப் பாடினார்.

இத் திருவிளையாடற் புராணத்தின் சாரமாக ‘மதுரை அறுபத்து நான்கு திருவிளையாடற் போற்றிக் கவி வெண்பா’ என்ற சிறுநூல் ஒன்றையும் இவர் இயற்றினார். அத்துடன் மதுரைச் சொக்கலிங்கப் பெருமானைப் புகழ்ந்து கூறும் ‘மதுரைப் பதிற்றுப் பத்து அந்தாதி’ என்ற பிரபந்தத்தையும் திருமறைக்காடு என்னும் சிவத்தலத்தைப் பற்றிய வரலாற்றைக் கூறும் ‘வேதாரணிய புராணம்’ என்ற நூலையும் இவர் பாடியருளிய சிறப்புடையவர்.

பரஞ்சோதி முனிவர் மதுரைப் பெரும்பதியில் வாழ்ந்து வருங்காலத்தில் அங்குள்ள நன்மாணாக்கர்களுக்குத் தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் சைவாகமங்களையும் கற்பித்தார். பக்குவ ஆன்மாக்களுக்கு ஞானாசிரியராகவும் விளங்கினார். இவரது பரம்பரையினர் மதுரையிலும் தஞ்சையிலும் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். வேதாரணியத்துக்கு மேற்குத் திசையாகவுள்ள மகாராசபுரத்தையடுத்து முனிவரது பெயரில் ஒரு சிற்றூரும் உள்ளது. பரஞ்சோதிபுரம் என்பது இதன் பெயர். அங்குள்ள சிவாலயத்து இலிங்கம் பரஞ்சோதிலிங்கம் என்று வழங்கப்படுகின்றது. பரஞ்சோதி முனிவரின் உருவச் சிலை ஒன்றும் கோயிலில் வைத்துப் பூசிக்கப்படுகின்றது.

பரஞ்சோதி முனிவர் வாழ்ந்த காலம் சரியாகத் தெரியவில்லை. திருமலைநாயக்கரின் அவையிலிருந்த சரசுவதி பண்டாரம் என்பவரின் தலைமையில் திருவிளையாடற் புராணம் அரங்கேற்றப்பட்டதாக இவர் பரம்பரை கூறிவருகின்றது. அதனை வைத்துக்கொண்டு ஆராயின் இவரது காலம் கி.பி. 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாக இருத்தலைக் காணமுடிகிறது. பெரியவர்களைப் பெயர் சொல்லி அழைக்கலாகாது என்பது தமிழர் பண்பாடு. இந்தப் பண்பாட்டினால் பெரியவர்களின் வரலாறுகளிலும் குழறுபடிகள் இடம்பெறலாயின.

**புராணங்கள்**

பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணம் பத்தி

இலக்கியத்தை வளப்படுத்தும் புராணமாக விளங்குகின்றது. புராணம் என்றால் பழைமை வாய்ந்த கதை என்று பொருள். இதிகாசங்களும் புராணங்களில் அடங்குமாயினும் இவை இரண்டுக்குமிடையில் முக்கியமான ஒரு வேறுபாடும் உள்ளது. புராணங்களில் தெய்வங்கள் பிரதான பாத்திரங்களாக வரும். இதிகாசங்களில் தெய்வத்தன்மை பொருந்திய மனிதர்கள் பாத்திரங்களாக அமைவர்.

தமிழ்ப் புராணங்கள் பலவற்றுக்கு வடமொழிப் புராணங்கள் மூலங்களாக அமைந்துள்ளன. இலிங்க புராணம், மச்ச புராணம், கூர்ம புராணம், கந்த புராணம் போன்றவற்றுக்கும் கம்பராமாயணம், வில்லிபாரதம் ஆகிய இதிகாசங்களுக்கும் வடமொழி நூல்களே மூலங்களாக உள்ளன.

இவற்றுக்கு மாறாக, தமிழுக்கேயுரிய புராணமாக விளங்கும் தனித்துவம் உடையது சேக்கிழார் சுவாமிகள் செய்தருளிய பெரியபுராணம் எனப்படும் திருத்தொண்டர் புராணம்.

பரஞ்சோதி முனிவருக்கும் தமிழுக்கேயுரிய தனித்துவப் புராணம் ஒன்றைச் செய்திருக்கக்கூடிய நிலைமைகள் இருந்தும் அவர் அவ்வாறு செய்யாது வடமொழிநூல் ஒன்றைத் திருவிளையாடற் புராணத்துக்கு வழிநூலாகக் கொண்டிருக்கின்றார்.

சிவபெருமானின் திருவிளையாடல் பற்றிய குறிப்புக்கள் சிலப்பதிகாரம், கல்லாடம் முதலிய இலக்கியங்களிலும் தேவார திருவாசகங்களிலும் வருகின்றன. மேலும் 'திருவிளையாடற் புராணம்' என்ற பெயரில் பரஞ்சோதி முனிவருக்கு முன்னதாகவே நூல் ஒன்று இயற்றப்பட்டிருக்கின்றது. அதனை ஆக்கியவர் பெரும்பற்றப் புலியூர் நம்பி என்பவர். எனினும் இவை பற்றி எதுவும் குறிப்பிடாமல் தாம் வடநூல் ஒன்றைத் தழுவி நூல் செய்திருப்பதாக பாயிரத்தில் இரண்டாவது செய்யுளில் குறிப்பிடுகின்றார் முனிவர்:

> அறைந்திடப் பட்ட தாகும்
> ஆலவாய்ப் புகழ்மை அந்தச்
> சிறந்திடும் வடநூல் தன்னைத்
> தென்சொலால் செய்தி என்றிங்(கு)

உறைந்திடும் பெரியோர் கூறக்
கடைப்பிடித் துறுதி இந்தப்
பிறந்திடும் பிறப்பில் எய்தப்
பெறுதும்என் றுள்ளந் தேறா.

இச்செய்யுள் நூல் செய்ததற்கான காரணத்தைக் கூறுகின்றது. 'அந்தச் சிறந்திடும் வடநூல்' என்றது சூதமுனிவர் வியாசர்பால் கேட்டுத் தெளிந்து செய்த பதினெட்டுப் புராணங்களில் ஒன்றான ஸ்கந்த புராணம். அதன் ஒரு பகுதி 'ஆலாசிய மான்மியம்' என்பது. அதிற் சொல்லப்பட்டுள்ள சிவபெருமானின் திருவிளை யாடல்களை "தென்சொலால் செய்தி என்று இங்கு உறைந்திடும் பெரியோர் கூற... உறுதி இந்தப் பிறந்திடும் பிறப்பில் எய்த... விருத்தச் செய்யுள் வகையால் விளம்ப லுற்றேன்" என்று அடுத்த பாட்டில் முடிக்கின்றார் முனிவர்.

தென்சொல் என்பது தமிழ்மொழி. அந்த வடநூலைத் தமிழ் மொழியிற் செய்வாயாக என்று மதுரைவாழ் பெரியோர் கூற அவர் கூற்றைக் கடைப்பிடித்து இந்தப் பிறப்பின் பயனை அடைய இந்நூலைச் செய்தேன் என்கின்றார். இதற்குள் ஓர் உட்கருத்தும் இருக்கின்றது. சூதமுனிவரின் ஸ்கந்த புராணத்தில் கூறப்பட்டுள்ள கந்தனைப் பற்றிய தகவல்களைக் கொண்டு கச்சியப்ப சிவாச் சாரியார் ஏற்கனவே கந்த புராணத்தை ஆக்கியுள்ளார். இப்பொழுது அதில் கூறப்பட்டுள்ள சிவபெருமான் திருவிளையாடல்களைப் பாடுக என்று பெரியோர் கேட்க அவர்கள் விருப்பத்துக்கு மதிப்பளித்து இந்நூலைச் செய்திருக்கின்றார் முனிவர்.

## திருவிளையாடற் புராணம்

திருவிளையாடற் புராணம் 3363 பாடல்களையும் 3 காண்டங் களையும் 68 படலங்களையும் கொண்டுள்ளது. படலம் தொடங்கு தற்கு முன்னுள்ளதான நூல் முகப்பு 343 செய்யுள் களாலானது. இதில் நூற்பயன், கடவுள் வாழ்த்து, பாயிரம், அவையடக்கம், திருநாட்டுச் சிறப்பு, திருநகரச் சிறப்பு, திருக்கயிலாயச் சிறப்பு, புராணவரலாறு, தலவிசேடம், தீர்த்த விசேடம், மூர்த்தி விசேடம், பதிகம் என்னும் 14 பிரிவுகளையுடையது.

நூல்,

சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொருள் நல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே

என்ற காப்புச் செய்யுளுடன் தொடங்குகின்றது. இது தனிப்பர முத்தியான முதல், உயிர்கள் உய்தற்பொருட்டுச் சத்தியும் சிவமுமாகி அருள்பாலிக்கும் திறத்தைப் போற்றுகின்றது.

நூற்பயன் நூலை "அன்பு செய்து கேட்போர் புண்ணியராய்ச் சிவனடிக்கீழ் நண்ணி வாழ்வார்" என்று கூறுகிறது. இது தகுதி வாய்ந்த ஒருவர் புராணபடனஞ் செய்ய ஏனையோர் சூழவிருந்து கேட்கும் அக்காலத்து கேள்வி வழக்குக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது. சொல்வோரின்றிக் கேட்போர் இல்லையாதலால் கேட்போருக்குச் சொல்லப்பட்ட பயன் சொல்வோருக்கும் உண்டு என்பது புலனாகும்.

கடவுள் வாழ்த்தில் சிவம் முதலாக திருநந்திதேவர் வரை பதினைந்து மூர்த்திகளுக்கும் சமய குரவர் நால்வருக்கும் தனித்தனி வணக்கம் செலுத்தப்படுகின்றது. ஒரு பாட்டால் சண்டேசுரரும் மற்றைய அடியார்களும் பரவப்படுகின்றனர்.

## கற்பனை வளம்

வாழ்த்துப் பாடல்கள் பத்தியையும் சித்தாந்தத் தத்துவங்களையும் கொண்டு விளங்குவதோடு புலவரின் கற்பனைத் திறத்தையும் காட்டி நிற்கின்றன. உதாரணத்துக்கு சித்தி விநாயகர் வாழ்த்தை எடுத்துக் காட்டலாம்.

உள்ளமெனும் கூடத்தில் ஊக்கம் எனும்
    தறிநிறுவி உறுதி யாகத்
தள்ளரிய அன்பென்னும் தொடர்பூட்டி
    இடைப்படுத்தித் தறுகண் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
    களித்து உண்டு கருணை என்னும்

வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரும் வினைகள் தீர்ப்பாம்.

சித்திவிநாயகப் பெருமானின் சிறப்பியல்பையும் அவரை வணங்கும் முறையையும் கூறுகின்றார் பரஞ்சோதி முனிவர். கூடம் என்றால் யானைகட்டும் இடம். விநாயகப் பெருமானை உள்ளம் என்னும் கூடத்தில் கட்டி வைக்க வேண்டுமாம். எப்படிக் கட்ட வேண்டும்? ஊக்கம் என்னும் மரக்கட்டை (தறி - நடுகால்) ஒன்றை நிறுவி அதில் விநாயகப் பெருமானை இடைவிடாத அன்பு என்னும் சங்கிலியால் (தொடர்பு - சங்கிலி) உறுதியாகக் கட்ட வேண்டும். கட்டி கொடிய (தறுகண்) பாச வினைகளை எல்லாம் ஆன்ம அறிவிலே (பசுபோதம்) குழைத்து உணவாக (கவளமாக)க் கொடுக்க வேண்டும். அதனைக் களித்து உண்டு விநாயகப் பெருமான் கருணை என்னும் மதத்தை வெள்ளமாகப் பொழிவார்.

யானையின் கொழுப்பு நீருக்கு மதநீர் என்று பெயர். நல்ல உணவை உண்பதனால் யானை கொழுக்கும். கொழுத்து வளர்ந்த யானை மதயானை எனப்படும். விநாயகப் பெருமான் தன்னை அன்போடு இடைவிடாது வணங்கும் அடியவர்களின் கள்ள வினைகளை உண்டு களிக்கின்றார். அதாவது, அன்பர்களின் வினைகளைப் போக்குவதில் மகிழ்ச்சியடைகின்றார். அதாவது, வினைகளை விருப்போடு போக்கியருளுகின்றார். அது அவருக்கே உரிய பெருங்கருணைத் திறனாகும்.

## தமிழ்ப் பற்று

நாட்டுச் சிறப்பில் பரஞ்சோதி முனிவர் தமது தமிழ்ப் பற்றை வெளிப்படுத்துகின்றார். நான்கு பாடல்களில் தமிழின் சிறப்பைக் கூறிக் களிக்கின்றார். அவற்றில் ஒன்று இது:

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
உண்ட பாலனை அழைத்ததும் எலும்புபெண் உருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்த தும்கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்.

நாயன்மார்களின் அற்புதங்களுக்கு அவர்கள் இறைவன் மீது கொண்டிருந்த எல்லையற்ற அன்போடு கன்னித்தமிழின் சக்தியும்

காரணமாகும் என்பது முனிவர் கருத்தாகும்.

நூன்முகத்தைத் தொடர்ந்து சொக்கநாதரின் 64 திருவிளையாடல் களையும் பத்திச் சுவை சொட்டப் பாடுகின்றார் புலவர். சொக்கநாதர் என்பது மதுரை மாநகரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் பெயர். சொக்கன் என்றால் அழகன் என்று பொருள். 'சொக்கிப் போனான்' என்றால் சொக்கநாதரின் அழகில் மயங்கிப் போனான் என்பதே பொருள். ஆனால் வழக்கில் அது வெவ்வேறு அர்த்தங்களில் இன்று பயன்படுத்தப்பட்டு வருகின்றது. 'அட சொக்கா, சொக்குப்பொடி, சொக்குதல், சோக்காக இருக்கு' என்ற சாதாரண வழக்குத் தொடர்களும் சொக்கநாதப் பெருமானிலிருந்து வந்தவைகளேயாம். சொக்கநாதப் பெருமானது திருவிளையாடல் களைக் கற்போரையும் கேட்போரையும் சொக்கவைக்கும் வகையில் விளக்கிச் செல்கிறார் புலவர்.

முதற் படலம் இந்திரன் பழிதீர்த்த கதையையும் இரண்டாவது படலம் வெள்ளையானை சாபம் தீர்த்த கதையையும் கூறுகின்றது. இவை இரண்டும் விண்ணுலகில் நடந்தவற்றுக்கு மண்ணுலகில் தீர்வு கண்ட முறைகளை விளக்குகின்றன. அதேவேளை விண்ணுலகத்தவர் குருவருள் பெற்ற திறத்தையும் இவை எடுத்துக் காட்டுகின்றன.

குருவருளை விளக்குவதே நூலின் தலையாய நோக்கமும் ஆகும். நூலின் இறுதி ஏழு திருவிளையாடல்களும் குருவருளையே வலியுறுத்துகின்றன. இவை மணிவாசகர் பொருட்டும் திருஞான சம்பந்தர் பொருட்டும் இறைவர் நடத்திய திருவிளையாடல்கள். குறிப்பாக வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம் திருப்பெருந் துறையில் சிவபெருமான் குருந்த மரத்தடியில் குருவாக எழுந்தருளி வாதவூரரை ஆட்கொண்ட வரலாற்றைக் கூறுகின்றது.

பல திருவிளையாடல்கள் தமிழின் பொருட்டு அல்லது தமிழ்ப் புலவர் பொருட்டுச் செய்யப்பட்டுள்ளன. விறகு விற்றது, திருமுகம் கொடுத்தது, பலகை இட்டது, இசைவாது வென்றது, சங்கப் பலகை கொடுத்தது, தருமிக்குப் பொற்கிழி அளித்தது, கீரனைக் கரையேற்றியது, கீரனுக்கு இலக்கணம் உபதேசித்தது, சங்கத்தார் கலகம் தீர்த்தது, இடைக்காடன் பிணக்குத் தீர்த்தது ஆகிய திருவிளையாடல்கள் எல்லாம் தமிழ்ப் புலவர் பொருட்டுச்

செய்யப்பட்டவையாகும்.

புலவர்களிடையே பொதுவாகக் காணப்படும் கல்விச் செருக்கு, போட்டி பொறாமை எல்லாவற்றையும் போக்கி, வறுமையை நீக்கி நல்ல புலமையை இனங்கண்டு சிவபெருமான் தமிழை வளர்த்தார் என்பது தமிழின் தெய்வீகத் தன்மையை காட்டுகின்றது.

**தனிவரு புலவர் நீவிர்**
**தண்டமிழ் ஆல வாயெங்**
**கனிவரு கருணை மூர்த்தி**
**கனைகழல் இறைஞ்சல் வேண்டும்**
**இனிவரு கென்ன நீரே**
**எங்களுக்(கு) அளவிற் கோடி**
**துனிவரு வினைகள் தீர்க்கும்**
**சுந்தரக் கடவுள் என்றார்.**

சங்கைப் பலகை கொடுத்த படலத்தில் வரும் இந்தப் பாடலில் 'தனிவரும் புலவர்' எனச் சோமசுந்தரக் கடவுளைக் குறிப்பதனாலும் தமிழ் மொழியின் அழகும் இளமையும், அழியாத் தன்மையும் எல்லாம் புலப்படுத்தப்படுவதையும் பார்க்கின்றோம்.

## கூத்தன் கூத்து

"விற்றுக் கொள்வீர் ஒற்றியல்லேன் விரும்பி ஆட்பட்டேன்" என்று பாடுகின்றார் சுந்தரமூர்த்தி நாயனார். இறைவருக்குத் தம் அடியரை விற்றுக் கொள்ளும் உரிமையுண்டு என்பதனை எடுத்துச் சொல் கின்றார் சுந்தரர். அடியவரை விற்கும் உரிமை இருப்பதுபோல, அவ்வடியவர் பொருட்டுப் பிற பொருட்களைத் தாமும் விற்று அருள்பாலிக்கும் திறத்தை மாணிக்கம் விற்றது, வளையல் விற்றது, விறகு விற்றது போன்ற திருவிளையாடல்களால் தெரிய வைக்கின்றார் இறைவர்.

மாணிக்கம் விற்ற படலத்தில் மாணிக்கத்தைப் பற்றிய நுட்பமான விளக்கங்கள் வருகின்றன. திருவிளையாடற் புராணம் ஒரு பத்திநூலாகவன்றிச் சிறந்தவொரு கல்வி நூலாகவும் விளங்குகின்றது என்பதற்கு இப்படலம் நல்லதொரு உதாரணம்.

இவ்விதம் இறைவரின் திருவிளையாடல்கள் வாயிலாகத் தமிழ் நாட்டின் வளங்கள், மக்கள் வாழ்க்கை, தமிழின் சிறப்பு என்று பலதரப்பட்ட தகவல்களைத் தரும் பரஞ்சோதி முனிவர் வரலாற்றுக் குறிப்புகளைச் சரிவரத் தரவில்லை என்பது ஒரு குறைபாடாக வுள்ளது. எனினும் மக்கள் இக்குறைபாட்டைப் பாராட்டாது பத்திக் காகவே திருவிளையாடற் புராணத்தைப் போற்றி வருகின்றனர்.

இறைவரின் திருவிளையாடல்களைப் பல புலவர்கள் பாடியுள்ளனர். முன்பு குறிப்பிட்டதுபோல பெரும்பற்றப் புலியூர் நம்பி என்பார் 'திருவிளையாடற் புராணம்' என்னுமொரு நூலைச் செய்திருக் கின்றார். அனதாரியப்பர் பாடிய 'சுந்தர பாண்டியம்' என்ற நூலும் திருவிளையாடல்கள் பற்றிப் பேசுகின்றது. வீரபத்திரக் கம்பர் என்பாரும் 'திருவிளையாடற் பயகர மாலை' என்றும் ஒரு நூலை ஆக்கியிருக்கின்றார். இருப்பினும் 'திருவிளையாடற் புராணம்' என்றால் அது பரஞ்சோதி முனிவரின் புராணமே என்னும் அளவுக்கு மக்கள் மத்தியில் இந்நூல் புகழ்பெற்று விளங்குகின்றது.

சைவத்தமிழ் மக்கள் கண்ணெனப் போற்றும் மூன்று புராணங்களுள் திருவிளையாடற் புராணமும் ஒன்று. மற்றைய இரண்டும் பெரிய புராணமும் கந்தபுராணமும் ஆகும்.

பெரிய புராணத்தில் காப்பியத்தலைவர் சுந்தரமூர்த்தி நாயனார். கந்த புராணத்தின் தலைவர் கந்தப் பெருமான். திருவிளையாடற் புராணத்தின் தலைவர் சிவபெருமான். சிவபெருமான் எல்லாம் வல்லவர்; எல்லாம் அறிபவர்; எங்கும் உள்ளவர்; எல்லாம் தருபவர்; எல்லோர்க்கும் நல்லவர். அதனாலேயே

சிவனொடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனொடொப்பார் இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவனச் சடைமுடித் தாமரை யானே.

என்று பாடுகின்றார் திருமூல நாயனார்.

'அன்பே சிவம்' என்று பாடியவரும் திருமூல நாயனார் தாம். அன்போடு வணங்குகின்ற தம் அடியவர் பொருட்டுச் சிவபொருமான்

எதையுஞ் செய்யத் தயாராகவுள்ளார் என்பதனைக் கூறுகின்றது திருவிளையாடற் புராணம்.

இறைவர் தம் அடியார் பொருட்டு விறகு விற்கின்றார்; வாதிடுகின்றார்; மண் சுமக்கின்றார்; அடிவாங்குகின்றார். இவரது திருவிளையாடல்களுக்கு மற்றொரு பெயர் கூத்து. கூத்தப் பெருமானின் கூத்துகள் பலவகை. அவற்றுள் ஒன்று வெள்ளியம்பலத்தில் ஆடிய திருக்கூத்து. இதுவும் திருவிளையாடற் புராணத்தில் ஆறாவது படலமாக அமைகின்றது. வெள்ளி அம்பலம் என்பது மதுரைக் கோயிலிற் கூத்தப்பிரான் கால்மாறி ஆடிய மன்றம். ஆடலைப் பாடுகின்றார் பரஞ்சோதி முனிவர்:

கங்கையர் அலம்பும் ஓசை கடுக்கைவண் டிரங்கும் ஓசை
மங்கல முழவின் ஓசை மந்திர வேத ஓசை
செங்கையா(டு) எரியின் ஓசை திருவடிச் சிலம்பின் ஓசை
எங்கணும் நிரம்பிஅன்பர் இருசெவிக்கு அமுதம் ஊற்ற

ஆடினார் அமல மூர்த்தி அஞ்சலி முகிழ்த்துச் சென்னி
சூடினார் அடியில் வீழ்ந்தார் சுருதி ஆயிரநா வாரப்
பாடினார் பரமா னந்தப் பரவையிற் படிந்தார் அன்பு
நீடினார் நிருத்தா னந்தங் காண்பது நியமம் பூண்டார்.

நடனம் ஆடுவது இறைவருக்கு இன்பம். அவரது ஆடலைக் காண்பது அடியவருக்கு இன்பம். இன்பமே சைவம். வாழ்க்கையை இன்பம் ஆக்குகின்றது திருவிளையாடற் புராணம். இதனைப் பத்தியுடன் படித்துத் துன்பங்களைப் போக்கி இன்ப வாழ்வைத் துய்ப்போமாக!

வென்றுளே புலன்க ளைந்தார்
மெய்யுணர் உள்ளந் தோறும்
சென்றுளே அமுதம் ஊற்றும்
திருவருள் போற்றி ஏற்றுக்
குன்றுளே இருந்து காட்சி
கொடுத்தருள் கோலம் போற்றி
மன்றுளே மாறி யாடு
மறைச் சிலம்பு அடிகள் போற்றி!

# 10
# பட்டினத்தடிகளின் பக்குவப் பாடல்கள்

பட்டினம் என்றால் அது காவிரிப்பூம் பட்டினமே என்று சொல்லும் அளவுக்குப் புகழ்பெற்று விளங்கிய நகரம் பூம்புகார் நகரம். சோழவளநாட்டின் குபேரபுரியாக விளங்கிய இப்பதியின் குடிகளை சிலப்பதிகாரத்திலே 'பதிஎழு அறியாப் பழங்குடி' என்று சிறப்பிக்கின்றார் இளங்கோ அடிகள். 'தாம்பிறந்த பதியை விட்டு நீங்கிப் பிற ஊரில் வாழ்தலை அறியாத பழங்குடி மக்கள்' என்பது இதன் பொருள். இந்த அடி எமக்கெல்லாம் அடிபோடுகின்ற அடியாக, பொறாமையை ஏற்படுத்துகின்ற அடியாக இருப்பதைப் பார்க்கின்றோம். புகார் நகரில் இனத்துவேசம் இல்லை; அடக்கு முறை இல்லை; போரில்லை, பஞ்சம் இல்லை. எல்லா வளங்களையும் கொண்ட இணையற்ற நகரத்தை விட்டு வேறு ஊருக்குக் குடிகள் ஏன் செல்ல வேண்டும்?

அத்தகைய அரிய பட்டினத்திலே பிறந்த சிவனடியார்களிலே பெயர் பெற்ற அடியாராக விளங்கியதால் பட்டினத்தடிகள் என்றும் பட்டினத்துப் பிள்ளையார் என்றும் பட்டினத்தார் என்றும் சிறப்பாக மக்களால் அழைக்கப்பட்டார் சுவேதாரணியர் என்பவர். இதுவே பட்டினத்தடிகளின் இயற்பெயராகும். இவரது தந்தையார் பெயர் சிவநேய குப்தர்.

## இல்லற வாழ்வு

சுவேதாரணியர் சிவதீட்சை பெற்றுச் சிவலிங்க வழிபாடு

செய்துவருங் காலத்தில் வறுமையுற்று மகேசுர பூசைக்குப் பொருள் இல்லையே என்ற கவலையில் ஆழ்ந்தார். தாயாருடன் சேர்ந்து தாமுமாக இறைவனிடம் முறையிட்டுப் பெருஞ் செல்வத்தைப் பெற்றார். பட்டினத்திலேயே பெருஞ் செல்வந்தராக விளங்கினார். அதனால் பட்டினத்துச் செட்டியார் என்றும் மக்கள் அவரை அழைத்தனர். சிவகலை என்னும் மங்கையை மணந்து இல்லறம் நடத்திவரும் காலத்திலே பிள்ளைச் செல்வம் இல்லாத குறையைப் போக்கச் சிவபிரானை வேண்டினார்.

ஒருநாள் சிவசருமர், சுசீலை என்பவர்கள் சிவசொரூபியாகிய குழந்தை ஒன்றை விற்கக் கொண்டு வந்தார்கள். சுவேதாரணியர் அக்குழந்தை நிறையுள்ள பொன்னை அவர்களுக்குக் கொடுத்துக் குழந்தையை வாங்கிக்கொண்டார். குழந்தைக்கு மருதப்பிரான் என்று பெயரிட்டு, அதனை அன்போடு வளர்த்துவரும் நாளிலே அது ஒரு தெய்வீகக் குழந்தை என்பதனை அது காட்டிய பல திருவிளை யாடல்களிலிருந்து சுவேதாரணியரும் சிவகலையும் உணர்ந்து கொண்டனர்.

## துறவறம்

குழந்தை ஒருமுறை தமது வளர்ப்புத் தந்தையிடம் ஒரு பெட்டியைக் கொடுத்தது. சுவேதாரணியர் அதனைத் திறந்து பார்த்தபொழுது அதனுள் காதற்ற ஊசியும் ஓலையும் இருக்கக் கண்டார். அவற்றால் வாழ்க்கை நிலையாமையை உணர்ந்து கொண்ட சுவேதாரணியர் துறவு பூண்டு இறைவனுக்குத் தம்மை முழுமையாக அர்ப்பணித்தார்.

கோயின் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவிடை மருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்பம் உடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது என்பன பட்டினத் தடிகள் பாடியருளிய பிரபந்தங்கள். இவற்றுட் சில பதினோராம் திருமுறையில் இடம்பெற்றிருக்கும் சிறப்புடையன.

பட்டினத்தடிகள் வறுமையில் வாடியவர்; செல்வச் செழிப்பிலும் பூரித்தவர். அதாவது, வாழ்க்கையின் இன்பதுன்பங்களை எல்லாம் அனுபவித்தவர். அனுபவ அறிவே சிறந்த அறிவு என்றாலும்

பலர் தமது அனுபவங்களை ஊன்றிக் கவனிப்பதில்லை. அவற்றிலிருந்து பெறக்கூடிய படிப்பினைகள் பற்றிச் சிந்திப்பதில்லை. நான் என்னும் முனைப்பு உள்ளவருக்கு அனுபவங்கள் பயன்படுவது குறைவு. சூடுகண்ட பூனை அடுப்பங்கரை நாடாது என்பது பழமொழி. ஆயினும் மக்கள் பலர் பூனைக்கு இருக்கக்கூடிய சூடு சொரணைகள் கூட அற்றவர்களாக உள்ளனர். அவர்களுக்கு அனுபவம் ஒரு செயன்முறைக் கல்வியாக அமைவதில்லை. அதனாலேயே அவர்கள் செயல்களில் அடுத்து அடுத்துப் பிழைகள், வாழ்க்கையில் தொடர்ந்து தொடர்ந்து கவலைகள்.

## இறை ஞானம்

பொதுவாகவே தன்முனைப்பற்ற தவச்செல்வர்களுக்கு இவ்விதமான கவலைகள் வாழ்க்கையில் குறைவு. காரணம் அவர்கள் தமக்கு வருவனவெல்லாம் இறையருளால் வருவன என்று நம்புகின்றவர்கள். பட்டினத்தாரும் அவ்விதமே நம்பினார்.

**பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லைப் பிறந்து மண்மேல்**
**இறக்கும் பொழுது கொடுபோவ தில்லை இடைநடுவில்**
**குறிக்குமிச் செல்வம் சிவன்தந்த தென்று கொடுக்க அறியா(து)**
**இறக்கும் குலாமருக்கு என்சொல்லு வேன்கச்சி ஏகம்பனே.**

குலாமர் - உலோபிகள். உலோபிகள் தமக்குக் கிடைத்த செல்வம் சிவன் தந்தது என்று நினைக்கிறார்கள் இல்லை. ஏதோ தாமே தேடிய தேட்டம் என்று பெருமிதம் கொள்கிறார்கள். அவர்கள் பிறக்கும்பொழுது மனிதர் எதுவும் கொண்டு வருவதில்லை என்பதையும் அறியார். இறக்கும்பொழுது எதையும் அவர் கொண்டு போவதில்லை என்பதையும் உணரார். அத்தகையவருக்கு நாம் எதனைச் சொல்லலாம்; அவர்களை எவ்வாறு திருத்தலாம். நீயே பார்த்துக் கொள் ஏகம்பப் பெருமானே என்று நொந்து கொள்கிறார் பட்டினத்தார்.

இவருக்கு இந்த ஞானம் எவ்விதம் வந்தது? முன்வினைப் பயன் கூடிவர அனுபவத்தால் அதனை உணர்த்தியிருக்கின்றார் இறைவர். குழந்தை மூலம் காதற்ற ஊசி ஒன்றைக் கொடுப்பித்து 'காதற்ற ஊசியும் வாராது காண்கடை வழிக்கே' என்ற உண்மையை

உணர்த்தியருளினார் இறைவர்.

சூதுற்ற கொங்கையு மானார் கலவியுஞ் சூழ் பொருளும்
போதுற்ற பூசலுக் கென்செய லாஞ்செய்த புண்ணியத்தால்
தீதற்ற மன்னவன் சிந்தையில் நின்று தெளிவதற்கோ
காதற்ற ஊசியைத் தந்துவிட் டான் என்றன் கைதனிலே.

காதற்ற ஊசி ஒன்று எமக்குக் கிடைத்தால், நாம் என்ன செய்வோம். உடைந்த ஊசி என்று எறிந்து விட்டுப் பேசாது இருப்போம். எமக்குத் தேவையாயின் புதிய ஊசி ஒன்றை வாங்குவோம். பட்டினத்தார் செல்வந்தராகிய தமக்குக் குழந்தை ஊசியை ஏன் தந்தது? அதுவும் உடைந்த ஊசியை ஏன் தந்தது என்று சிந்திக்கத் தொடங்கினார். தமது மதிப்பும் ஒருநாளைக்கு அந்த ஊசியள வினதாகவே முடியும் என்பதனை உணர்ந்தார். அந்த உண்மையைச் சிந்தித்துத் தெளிவதற்கோ இறைவன் காதற்ற ஊசியைக் கையிலே தந்தான் என்று தன்னைத்தானே கேட்கின்றார். வளர்ந்தவர்கள் கேள்விகளை மற்றவர்களிடம் கேட்பதிலும் தம்மைத் தாமே கேட்பது சிறந்தது.

“நான் ஆர்? என் உள்ளம் ஆர்? ஞானங்கள் ஆர்” என்று தம்மைத் தாமே கேட்கின்றார் மணிவாசகப் பெருமான். சிந்தனைத் தெளிவால் அவருக்குப் பதிலும் கிடைத்து விடுகிறது. நானும் என் உள்ளமும் என் ஞானங்களும் எல்லாம் வானோர் பிரானின் உடைமைகள் என்கிறார். ஏனெனில் அவன் என்னை ஆண்டவன்; எனக்கு ஆண்டவன். அவன் என்னை ஆண்டிலனேல் என்னை யார் அறிவார் என்னும் தெளிவு பிறக்கின்றது. பட்டினத்து அடிகளும் கேள்விகளைக் கேட்டு இறைவனின் ஆட்சியைத் தெளிந்து கொள்கின்றார்.

என்செயல் ஆவது யாதொன்றும் இல்லை இனித்தெய்வமே
உன்செய லேயென்று உணரப்பெற் றேன்இந்த ஊன்எடுத்த
பின்செய்த தீவினை யாதொன்றும் இல்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோஇங்ங னேவந்து மூண்டதுவே.

இந்தப் பாடலிலே பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள் உண்மை பேசப்படினும் இரண்டு முக்கியமான சித்தாந்தக் கருத்துக்கள்

மேலோங்கி நிற்பதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. ஒன்று ஆன்ம பக்குவம் பற்றியது. மற்றையது பிறப்பதற்குரிய காரணம் பற்றியது.

ஆன்மாக்கள் பிறப்புக்களை எடுப்பது வினைப்பயன்களை அனுபவித்தற் பொருட்டு. அவ்விதம் அனுபவிப்பதனால் அறிவையும் அறிவினால் பக்குவத்தையும் ஆன்மா பெறுகின்றது. ஆன்ம பக்குவம் என்பது இறைவனின் இயல்புகளை அறிதலும் இறைசிந்தனையோடு செயற்படுதலும் இன்ப துன்பங்களைச் சமமாகக் கொள்வதும் இறைவனை இனங்காண வல்லதுமான தகைமை அல்லது முதிர்ச்சி. 'என்செயல் ஆவது யாதொன்றும் இல்லை. இனித் தெய்வமே உன்செயலே என்று உணரப்பெற்றேன்' என்னும் கூற்று ஆன்ம முதிர்ச்சியின் அறிகுறியாகும்.

## பிறப்புக்குக் காரணம்

பாடலின் பின் இரண்டு அடிகள் பிறப்புத் தொடர்ச்சியையும் அதற்குரிய காரணத்தையும் கூறுகின்றன. பிறப்புக்குக் காரணம் வினைகள். வினைகள் நல்வினை தீவினை என இருவகைப்படும். "பிறப்பதற்கு முன் செய்த தீவினையோ இங்ஙனே வந்து மூண்டதுவே" என்கின்றார் பட்டினத்தார். இதனால் தீவினைதான் பிறப்புக்குக் காரணமாகின்றது என்பது புலனாகின்றது.

சிலபேர் முற்பிறப்பிற் செய்த தீவினைகளை இப்பிறப்பில் அனுபவித்துவிட்டால் மறுபிறப்பு வரமுடியாது என்று கருதுகிறார்கள். பிறவிதோறும் ஈட்டப்படும் வினைகள் சஞ்சிதம் எனப்படும். ஒரு பிறப்பில் சஞ்சிதம் முழுவதும் அனுபவிக்கப்படுவதில்லை. சஞ்சித வினைத் தொகுதியிலிருந்து ஒரு பகுதி வினைகளே குறிப்பிட்ட ஒரு பிறப்பில் அனுபவிக்கப் படுகின்றன. இது பிரார்த்தம் அல்லது ஊழ்வினை எனப்படும். சஞ்சித வினைக்கூட்டத்தில் பிரார்த்த வினைகள் போக மேலும் வினைகள் எஞ்சியிருக்கும். அவற்றால் பிறப்புத் தொடரும்.

பட்டினத்தார் பொதுவாக எல்லோருஞ் சொல்வதுபோல் தீவினை யாலே பிறப்புத் தொடருகின்றது என்று சொல்கிறாரேயன்றி, தீவினை மட்டுந்தான் பிறப்புக்குக் காரணம் என்று அவர் சொல்லவில்லை.

பிறப்புக்கு நல்வினையும் காரணமாகலாம் என்பதனைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். திருமாலின் மகளான சுந்தரி பூவுலகத்தில் வள்ளிநாயகியாகப் பிறந்தமைக்கு சரவணப் பொய்கைக்குப் பக்கத்தில் அவர் முன்பு செய்த நற்றவம் காரணம் ஆகின்றது. அகில நாயகியாகிய பராசக்தியே மலையரசன் மகளாகப் பிறந்திருக்கின்றாள். சுந்தரமூர்த்தி நாயனார் பிறப்பும் காரணம் பற்றியது. உலகத்துக்கு ஒளியூட்டிய, வழிகாட்டிவருகின்ற பெரியவர்களின் பிறப்புக்கள் காரணம் பற்றியன என்றே கொள்ள வேண்டும். நம் கண்முன்னே வாழ்ந்துவரும் சாயிபாபா நல்லதோர் உதாரணம் ஆகின்றார்.

பிறப்பை அறுப்பதற்கு இறைவழிபாடே சிறந்த வழியாகும்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்

என்பார் வள்ளுவர் பெருமான். இறைவழிபாடு சிறந்த வழி என்று எளிதாகச் சொல்லிவிடலாம். ஆனால் இறைவழிபாடு எளிதான காரியமன்று. அதில் உள்ள சிரமங்களை இப்படிக் கூறுகின்றார் பட்டினத்தார்:

கையொன்று செய்ய விழியொன்று நாடக்
கருத்தொன் றெண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று
பேசப் புலால் கமழு
மெய்யொன்று சாரச் செவியொன்று
கேட்க விரும்பு மியான்
செய்கின்ற பூசையெவ்வாறு கொள்
வாய்வினை தீர்த்தவனே.

இந்தப் பாடலிலே பட்டினத்தாரின் பண்பு துலங்குகின்றது. பக்குவம் விளங்குகின்றது. பக்குவம் பெற்றவரிடத்தில் மற்றவர்களிடத்தில் குறைகாணும் இயல்பு இருப்பதில்லை. பிறர் குறைகளைத் தம்மீது ஏற்றிச் சொல்லுகின்ற ஒரு நாகரிகம் அவரிடத்தில் காணப் படுகின்றது.

‘பொய்யெல்லாம் மெய்யென்று புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை’ என்றும்

‘பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூற நிற்பேன்’ என்றும்

மணிவாசகப் பெருமான் பாடுவது அவ்விதம் நடப்பவர்களைப் பற்றியேயன்றி தம்மைப்பற்றி அன்று. அவர் போலவே பட்டினத்தடிகளும் பொதுமக்கள் சார்பிலே பேசுகின்றார். ஐம்புலன் களும் அவைபாட்டில் ஏதேதோ செய்ய நான் செய்யும் பூசையை நீ எவ்வாறு ஏற்றுக்கொள்வாய் என்று அவர் இறைவரைக் கேட்கின்றார்?

## புலன்கள் ஒன்றிய பூசை

இந்தக் கேள்வியிலேயே எமக்கு விடையும் கிடைத்துவிடுகின்றது. அதாவது, இறைவருக்குப் பூசை செய்கின்ற பொழுது ஐம்புலன் களையும் அவர்பால் செலுத்தி வழிபடுதல் வேண்டும். இல்லையேல் அப்பூசையை அவர் ஏற்றுக்கொள்ள மாட்டார். ‘எவ்வாறு கொள்வாய்?’ என்னும் கேள்வியில் இக்கருத்துத் தொனிக்கின்றது.

இதனால் எமது வழிபாட்டில் எமக்கே சந்தேகம் வருகின்றது. குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்கிறோமா என்ற கேள்வியும் எழுகின்றது.

ஓர் இளைஞன் கோயிலிலே கும்பிட்டபடி நிற்கின்றான். இருந்தாற் போல் அவன் தலை திரும்புகின்றது. கண்கள் கோயிலுக்கு வந்த ஒரு பெண்மீது படிகின்றன. சரி, கதையை இத்துடன் நிறுத்தி ஒரு கேள்வியைக் கேட்போம். பெண் வந்தது அவனுக்கு எப்படித் தெரிந்தது? அவன் முழுமையாகத் தனது மனத்தை இறைவர்மீது செலுத்தவில்லை என்பது இதனால் தெரிகிறது. இதுபோலவே நாம் எல்லோரும் வழிபாடு என்கின்ற பெயரில் இறைவனையே ஏமாற்றிக் கொண்டிருக்கின்றோம். அதனாலேயே எமது வழிபாட்டால் பலன் எதுவும் கிடைக்காமற் போய்விடுகிறது.

புலன்களை வழிப்படுத்துவது எளிதான காரியமல்ல. ‘ஓரவொட்டார்

ஒன்றை உன்னவொட்டார் மலர் இட்டுனதாள் சேரவொட்டார் ஐவர் செய்வதென் யான்?' என்று முருகப் பெருமானுக்கு முறையிடுகின்றார் அருணகிரிநாதர் கந்தரலங்காரத்தில். இறைவனை வணங்குவதற்கும் அவனுடைய அருள் வேண்டும். 'அவன் அருளாலே அவன்தாள் வணங்கி' என்கிறார் மணிவாசகப் பெருமான். புலன்களை அடக்குவதற்கும் அவனுடைய அருள் வேண்டும். அவனுடைய அருளாலே புலன்களை அடக்கி இறை வழிபாட்டில் இன்பம் கண்டவர்கள் நாயன்மார்கள். அவர்களில் குறிப்பாக மூவரை நினைந்து அவர்கள் எங்கே தான் எங்கே என்று ஏங்குகின்றார் பட்டினத்து அடிகள்.

வாளால் மகவரிந்து ஊட்டவல்லேன் அல்லன்
மாது சொன்ன
சூளால் இளமை துறக்கவல்லேன் அல்லன்
தொண்டு செய்து
நாளாறில் கண்இடந்து அப்பவல்லேன் அல்லன்
நான் இனிச் சென்று
ஆளாவது எப்படியோ திருக் காளத்தி
அப்பனுக்கே.

வாளால் மகவு அரிந்து ஊட்டியவர் சிறுத்தொண்ட நாயனார். நாள்தோறும் சிவனடியார்களுக்குத் திருவமுது ஊட்டிய பின்னர் தாம் உண்ணும் வழக்கத்தைக் கொண்டவர் சிறுத்தொண்டர். ஒருநாள் சிவனடியார் எவரும் வரவில்லை. அதனாற் சிறுத்தொண்டர் மிகவும் கவலையடைந்து சிவபிரானை வேண்டினார். சிவபிரானே பயிரவச் சங்கமர் வேடங்கொண்டு எழுந்தருளினார். அவரை வரவேற்று அமுதுசெய்ய அழைத்தபொழுது தமக்கு நரப்பசுவே உணவாகும் என்றார் பயிரவச் சங்கமர். அதுகேட்ட சிறுத் தொண்டர் தமது ஒரே மகனை அரிந்து மனைவியைக் கொண்டு கறியாக்கிச் சிவனடியாருக்கு அமுது அளிக்கும் வேளை உடன் இருந்து உண்ண உங்கள் மகனை அழையுங்கள் என்றார் விருந்தினர். அப்பொழுது (அடியவர் சொல்லைத் தட்ட மனம் இல்லாது)

வையம் நிகழுஞ் சிறுத்தொண்டர்
மைந்தா வருவாய் என அழைத்தார்

ஐய லாரும் தலைவர்பணி
தலைநிற்பாராய்த் தாம் அழைப்பார்
செய்ய மணியே சீராளா
வாராய் சிவனார் அடியார்யாம்
உய்யும் வகையால் உடன் உண்ண
அழைக்கின் றார் என்று ஓலமிட

எல்லாம் வல்ல சிவபிரானின் திருவருளினாலே மைந்தன் சீராளன் உயிர்பெற்று வருகின்றான்.

அடுத்து, மாது சொன்ன சூளால் இளமை துறந்தவர் திருநீலகண்ட நாயனார். பரத்தையர் வீட்டுக்குச் சென்றுவந்த நாயனாருடன் ஊடல் கொண்டார் அவரது மனைவியார். மனைவியாரைச் சமாதானஞ் செய்யுஞ் வகையில் அவரைத் தொட முயன்றபோது, "நீர் எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம்" என்று அவர்மீது ஆணையிட்டுக் கூறினார். அந்த ஆணையைக் கடைப்பிடித்து மனைவியைத் தீண்டாமலேயே மனைவியோடு இல்வாழ்க்கை நடத்திய உள்ளப் பக்குவம் உடையவர் திருநீலகண்ட நாயனார்.

மற்றைய கதை எல்லோருக்கும் தெரிந்த கதை. கலை மலிந்த சீர்நம்பி கண்ணப்பர் இறைவரின் வலது கண்ணிலிருந்து இரத்தம் சொரிவதைக் கண்டு, ஊனுக்கு ஊனே மருந்து என்னும் பழமொழியை நினைந்து, தமது வலக்கண்ணைக் கூரிய அம்பினால் தோண்டிக் காளத்திநாதரின் திருக்கண்ணில் அப்பினார். பின்னர் இரண்டாவது கண்ணிலிருந்தும் இரத்தம்வர தமது இடக் கண்ணையும் இடந்து அப்ப முற்பட்டார். அப்பொழுது "நில்லு கண்ணப்ப" என்று இறைவர் அவரைத் தடுத்துத் தமது வலப் பக்கத்தில் அமர்த்திக் கொண்டார். ஆராத அன்பினால் ஆறுநாட் களுக்குள் இறையருளைப் பெற்ற பெருந்தொண்டர் கண்ணப்ப நாயனார்.

இவர்களை எல்லாம் எண்ணிப்பார்க்கின்றார் பட்டினத்து அடிகள். 'இவர்களது பக்குவம் எங்கே, பத்தி எங்கே, நான் எங்கே? நான் இனிச் சென்று ஆளாவது எப்படியோ திருக்காளத்தி அப்பனுக்கே' என்று ஏங்குகின்றார்; பத்திநெறிக்கு மிகுந்த பக்குவம் வேண்டும் என்பதனை எங்களுக்கும் உணர்த்துகின்றார்.

## வாழ்க்கை நிலையாமை

பக்குவத்தை வளர்க்கவல்ல மற்றொரு பசளை வாழ்க்கை நிலையாமை பற்றிய உணர்வு. இந்த உணர்வு உள்ளவருக்கு இறையுணர்வு தன்னாலேயே வரும். இந்த வாழ்க்கை நிலையில்லாதது, இன்று இருப்பவர்கள் நாளை இறப்பவர்களே என்றெல்லாம் எண்ணுகின்றபொழுது என்றும் உள்ள, எல்லாம் வல்ல இறைவனது பெருமை மேலிடுகின்றது.

> செல்வரைப் பின்சென்று உபசாரம் பேசித் தினந்தினமும்
> பல்லினைக் காட்டிப் பரிதவியாமற் பரானந்தத்தின்
> எல்லையிற் புக்குநல் ஏகாந்த மாயெனக் காம்இடத்தே
> அல்லல் அற்று என்று இருப்பேன் ஆலநீழல் அரும்பொருளே

என்று பட்டினத்தார் பாடுவதுபோல உலக வாழ்க்கையின் இழிவும் இறையருளின் சிறப்பும் தெரியவரும்.

> பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடை சுற்றி
> முத்தும் பவளமும் பூண்டோடி ஆடி முடிந்த பின்பு
> செத்துக் கிடக்கும் பிணத்தருகே இனிச் சாம்பிணங்கள்
> கத்தும் கணக்கென்ன காண் கயிலாபுரிக் காளத்தியே.

செத்த வீடு ஒன்றைப் பார்க்கின்றார் பட்டினத்தார். பத்துமாதம் தாய் வயிற்றிலிருந்து பிறந்து வளர்ந்து பட்டாடை உடுத்து, முத்துக்களாலும் பவளங்களாலும் ஆபரணங்கள் அணிந்து ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்த ஒருவர் செத்துக் கிடக்கின்றார். அவருக்கு இப்பொழுது பிணம் என்று பெயர். அந்தப் பிணத்தைச் சுற்றிப் பலர் கத்திக் குழறி அழுகின்றார்கள். அவர்கள் யார் தெரியுமோ? அவர்களும் ஒருநாளைக்குச் சாகப் போகின்றவர்கள்தாம்.

> ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
> மாண்டார் வருவரோ மாநிலத்தீர் – வேண்டாம்
> நமக்கும் அதுவழியே நாம்போம் அளவும்
> எமக்கென் னென்றிட்டுண் டிரும்.

என்கின்றார் அவ்வைப் பிராட்டியார்.

நாமும் இன்றைக்கோ நாளைக்கோ போக வேண்டியவர்தாம் என்று வாழாதிருக்க முடியுமா? வாழ்க்கை தொடர வேண்டும்; வளங்கள் பெருக்க வேண்டும்; அறங்கள் வளர்க்க வேண்டும். நல்வினை களைத் திரட்ட வேண்டும். அத்தோடு பொன்னம்பலவன் அடிசார்ந்து உய்ய வேண்டும். பிடிசாம்பராகப் போகும் உலகியல் வாழ்விலே தத்தளிக்கும் மனித குலம் கடையேற்றவல்ல கருணைக் கடவுளாகிய சிவபிரானைப் பற்றிச் சிந்திப்பதில்லையே என்று கவலைகொள்கின்றார் பட்டினத்து அடிகள்.

> **முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவில்ஒரு**
> **பிடிசாம்பராய் வெந்து மண்ணாவ துங்கண்டு பின்னுமிந்தப்**
> **படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லாற்பொன்னி னம்பலவன்**
> **அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறி வாரில்லையே.**

பட்டினத்தார் பாடல்கள் பெரிதும் வாழ்க்கை நிலையாமையை வலியுறுத்துவன. 'நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை' என்பது கண்டும் நாம் ஏதோ சாகாவரம் பெற்றவர்களைப்போல் சதிராடு கின்றோம். எல்லாம் எம்மாலேதான் நடைபெறுகின்றது என்று சன்னதங் கொள்கின்றோம்; சண்டைகள் பிடிக்கின்றோம்; தீவினைகளைப் பெருக்குகின்றோம். வாழ்க்கை நிலையாமை பற்றிய உணர்வு 'இந்த உலகம் ஒரு சிலருக்குமட்டும் உரியதன்று. எல்லோருக்கும் உரியது. இந்த வாழ்க்கை எம்மால் வந்ததன்று. இறைவனால் வந்தது' என்பன போன்ற சிந்தனைகளுக்கு எம்மை இட்டுச் செல்லும்; சீரிய வாழ்க்கை முறையில் நிற்கச் சொல்லும்; உள்ளப் பக்குவத்தை உயர்த்திக் கள்ளப் புலன்களைக் கட்டி வைக்கும் வல்லமையை எமக்கு அளிக்கும்.

பக்குவம் மிகுந்த பட்டினத்தார் பாடல்களைப் படித்து நாமும் உள்ளப் பக்குவத்தைப் பெறுவோமாக! வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வங்களாகத் திகழ்வோமாக! உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய வனின் மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவோமாக!

# 11

# அருணகிரிநாதரின் அற்புதத் திருப்புகழ்

தமிழின் பரந்த பத்தி இலக்கியத்திலே திருப்புகழ் தனியிடத்தைப் பெறுகின்றது. திருப்புகழ் அருணகிரிநாத சுவாமிகளாற் பாடியருளப்பெற்றது. அவர் திருவகுப்பு, கந்தர் அந்தாதி, கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, வேல்மயில் சேவல் விருத்தங்கள் என்று வேறும் ஐந்து நூல்களை ஆக்கியுள்ளார். எனினும் அருணகிரிநாதர் என்றால் எமக்கு முதலிற் சொல்லத் தோன்றுவது திருப்புகழே. திருப்புகழ் என்றால் எம் கண்முன் காட்சியளிப்பவர் முருகப் பெருமானே!

**வரலாறு**

அருணகிரிநாதரை முருகப் பெருமான் ஆண்டுகொண்டருளிய சம்பவம் அற்புதமானது. தெய்வ சம்பந்தம் என்றால் அற்புதம் இல்லாமலா போகும்?

அருணகிரிநாதர் ஏழத்தாழ ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் நினைக்க முத்தியளிக்கும் திருவண்ணாமலையிலே அவதரித்தவர். உலகியல் வாழ்வால் விளைந்த துன்பங் காரணமாக வாழ்க்கையில் வெறுப்புற்று திருவண்ணாமலைச் சந்நிதானத்திலே வல்லாள மன்னனாற் கட்டப்பெற்ற கோபுரத்தின் உச்சியிலிருந்து குதித்து உயிரைப் போக்கிக் கொள்ள முயன்றபோது அந்த அற்புதம் நடந்தது. கோபுரத்துக்கு வடக்காகக் கோயில் கொண்டிருக்கும் குமரப் பெருமான் குருவடிவத்திலே தோன்றி விழுந்த

அருணகிரிநாதரைத் தமது திருக்கரத்தால் தாங்கி “சும்மா இரு சொல்லற” என்று வாசக தீட்சையளித்து மறைந்தருளினார்.

குருவருள் பெற்ற அருணகிரிநாதர் துறவு பூண்டு கடுந்தவம் இருந்து அனுபூதிச் செல்வராயினார். ஒருநாள் முருகப் பெருமான் மயில்மீது அவர்முன் தோன்றி “அருணகிரி! நமது புகழைப் பாடு” என்று பணித்தருளினார். அது கேட்ட அருணகிரிநாதர் விதிர்விதிர்த்து வணங்கி, “பெருமானே! மாலும் அயனும் ஏனைய வானவரும் அறியவொண்ணா நின்னைப் படிப்பறிவில்லாத பாவியேன் எங்ஙனம் பாடுவேன்” என்று பணிந்தார். அப்போது மற்றுமோர் அற்புதம் நடந்தது.

முருகப் பெருமான் அவருடைய நாவிலே வேலினால் பிரணவ மந்திரத்தை எழுதி “முத்தைத்தரு என்று தொடங்கிப் பாடுவாயாக” என்று பணித்தருளினார்.

அவ்வளவில் கல்வி அறிவோ கேள்வி அறிவோ சிறிதும் இல்லாத அருணகிரிநாதர் ‘அறிவுமறி தத்துவமும் அபரிமித வித்தைகளும்’ நன்கு தேறித் தெளிந்தவராய் மின்னாமல் முழங்காமற் சோவெனச் சொரியும் மேகம்போல் அற்புதச் சந்தத் தமிழை அள்ளிப் பொழியலானார்.

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபரன் எனவோதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் அடிபேணப்

பத்துத்தலை தத்தக் கணைதொடும்
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாகப்

பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ஒருநாளே

தித்தித்தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப் பதம் வைத்துப் பயிரவி
திக்கொக்கந டிக்கக் கழுகொடு கழுதாடத்

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகட எனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை

கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே.

## திருப்புகழ் முருகன் தமிழ்

இவ்விதம் சந்தம் அமைத்துப் பாடும் வல்லமையையும் அருணகிரி நாதர் முருகப் பெருமானிடமிருந்து பெற்றார். அருணகிரிநாதரின் தமிழ் முருகப் பெருமானின் தமிழேயாகும். இதனையே 'அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க அரியதமிழ் தானளித்த மயில்வீரா' என்று திருவேரகத்திற் பாடுகின்றார்.

முருகப் பெருமான் தமிழ்க் கடவுள்; தமிழ் அறிந்த கடவுள்; தமிழே வடிவான கடவுள். அவரது கண்கள் பன்னிரண்டும் உயிர் எழுத்துக்கள். திருக்கரத்தில் உள்ள வேலாயுதம் ஆயுத எழுத்து. மெய் எழுத்துக்கள் பதினெட்டும் அவரது மெய்யாக - திருமேனியாக வுள்ளன. கரங்கள் பன்னிரண்டு, மார்பு ஒன்று, வயிறு ஒன்று, கால்கள் இரண்டு, பாதங்கள் இரண்டு என்று கணக்கிட்டால் மெய்யெழுத்துத் தொகைவரக் காணலாம். வேறுவிதமாகவும் பெருமானின் திருமேனியை முகந்து கணக்குக் காட்டும் அடியவரும் உளர். காண்பார் காணுமாறு காட்சி அளிப்பவன் முருகப் பெருமான்.

## திருமுருகக் காட்சிகள்

அருணகிரிநாதருக்கு மற்றுமொரு காட்சி கிடைத்தது. அவர் வயலூருக்குச் சென்று அங்குள்ள சத்தி தீர்த்தத்தில் நீராடி முருகனைத் தொழுது ஏத்துகையில் பெருமான் அவருக்குக் காட்சிகொடுத்து அருளினார். வயலூரில் தமக்குக் கிடைத்த இந்த அற்புதக் காட்சியைப் பல திருப்புகழ்களில் குறிப்பிட்டிருக்கின்றார் அருணகிரிநாதர். அவற்றுள் ஒன்று இது:

தாமரையின் மட்டு வாசமலர் ஒத்த
தாளிணைநி னைப்பில் அடியேனைத்
தாதவிழ்க டுக்கை நாகமகிழ் கற்ப
தாருவென மெத்தி யவிராலி
மாமலையில் நிற்ப நீகருதியுற்று
வாவெனஅ ழைத்தென் மனதாசை
மாசினைய றுத்து ஞானமுத ளித்த
வாரமினி நித்த மறவேனே
காமனையெ ரிந்த தீநயன நெற்றி
காதியசு வர்க்க நதிவேணி
கானிலுறை புற்றில் ஆடுபணி யிட்ட
காதுடைய அப்பர் குருநாதா
சோமனொட ருக்கன் மீனுலவு மிக்க
சோலைபுடை சுற்று வயலூரா
சூடியத டக்கை வேல்கொடுவி டுத்து
சூர்தலைது ணித்த பெருமாளே.

மாமலை - திருவண்ணாமலை. திருவண்ணாமலையில் தங்கிய தன்னை 'வயலூருக்கு வா' என்று அழைத்து முருகப் பெருமான் காட்சி தந்து மனத்து மாசுகளை அறுத்து ஞானமாகிய அமுதத்தை அளித்த உரிமைப்பாட்டை ஒருநாளும் மறவேன் என்று உருகுகின்றார் அருணகிரிநாதர்.

மூன்றாவது அற்புதம் பழநியில் நிகழ்ந்தது. அவரே பாடுகின்றார்:

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே

உபதேச மந்திரப் பொருளாலே
உனைநான் நினைந்தருள் பெறுவேனோ
இபமாமு கன்தனக் கிளையோனே
இமவான் மடந்தையுத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமாளே.

பழநிக்குரிய பல பெயர்களிலே திருவாவினன்குடி என்பதுவும் ஒன்று. அங்கு தமது குருநாதராகிய முருகப் பெருமான் எழுந்தருளித் தமக்குச் செபமாலை கொடுத்தருளிய அற்புதத்தை இந்தப் பாடலிற் குறிப்பிடுவதைப் பார்க்கின்றோம்.

முருகப் பெருமானுடைய படைவீடுகள் ஆறு. அவை திருப்பரங் குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவாவினன்குடி(பழநி), திருவேரகம் (சுவாமி மலை), குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்பன.

இவற்றுள் இரண்டாவது படைவீடான திருச்சீரலைவாயில், அதாவது திருச்செந்தூரில் அருணகிரிநாதர் முருகப் பெருமானைப் பாடித் துதிக்கையில் பெருமானின் திருநடன தரிசனம் பெற்றார். இதனை

புண்டரிகர் அண்டமும் கொண்டபகி ரண்டமும்
பொங்கியெழ வெங்களம் கொண்டபோது
பொன்கிரியெ னஞ்சிறந் தெங்கினும்வ ளர்ந்துமுன்
புண்டரிகர் தந்தையுஞ் சிந்தைகூரக்
கொண்டநட னம்பதஞ் செந்திலிலும் என்றன்முன்
கொஞ்சிநட னங்கொளும் கந்தவேளே
கொங்கைகுற மங்கையின் சந்தமணம் உண்டிடுங்
கும்பமுனி கும்பிடுந் தம்பிரானே.

என்ற திருப்புகழால் அறிகின்றோம். செந்திலிலும் - திருச் செந்தூரிலும் என்று கூறியமைக்கு ஒரு காரணம் உண்டு. அவர் தில்லை, திருத்தணிகை, கொடுங்குன்றம் போன்ற பிற தலங்களிலும் ஆறுமுகப் பெருமானின் அற்புத நடனத்தைக் கண்டு களித்த பேறு பெற்றவராதலால் அத்தலங்களிலும் இங்கும் நினது திருநடனக் காட்சியைத் தந்தருளிய கந்தவேளே என்று கூறிக் களிக்கின்றார்.

## அருணகிரியார் அற்புதங்கள்

அரிதினும் அரிய முருகப் பெருமானின் காட்சிகளும் அருள் பாலிப்புக்களும் ஒருபுறமிருக்க, அருணகிரிநாதரே முருகப் பெருமானின் அருளால் அற்புதங்கள் செய்து காட்டிய சம்பவங்களும் நிகழ்ந்திருக்கின்றன.

அருணகிரிநாதருக்கு கலிசைச் சேவகனார் என்ற ஒரு சிறந்த நண்பர் பழநியில் இருந்தார். அவர் ஒரு சிற்றரசர்; பெரிய முருக பத்தர். அவருக்கு ஒருமுறை தலைவலி காய்ச்சல் வந்தது. எம் மருந்தாலும் அதனை மாற்ற முடியாது நண்பர் துன்புற்றார். அருணகிரிநாதர் ‘தலைவலி மருத்தீடு காமாலை சோகைசுரம்’ என்று தொடங்கும் திருப்புகழைப் பாடித் தமது நண்பரின் நோயைப் போக்கியருளினார்.

ஒருமுறை திருவண்ணாமலையிலே காளி பத்தராகிய சம்பந்தாண்டான் என்பவருடன் வாது செய்து, சிவகங்கைக்கு அருகில் உள்ள பதினாறுகால் மண்டபத்தின் வடகீழ் தூணில் இருந்து முருகப்பெருமானை யாவரும் காணும்படி வரவழைத்தருளினார். அப்பொழுது அவர் பாடிய திருப்புகழ் இது:

அதல சேட னாராட அகில மேரு மீதாட
அபின காளி தானாட அவளோடன்(று)
அதிர வீகி வாதாடும் விடையில் ஏறு வாராட
அருகு பூத வேதாளம் அவையாட
மதுர வாணி தானாட மலரில் வேத னாராட
மருவு வானா ளோராட மதியாட
வனச மாமி யாராட நெடிய மாமனாறாட
மயிலும் ஆடி நீயாடி வரவேணும்
கதைவி டாத கோள்வீமன் எதிர்கொள் வாளி யால்நீடு
கருத லார்கள் மாசேனை பொடியாகக்
கதறு காலி போய்மீள விசயன் ஏறு தேர்மீது
கனக வேத கோடுதி அலைமோதும்
உத்தி மீதி லேசாயும் உலக மூடு சீர்பாத
உவண மூர்த்தி மாமாயன் மருகோனே

உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராசன்
உளமும் ஆட வாழ்தேவர் பெருமாளே.

இவ்விதமாகத் திருப்புகழ் ஒவ்வொன்றும் முருகப் பெருமானின் அருளில் விளைந்த அமுதக் கனியாக - அற்புதச் சந்தப் பாடலாக அமைந்துள்ளது.

## உலக சாதனை

சந்தப்பாடல் அல்லது சந்தப்பா என்பது நான்கு எழுத்து முதல் இருபத்தாறு எழுத்து வரையுள்ள அடிகள் நான்கு கொண்ட பாவகை. சந்தம் என்பது செய்யுள் வண்ணம்.

வண்ணம் - ஓசை. எனினும் வண்ணம் வேறு சந்தம் வேறு என்று கருதும் இலக்கணகாரரும் உள்ளனர். அவர்கள் வண்ணம் தமிழ் மொழிக்கே உரியதென்றும் சந்தம் வடமொழிக்கு உரியதாய்த் தமிழ் மொழியிலும் வழங்கப்படுவது என்றும் கூறுவர். ஆயினும் எழுத்துச் சார்ந்து நிற்கும் வகையினாலே வண்ணமும் எழுத்துக்களின் அளவு மாத்திரை முதலியவற்றால் சந்தமும் இசையைத் தோற்றுவிப்பதால், இசை இரண்டுக்குமுள்ள பொது இயல்பாகின்றது. திருப்புகழில் வடமொழிச் சொற்களும் கலந்து வருவதால் வடமொழிக்குரிய சந்தம் அதற்குப் பொருத்தமாகின்றது எனலாம்.

எது எவ்வாறாயினும் திருப்புகழ் தமிழ் இலக்கியத்திலே தனித்துவமான ஓர் இடத்தை வகிக்கின்றது. தமிழ் உலகில் மட்டுமல்லாது உலக அளவிலும் அதற்குப் பெருமதிப்பு உண்டு. திருப்புகழை ஒத்த சந்தத் தோத்திரப் பாடல்கள் வேறு எந்த மொழியிலும் இல்லை என்பது பன்மொழி வல்லாளர் கருத்தாகும்.

அந்த அளவுக்கு அருணகிரிநாதரின் சாதனை உலகளாவி நிற்கின்றது. அந்தப் பெருமை முருகப் பெருமானுக்குரியது. அவனும் உலகளாவி நிற்கின்ற - அண்டங்களாகியும் அவற்றைக் கடந்தும் நிற்கின்ற ஆண்டவன்தானே.

## முருக பத்தி

அருணகிரிநாதர் முருகனால் ஆட்கொள்ளப்பட்டு, முருகனையே வழிபடும் நியமத்தில் நின்றவர். முருகன் புகழைப் பாடிக் களிப்பதிலேயே வாழ்நாளைக் கழித்தவர். அப்படிப் பாடுகையில் முருகனோடு தொடர்பு பட்ட மற்றைய கடவுளரையும் போற்றுவதில் இன்பம் கண்டவர். தமிழ் நாட்டில் உள்ள முருக தலங்கள் என்றில்லாது வடநாட்டுத் தலங்களுக்கும் சென்று திருப்புகழ் பாடினார். ஈழத்துத் திருக்கோணமலை, கதிர்காமம் ஆகிய திருத்தலங்கள் பற்றியும் பாடியிருக்கின்றார். திருக்கோணமலை பற்றி ஒரு பாடலும் கதிர்காமம் பற்றி பதின்மூன்று பாடல்களும் திருப்புகழில் உள்ளன. பின்வருவது கதிர்காமப் பெருமானைப் பற்றிய நான்காவது திருப்புகழ்:

எதிரி லாத பத்தி — தனைமேவி
    இனிய தாள்நி னைப்பை — இருபோதும்
இதய வாரி திக்குள் — உறவாகி
    எனது ளேசிறக்க — அருள்வாயே
கதிர காம வெற்பில் — உறைவோனே
    கனக மேரு வொத்த — புயவீரா
மதுர வாணி யுற்ற — கழலோனே
    வழுதி கூனிமிர்த்த — பெருமாளே.

## திருப்புகட் பெருமை

திருப்புகழின் பெருமை பேசி முடியாது. அது ஓதி உணரப்பட வேண்டியது; கேட்டுத் தெளியப்பட வேண்டியது. திருப்புகழை ஓதுதலும் ஓதுவதைப் பத்தியோடு இருந்து கேட்பதும் ஆன்ம ஈடேற்றத்துக்கு அருமையான வழிபாட்டு முறைகள். திருப்புகழில் தினம் தோய்பவர்க்கு வேறு வேதம் வேண்டாம்; வித்தைகள் வேண்டாம்; கீத நாதம் வேண்டாம்; ஞான நூல் வேண்டாம். ஏனெனில் இவை யாவும் திருப்புகழில் அடக்கம்.,

திருப்புகழால் ஆகும் பயன்களைத் திருப்புகழ்ச் சிறப்புப்பாயிரம் விரித்துக் கூறுகின்றது. அதில் உள்ள பாடல்களில் மூன்று கூறும் பயன்கள் இவை:

ஞானம் பெறலாம் நலம்பெறலாம் எந்நாளும்
வானம் அரசாள் வரம்பெறலாம் - மோனவீ(டு)
ஏறலாம் யானைக் கிளையான் திருப்புகழைக்
கூறினார்க் காமேயிக் கூறு.

ஆறுமுகந் தோன்றும் அழகியவேல் தோன்றுமவன்
ஏறுமயில் தோன்றும் எழில்தோன்றும் - சீறிவரு
சூரன் முடியைத் துணித்தோன் திருப்புகழைப்
பாரில் வழுத்தினோர் பால்.

திருப்புகழைக் கற்கத் திருப்புகழைக் கேட்கத்
திருப்புகழை நித்தஞ் செபிக்கத் - திருப்புகழை
அர்ச்சிக்க முத்தியெளி தாகுமே கூற்றைவென்று
கெர்ச்சிக்க லாமே கெடீ.

இத்தகைய பயன்கள் கருதித் திருப்புகழைப் படிப்பதிலும் முருகப் பெருமான் மீது அன்போடு உறவாடப் படிப்பதே சிறப்புடையது. பத்தியோடு திருப்புகழைப் பாடி முருகப் பெருமானைப் பரவினால் அவன் அருளாலே பயன்கள் தாமாக வந்து குவியும் என்பதையே அருணகிரிநாதர் அனுபவம் காட்டுகின்றது.

## அருணகிரிநாத சுவாமிகள் துதி

விருப்புடன் உபய சரணமென் மலரை
வேண்டுவார் வேண்டுவ தளிக்கும்
பொருப்புகள் தோறும் நின்றருள் ஒருவன்
புகழினை அகநெகப் புகன்று
கருப்புகு தாத கதிதனைக் காட்டும்
கலையுணர் புலவர்கள் திலகம்
திருப்புகழ் அருண கிரியெம தடிகள்
திருவடி குருவடி வாமே.

# 12

# அமாவாசையை முழுமதியாக்கிய அபிராமிப் பட்டர்

வடவேங்கடம் தென்குமரியாகிய எல்லைகளுக் கிடைப்பட்டிருந்த தமிழ் கூறும் நல்லுலகங்களில் ஒன்று சோழநாடு. ஆதிமாதவ முனிவராகிய அகத்தியரின் கமண்டலத்திலிருந்து பிறந்த காவிரி ஆறுபாயுஞ் சிறப்புடையது. நீர்வளம், நிலவளம் என்பவற்றுடன் கலைவளமும் நிறைந்த சோழநாடு, அழகிலும் ஆடலிலும் பாடலிலுஞ் சிறந்த 'பிறப்பிற் குன்றாப் பெருந்தோள் மடந்தை' மாதவி பிறந்த நாடுமாகும்.

மாதவி பிறந்த திருக்கடவூர் மாயவரத்திலிருந்து காவிரிப்பூம் பட்டினம் செல்லும் வழியில் அமைந்திருக்கின்றது. திருக்கடவூர் அமிர்தகடேசர் அபிராமி அம்மையுடன் எழுந்தருளியிருக்கும் பெருமையுடையது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய நாயன்மார்கள் மூவரும் பாடித் துதித்த திருத்தலம் இது. இத்தகை புகழ்மிக்கத் திருவிடத்திலே அந்தணர் குலத்திலே ஏறத்தாழ 310 ஆண்டுகளுக்குமுன் அவதரித்தவர் அபிராமிப்பட்டர். அபிராமிப்பட்டரின் இயற்பெயர் சுப்பிரமணியன் என்பது. அவரின் தந்தையார் அமிர்தலிங்க அய்யர். அவர் கல்வியிலும் ஒழுக்கத்திலும் இறைவழிபாட்டிலும் சிறந்தவர். தம்மைப்போலவே தமது மகன் சுப்பிரமணியனையும் கல்வி கேள்விகளில் வல்லவராக்கினார்; இசைக்கலையையும் பயிற்றுவித்தார்.

## பத்தி நிலை

சுப்பிரமணியர் சிறுவயது முதலாகவே சிவபத்தியிற் சிறந்து

விளங்கினார். அபிராமி அம்பிகையின் மீது அளவற்ற அன்புடையவராகத் திகழ்ந்தார். சத்திக்குரிய பூசைமுறைகளை அறிந்திருந்தாராயினும் தியானத்தில் இருந்து சத்தியை அகத்தில் வழிப்பாடு செய்வதில் இன்பங் கண்டார். நாளடைவில் யோகசித்தி எய்தி ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதிலும் பொருந்தி நவசத்தியாக விளங்குகின்ற அபிராமியின் அழகிலும் அருளிலும் ஒன்றித் திளைக்கலானார்; அவளோடு பேசிக் களிக்கலானார். இதனால் மற்றயை அந்தணர்களும் ஓதுவார்களும் ஆலயப் பணியாட்களும் அவரது மனநிலையிற் சந்தேகமுற்று ஒதுங்கி நடக்கலாயினர்.

யாழ்ப்பாணத்தவர் யோகர் சுவாமிகளின் குருவாகிய செல்லப்பா சுவாமிகளை விசர்ச் செல்லப்பா என்று அழைத்ததைப் போலவே சுப்பிரமணியரையும் அக்காலத்திற் பலர் பித்தர் என்று அழைத்தனர். "என்னை எனக்கு அறிவித்தான் எங்கள் குருநாதன்" என்று பாடினார் யோகர் சுவாமிகள். சுப்பிரமணியரும் அபிராமியின் அருளால் தன்னை நன்றாகவே அறிந்து கொண்டு தன்பாட்டில் 'சும்மா' இருந்தார்; உள்ளத்தில் அம்பிகையைக் கண்டு தெளிந்து, அவளோடு உறவாடிக் கொண்டிருந்தார். அந்த இன்பம் முத்தி இன்பத்துக்கு இணையானது. வாழும் பொழுதே அனுபூதியினால் முத்தி இன்பத்திலே திளைப்பவருக்கு 'சீவன் முத்தர்' என்று பெயர். சீவன் முத்தருக்கு இவ்வுலக இன்பத்தில் மூழ்கி இருப்பவர் பைத்தியராகத் தெரிவர். இவ்வுலக இன்பத்தவருக்கு அவ்வுலக இன்புத்தவர் பைத்தியர் போலத் தென்படுவர்.

உலகத்தவருக்குப் பைத்தியமாகத் தெரிந்த சுப்பிரமணியரின் உள்ளப் பக்குவத்தை உலகம் அறிந்து வியக்கும் சம்பவம் ஒன்று ஒருநாள் திருக்கடவூரில் அம்பிகையின் அருளால் நடந்தது.

## அரசரும் அடியவரும்

அந்தக் காலத்தில் அரசராக இருந்தவர் சரபோஜி எனப்படும் மராட்டிய இனத்தவர். தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு நீதி வழுவா நெறிமுறையில் ஆட்சி புரிந்துவந்த சரபோஜி மன்னர் பெருங் கடவுள் பத்தர்.

ஒருமுறை அவர் தைமாத அமாவாசையை முன்னிட்டுக் காவிரிப்பூம்

பட்டினஞ் சென்றிருந்தார். அங்கு காவிரி சங்கமத்தில் நீராடிவிட்டுத் திரும்புகையில் திருக்கடவூர்க் கோயிலுக்குச் சென்றார்.

அவ்வேளை கோயிலின் ஒரு புறத்தில் அபிராமி அம்பிகையின் அடியார் சுப்பிரமணியர் யோகநிலையில் தியானத்தில் இருந்தார். எல்லோரும் உரிய மரியாதைகளோடு மன்னரை வரவேற்று நிற்க, வரவேற்பிற் கலந்து கொள்ளாது தனியாக இருந்த அடியார் மன்னரின் கவனத்தை ஈர்த்தார். மன்னர் அவரைப்பற்றி விசாரித்தபோது ஒருவர் "அவர் ஒரு பைத்தியம்" என்றார். அதனைச் சோதித்துப் பார்க்க விரும்பிய மன்னர் அடியவர் பக்கஞ் சென்று, "அடியவரே இன்று என்ன திதி" என்று வினவினார். அம்பிகையின் முழுமதிபோன்ற அழகு முகத்தை அகக்காட்சியிற் கண்டு இன்புற்றிருந்த அடியவர் "பௌர்ணமி" என்று முணுமுணுத்தார். அவர் அம்பிகையைப் பற்றிச் சொன்னது அரசரது கேள்விக்கும் பதிலாக அமைந்துவிட்டது. அமாவாசையைப் பௌர்ணமி என்றதால் அவரின் மனோநிலை சரியில்லை என்பதை மன்னர் உணர்ந்து கொண்டார்.

மன்னர் முன்னிலையில் அமைதியாக இருந்த மக்களிற் சிலர் மன்னர் சென்றபின் சுப்பிரமணியர் சொன்ன பதில் குறித்துச் சிரித்துப் பரிகாசஞ் செய்தனர். அவர்கள் போட்ட சத்தம் சுப்பிரமணியரை இவ்வுலகத்துக்குக் கொண்டு வந்தது. நடந்ததை அறிந்து நாணமுற்றார். மன்னருக்கு அமாவாசையைப் பௌர்ணமி என்று பிழையாகச் சொல்ல வைத்த அபிராமி அன்னையை நொந்து கொண்டார். அவளின் அருளைக் கொண்டே தனக்கு நேர்ந்த பழியைப் போக்கவும் உறுதி பூண்டார்.

அபிராமியின் சந்நிதிமுன் ஆழமான கிடங்கு ஒன்றை வெட்டி அதில் விறகுகளை அடுக்கித் தீ மூட்டினார். அதன்மேல் ஒரு பந்தர் அமைந்து, அதில் நூறு கயிறுகள் கொண்ட உறி ஒன்றைத் தொங்கவிட்டு அதன் அடித்தட்டில் ஏறி அமர்ந்து கொண்டார். "யான் உரைத்த பொய்யினால் ஏற்பட்ட பழியைப் போக்கிக் கொள்ள அபிராமி அம்மை அருள் செய்யாது போனால் உறியின் கீழே எரிந்து கொண்டிருக்கும் தீயில் விழுந்து உயர் துறப்பேன்" என்று சபதஞ் செய்து அபிராமிமீது அந்தாதி பாடத் தொடங்கினார்.

## அபிராமி அந்தாதி

அந்தம் என்றால் முடிவு. ஆதி என்றால் தொடக்கம். 'அந்தாதி' என்னும் பிரபந்த வகையில் ஒரு செய்யுள் எந்தச் சொல்லில் முடிகிறதோ அந்தச் சொல்லில் அடுத்த செய்யுள் தொடங்குதல் வேண்டும்.

முதல் வணக்கத்தை விநாயகப் பெருமானுக்குச் செலுத்தி நூலைப் பத்தி வைராக்கியத்துடன் பாடத் தொடங்குகின்றார் சுப்பிரமணியர்.

**உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்**
**மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை**
**துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்குமத் தோயமென்ன**
**விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழித்துணையே.**

இப்பாடலிலே அந்தமாக வருஞ் சொல் 'துணை' என்பது. இந்தச் சொல்லை ஆதிச் சொல்லாக - முதற் சொல்லாக வைத்து அடுத்த பாடலைப் பாடுகின்றார்:

**துணையும் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயும் சுருதிகளின்**
**பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலப்பூங்**
**கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமுங்கையில்**
**அணையும் திரிபுர சுந்தரி யாவ(து) அறிந்தனமே.**

இவ்வாறு பாடிவருகையில் ஒவ்வொரு பாடல் முடிவிலும் ஒவ்வொரு கயிற்றை அறுத்துக்கொண்டே சென்றார் சுப்பிரமணியர். கதிரவன் மறைந்து இருளும் சூழ்ந்து கொண்டது.

எழுபத்தொன்பதாவது பாடல் முடிவில் ஊரும் உலகும் வியக்கும் வகையில் ஓர் அற்புதம் நிகழ்ந்தது.

**விழிக்கே அருளுண்(டு) அபிராம வல்லிக்கு வேதஞ்சொன்ன**
**வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்குமே வழிகிடக்கப்**
**பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்**
**குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே.**

இப்பாடல் நிறைவுற்றபொழுது அண்டம் அனைத்தையும் காத்தருளும் அன்னை, குளிர்ந்த மலர் அம்பினையும் கருப்பு வில்லையும் பாசாங்குசத்தையும் தாங்கும் திரிபுரசுந்தரி, திருக்கடவூரின் கண்ணே அமிர்தகடேசருடன் எழுந்தருளியிருக்கும் அபிராமி அம்மை, சுப்பிரமணியரின் உள்ளக் கமலத்திலே வீற்றிருக்கின்ற ஒப்பில்லா அமுதவல்லி தமது அடியவருக்கு எல்லாம் வல்ல அமிர்தகடேசருடன் காட்சியளித்தார். தமது திருச்செவியில் விளங்கும் ஒப்பற்ற தண்ணொளி வீசுகின்ற தோட்டைக் கழற்றி வானத்தில் வீசி முழு நிலாவாக நிறுத்தினார். அந்தத் திருவொளியைக் கண்டு யாவரும் வியப்பெய்திக் களிப்புற்றுக் கை கூப்பித் தொழுதனர்.

அப்பொழுது அன்னை அபிராமி தமக்கு இனிய அடியாராகிய சுப்பிரமணியரை நோக்கி "அன்பிற் சிறந்த மைந்தனே! நீ மன்னனுக்குச் சொன்ன சொல் மெய்யெனக் காட்டினோம். தொடர்ந்துன் பத்திமிகு அந்தாதியைப் பாடி முடிப்பாயாக!" என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார். அபிராமி அன்னையின் அடியவரும் அவ்விதமே பாடி நூறு பாடல்களில் நூலை நிறைவு செய்தார்.

## அபிராமிப்பட்டர்

அமாவாசை நாளிலே முழுமதியாகச் சந்திரன் தோன்றித் தண்ணொளி செய்தமை கண்டு சரபோஜி மன்னர் பெருவியப் பெய்தினார். அபிராமி மீது அளவிலா அன்பு கொண்ட சுப்பிரமணியருக்கு 'அபிராமிப்பட்டர்' என்ற சிறப்புப் பெயரைச் சூட்டிப் பொன்னும் பொருளும் வழங்கியதோடு ஏராளமான காணிநிலங்களையும் மானியமாகக் கொடுத்துப் பெருமைப் படுத்தினார். அத்துடன் அவர் பாடியருளிய 'அபிராமி அந்தாதி' யை யாவரும் பாடி, அம்பிகையை வணங்க வேண்டும் என்றும் பணித்தார்.

## பத்தி வைராக்கியம்

அபிராமிப்பட்டர் சத்தியையே சதா வழிபட்டு அருள்பெற்றவர். மாணிக்கவாசகர் திருவாசகத்திலே 'கொள்ளேன் புரந்தரன் வாழ்வு

குடிகெடினும்' என்று சிவபெருமானுக்கு உரைத்ததுபோலவே இவரும் அம்பிகைக்கு இப்படிச் சொல்கிறார்:

**கொள்ளேன் மனத்தில்நின் கோலமல் லாதன்பர் கூட்டந்தன்னை**
**விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்(கு)**
**உள்ளே அனைத்தினுக் கும்புறம் பேயுள்ளத் தேவிளைந்த**
**கள்ளே களிக்கும் களியே அளியவென் கண்மணியே.**

இது பக்தி வைராக்கியத்தின் வெளிப்பாடு. பத்தி வைராக்கியம் என்பது குலதெய்வத்தையன்றிப் பிறதெய்வத்தை வணங்காத உறுதிப்பாடு.

சிவசத்தி வழிபாடு

எனினும் சிவன் இன்றிச் சத்தியில்லை, சத்தியின்றிச் சிவன் இல்லை என்பதை அபிராமிப்பட்டர் அறியாதவரல்லர். சிவபெருமான் அடியார்களுக்குக் காட்சி கொடுக்கையில் எப்பொழுதும் உமாதேவியாருடன் இடபவாகனராக எழுந்தருளுவதே வழக்கம். மேலும் சிவனின் இடப்பாகம் சத்தியின் திருப்பாகம். அதனால் சிவனைப் புறக்ணித்துச் சத்தியை வணங்குவதால் பயன் ஒன்றும் ஆகாது என்பதனைச் சத்தி வழிபாட்டுக்காரர் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

ஒரு கலியாண வீட்டுக்குக் கணவனை அழையாமல் மனைவியை மட்டும் அழைக்கும் வழக்கம் எங்கள் சமூகத்திலே இல்லை. அப்படித்தான் அழைத்தாலும் அந்த அழைப்பை ஓர் அவமானமாகவே மனைவி கருதுவாள். கணவன் இன்றிக் கலியாண வீட்டுக்கு அவள் தனியாக வரமாட்டாள் என்பது எமக்கு நன்கு தெரிந்ததொன்று.

இந்த வழக்கம் அம்மை அப்பருக்கும் பொருந்தும். தந்தையை அழைக்காமல் தாயை மட்டும் வீடுகுடிபூரலுக்கு அழைத்தால் அவள் வருவாளா?

இந்த நடைமுறைத் தத்துவத்தை நன்கு அறிந்த அபிராமிப்பட்டர் தமது வீடுகுடிபூரலுக்கு - அதாவது தமது உள்ளமாகிய

கோயிலிலே குடியேறுவதற்கு அம்பிகையை எப்படி அழைக்கிறார் பாருங்கள்:

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயுமென் புந்தியெந் நாளும்பொ ருந்துகவே.

'மனிதரும் தேவரும் கவலைகளைக் கடந்த முனிவரும் முந்திவந்து தலைகுனிந்து வணங்கும் அழகிய சிவந்த திருவடிகளையுடைய மாணிக்கம் போன்ற அன்னையே! கொன்றை மாலை அணிந்த நீண்ட சடையிலே குளிர்ச்சியைத் தருகின்ற பிறையையும் பாம்பையும் கங்கையையும் தாங்கியிருக்கும் தூய்மையே வடிவான சிவபெருமானும் நீயும் எனது மனத்திலே குடிபுகுந்து நீங்காது வீற்றிருக்க வேண்டுகின்றேன்' என்பது இப்பாடலின் பொருள்.

'புனிதரும் நீயும் என் புந்தி எந்நாளும் பொருந்துகவே' என்று அழைக்கின்றார். சிவபெருமானை முதலிற் குறிப்பிட்டு அவரோடு அம்மையாரை அழைக்கும் அழகை, முறையைக் கவனித்தல் வேண்டும்.

இவ்விதமே மேலும் பல இடங்களிற் சிவனோடு சேர்த்து அபிராமி அம்மை போற்றப்படுவதைப் பார்க்கின்றோம்.

அதிசய மான வடிவுடை யாரை விந்தமெல்லாம்
துதிசய ஆனன சுந்தர வல்லி துணையிரதி
பதிசய மான(து) அபசய மாகமுன் மார்த்தவர்தம்
மதிசய மாகவன் றோவாம பாகத்தை வவ்விய தே.

இப்பாடலில், 'இரதி மணவாளனாகிய மன்மதன் பெற்ற வெற்றிகள் எல்லாம் தோல்விகளாகும்படி நெற்றிக் கண்ணைத்திறந்து பார்த்த சிவபெருமானின் மனத்தைக் குழையச் செய்து அவரது இடப்பாகத்தில் இடம்பிடித்துக் கொண்ட ஆற்றல் படைத்தவள் அதிசயமான அழகுடைய அபிராமி' என்று அதிசயிக்கின்றார் அபிராமிப்பட்டர்.

குறித்தேன் மனத்தில்நின் கோலமெல் லாம்நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிட்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப் பிரானொடு
கூற்றைமெய்யில்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே.

என்னும் பாடலில், 'வண்டு மொய்க்கும் தேனோடு கூடிய கொன்றை மாலையைச் சூடியே சிவபெருமானின் இடப்பாகத்திற் குடிபுகுந்த அம்மையே! உன் குறிப்பறிந்து, இயமன் வரும் வழியைக் கண்டுகொண்டு அவன் என்னை வந்து அடையா வண்ணம் தடுத்து விட்டேன்' என்றார். 'நின் குறிப்பறிந்து' என்ற தொடரைக் கவனித்தல் வேண்டும். அபிராமியின் திருவருட் குறிப்பை நன்கு அறிந்தவர் அபிராமிப்பட்டர். அதனாலேதான் சிவனோடு சேர்த்து அபிராமியை வணங்குகின்றார். சிவனை விடுத்து அம்மையை மட்டும் வணங்கினால் அவள் அருளமாட்டாள் என்பதை அம்மையின் திருவருட் குறிப்பினாலேயே உணர்ந்து கொண்டவர் அவர்.

## சித்திக்கும் நன்மைகள்

சிவபெருமானோடு சேர்த்து 'நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும்' அபிராமியை நினைந்துருகும் அன்பருக்கு அன்னை அள்ளிச் சொரியும் நன்மைகள் சொல்லில் அடங்கா.

சொல்லும் பொருளும் எனநட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழுமவர்க் கேயழி யாவரசும்
செல்லும் தவநெறி யுஞ்சிவ யோகமும் சித்திக்குமே.

சித்தியும் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும்பரா
சத்தியும் சக்தி தழைக்கும் சிவமும் தவம்முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே.

தனந்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவும் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா

இனந்தரும் நல்லன எல்லாந் தரும்அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்அபி ராமிகடைக் கண்களே.

## நாமங்கள் பல

இவ்வாறு அம்பிகையை அவரது துணைவருடன் சேர்த்து வணங்கிவரின் அதிக பயன்களைப் பெறலாம் என்ற கருத்தைச் சொல்லாமற் சொல்லும் அபிராமிப்பட்டர் சத்திவழிபாடுபற்றி மேலும் பல விடயங்களை 'அபிராமி அந்தாதி' யில் எமக்கு விளக்குகின்றார். அவற்றுள் ஒன்று அம்பிகைக்குரிய வெவ்வேறான பெயர்கள் பற்றியது. ஆறுகள் வேறுபட்டாலும் அவை எல்லாம் சென்றடைவது கடற்பரப்பேயாவது போல பெயர்கள் வெவ்வேறாக இருப்பினும் அவை குறிப்பதெல்லாம் அபிராமி ஒருவளையே. காளி வேறு, துர்க்கை வேறு, மீனாட்சி வேறு என்பார்க்கு அறிவுரை செய்வார் போல அபிராமிப்பட்டர் அம்மையுடன் செய்யும் உரையாடல் இது:

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிரும்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே.

ஆர்வமுள்ளவர்கள் மேலுமுள்ள விளக்கங்களை எல்லாம் 'அபிராமி அந்தாதி' யைப் படித்துணர்ந்து அம்பிகையின் அருளைப் பெறுவார்களாக! பத்திச் சுவையோடு இலக்கியநயமும் நிறைந்த அபிராமி அந்தாதி திருக்கடவூரின் கண்ணே அமிர்தகடேசருடன் எழுந்தருளியிருக்கும் அபிராமி அம்மையின் அருளினாற் பாடப்பெற்றது. அன்னையின் ஆலயத்தில் ஆண்டுதோறும் தைமாத அமாவாசை நாளில் அபிராமிப்பட்டர் உற்சவம் சிறப்பாக நடத்தப்பெற்று வருகின்றது. அம்பிகையின் அடியார்கள் இத்தினத்தில் விரதமிருந்து அபிராமி அந்தாதியைப் பத்தியுடன் ஓதிச் சித்திகளைப் பெறுவார்களாக!

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசாங் குசமும் கருப்பு வில்லும்
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழுவார்க்கொரு தீங்கில்லையே.

# 11

# நாவலர் பெருமானின் சமயப் பணிகள்

தமிழீழத்துச் சைவ மக்களுக்கு மட்டுமல்லாது தமிழ்நாடு மற்றும் அனைத்துலகச் சைவ மக்களுக்கும் கலங்கரை விளக்கமாக அவரது காலத்திலே திகழ்ந்தவர் நாவலர் பெருமான். அவர் வாழ்ந்த காலம் கி.பி. 1822 முதல் 1879 வரையாகும்.

இக்காலம் இலங்கையை ஆங்கிலேயர் ஆட்சிபுரிந்த காலம். இதற்கு முன்னதாகவே 16ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கை அந்நியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அவர்கள் படிப்படியாகத் தமது பண்பாட்டையும் மொழியையும், மிகவும் முக்கியமாகச் சமயத்தையும் பரப்பி விட்டுச் சென்றபொழுதிலும் ஆங்கிலேயர் காலத்தில் ஆங்கில மோகமே எங்ஙணும் மேலோங்கி நின்றது. தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அவர்களது மொழியும் சமயமும் பெருஞ் சோதனைக்குள்ளாகியிருந்தன.

ஆங்கிலம் கற்றால் உத்தியோகம் கிடைக்கும் வாய்ப்புக்கள் இருந்தமையால் தமிழர் தமிழைப் புறக்கணிக்கலாயினர். ஆங்கிலமே கல்வி மொழியாக இருந்தமையால் தமிழ்க் கல்வி வீழ்ச்சியுற்றது. மிசனரிகள் தீவிரமாகத் தமது சமயத்தைப் பரப்பும் பணியில் ஈடுபட்டதால் சைவர்களும் கிறித்தவ சமயத்துக்கு மாறிக் கொண்டிருந்தனர்.

இத்தகைய இக்கட்டான காலத்திலே - தமிழும், தமிழர் பண்பாடும், சைவமும் இருளில் இருந்த காலத்திலே தமிழ் மக்களுக்கு

வழிகாட்டியாக, ஒளிகாட்டும் கலங்கரை விளக்கமாக, தெய்வீகக் கொடையாக ஆறுமுகநாவலர் தோன்றினார்.

அவரது பன்முகப்பட்ட பணிகளிலே சமயத்துக்கு அவர் ஆற்றிய தொண்டே தலையாயது. அவற்றுட் சிலவற்றை இரைமீட்டுப் பார்த்தல் இங்குள்ள சைவமக்களுக்குப் பயனுடையதாக இருக்கும். தமிழீழத்துச் சைவத் தமிழரின் பாரம்பரியம் நாவலர் வழங்கிய பரிசு என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நாவலர் பெருமானது சமயப் பணிகளை சொற்பொழிவுகள், எழுத்துப்பணி, தாபனங்கள் என மூவகைப் பிரிவுகளில் நோக்கலாம்.

## 1. சொற்பொழிவுத் தொண்டு

'செவிச் செல்வம் செல்வத்துட் செல்வம்' என்றார் வள்ளுவர் பெருமான். சொற்பொழிவு கற்றோருக்கும் கல்லாதோருக்கும் ஒருசேரப் பயன்படவல்லது. நாவலர் காலத்திலே கல்லாதவர்களே அதிகமானவர்களாக இருந்தார்கள் என்பது சொல்லாமலே போதரும். அதனாற் சொற்பொழிவுகள் மூலம் சிவநெறியின் மகத்துவத்தை அவர்களுக்கு எடுத்துக் கூறினால் அதிக பலன்கள் கிடைக்கும் என்பதனை அவர் உணர்ந்தார். மிகவும் முக்கியமாக, சமய மாற்றத்தைத் தடுக்க வேண்டிய ஒரு பொறுப்பு அவருக்கு இருந்தது. அதுவும் அவசரமாகச் செய்ய வேண்டிய ஓர் அவசிய தேவை யாகவும் இருந்தது. சொற்பொழிவுகளால் பலன்கள் விரைவாகக் கிடைக்கும். மக்களின் அறிவு வளரும். தமது சமயத்தின் மேன்மையை அவர்கள் அறிந்தால் அதனைவிட்டு பிறசமயத்தைத் தழுவ அவர்களுக்கும் மனம் வராது.

நாவலர் வாழ்ந்த காலத்தில் பண்டிதர்களும் பாவலர்களும் இருந்தனராயினும் சொற்பொழிவை ஒரு பிரசார கருவியாகப் பயன்படுத்திய முதல்வராக நாவலரே விளங்குகின்றார். அவர் தமது முதற் சொற்பொழிவை 1849ஆம் ஆண்டில் வண்ணார் பண்ணைச் சிவன்கோயிலில் தொடங்கினார். அப்பொழுது அவருக்கு வயது 27. அந்த இளம் வயதிலேயே கேளாரும் வேட்பச் சொற்பொழி வாற்றும் அறிவுத்திறனையும் நாவன்மையையும் அவர் கொண்டிருந்தார். அவரது சொற்பொழிவுகளைக் கேட்க மக்கள்

ஆர்வமுடன் கூடினர். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வண்ணார் பண்ணைச் சிவன்கோயிலிற் சொற்பொழிவு நடைபெற்றது. சில வாரங்களில் கார்த்திகேய ஐயர் அவர்களும் சொற்பொழிவாற்றினார் என்று வரலாறு கூறுகின்றது. நாவலர் சொற்பொழிவுகள் சமய விடயங்களை மட்டும் கொண்டிருக்கவில்லை. கூடாவொழுக்கம் கள்ளுண்ணாமை முதலிய சமூக சீர்திருத்தப் பொருள்கள் பற்றியும் அவர் சொற்பொழிவாற்றினார்.

நாவலரின் பேச்சுவன்மையால் தமிழ் நாட்டவரும் பயன் அடைந்தனர். சென்னை, சிதம்பரம், திருக்குடந்தை முதலிய இடங்களிலிருந்து அவருக்கு அழைப்புகள் வந்தன. புலவர்களும் வித்துவான்களும் அவரது பேச்சை விரும்பிக் கேட்டு அவரது அறிவாற்றலையும் பேச்சாற்றலையும் வியந்தனர். திருவாவடு துறையில் அவரது பேச்சுவன்மையைப் பாராட்டி ஆதீனத்தலைவர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் 'நாவலர்' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்.

நாவலரது பேச்சுக்களாற் சைவ சித்தாந்தம் வளரலாயிற்று. ஆங்கில மோகம் குறையலாயிற்று. ஆங்கிலேயருக்கு அஞ்சித் திருநீறு அணியத் தயங்கினவர்கள் துணிந்து திருநீறு அணியலாயினர். பலர் தீட்சை கேட்டு உண்மைச் சைவர்களாயினர். தேவார திருவாசகங்களைப் படிக்கலாயினர். நாவலர் வழியிற் பல பேச்சாளர்கள் உருவாகினர்.

## 2. எழுத்துப் பணி

சொற்பொழிவுகளோடு எழுத்துப் பணியாலும் நாவலர் பெருமான் சைவத்தை வளர்த்தார்; சைவத்தோடு தமிழையும் வளர்த்தார். நாவலர் பெருமான் தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகியவற்றில் மிகுந்த புலமையுடையவர். அவரது வடமொழிப் புலமை வேதாகமங் களை நன்கு விளங்கிக் கொள்வதற்கு உதவியாக இருந்தது. விளங்கிய சமய தத்துவங்களை மற்றவர்களுக்கு ஐயமற விளக்கி எழுதும் ஆற்றலும் அவருக்கு இருந்தது. எமது சமய நூல்கள் யாவும் பாடல்களில் இருந்தமையால் அவற்றை ஓரளவு கல்வி கற்றவர்களும் விளங்கும் வகையில் வசன நடையில் வழங்க வேண்டிய தேவையை உணர்ந்து உரைநடையில் நூல்களை

எழுதினார். அவ்விதம் உரைநடையில் எழுதிய நூல்களில் திருவிளையாடற் புராண வசனம், பெரியபுராண வசனம், பெரியபுராணச் சருக்கம் என்பன பெயர் பெற்றவை. இவை தவிர சிவதருமோத்திரம், மருதூரந்தாதி, திருச்செந்தில் நீரோட்டக யமக அந்தாதி, திருமுருகாற்றுப்படை முதலிய கடும் நடையில் அமைந்த நூல்களுக்கும் இவர் உரை கண்டுள்ளார். இவரது உரைநடைகள் திருத்தமானவையாகவும் தெளிவானவையாகவும் தர்க்கரீதியானவையாகவும் படிப்பின்பம் தருபவையாகவும் இருந்தமையால் இவரை 'உரைவேந்தர்' என்றும் 'வசன நடை கைவந்த வல்லாளன்' என்றும் ஆன்றோர் போற்றினர்.

முன்னாளிற் செய்யுள் நடைபயின்ற தமிழ்ப் பாவைக்கு அழகான முறையில் வழங்கப்படக்கூடிய வசன நடையைப் பயிற்றுவித்த பெருமையுடையவர் நாவலர் பெருமான் என்று போற்றுகின்றார் நவாலியூர் சோமசுந்தரப் புலவர்:

**அன்னநடை பிடியிடை அழகுநடை**
**அல்லவென அகற்றி அந்நாட்**
**பன்னுமுது புலவரிடஞ் செய்யுள்நடை**
**பயின்ற தமிழ்ப் பாவை யாட்கு**
**வன்னநடை வழங்குநடை வசனநடை**
**எனப்பயற்றி வைத்த ஆசான்**
**மன்னும்அருள் நாவலன்றன் அழியாநல்**
**ஒழுக்கநடை வாழி வாழி.**

நாவலர் பெருமான் வசனம் எழுதியது சைவத்தை வளர்க்க - சைவ ஒழுக்கத்தை நிலைநாட்ட. அதனால் அவரது வசன நடை வாழ்வுக்கு அழியாத நன்மைகளைத் தரவல்ல ஒழுக்க நடையாயிற்று என்பது புலவர் அவர்களின் மதிநுட்பக் குறிப்பாகும்.

செய்யுள் நூல்களுக்கு உரைகள் கண்டதோடன்றித் தாமாகவும் பல நூல்களை நாவலர் அவர்கள் எழுதியுள்ளார். அவற்றுள் கிறித்தவ சமயக் கேள்வி பதில் நூல் முறையைப் பின்பற்றி அவர் எழுதிய சைவ வினாவிடை நூல்கள் பெயர் பெற்றவை. இவை சைவ தத்துவங்களைச் சிறுவர்களுக்குத் தெளிவாக விளக்கும் நோக்குடன் எழுதப் பெற்றவையாகும்.

## 3. நிறுவன ரீதியான தொண்டுகள்

ஆங்கிலேயர் ஆட்சி கிறித்துவ சமயத்தைப் பரப்பும் நோக்குடையதாக இருந்தமையால் உள்நாட்டுச் சமயங்களுக்கு அது மாறாக இருந்தது மட்டுமல்லாது அவற்றை இழிவுபடுத்தி மிசனரிகள் சமய மாற்றம் செய்வதற்கும் ஆதரவாக இருந்தது. கிறித்தவர்கள் சமயத்தைப் பரப்புவதற்கு அச்சியந்திர சாலைகள் பெரிதும் உதவின. அவர்களின் வழியைப் பின்பற்றி அச்சுக்கூடம் அமைத்து நூல்களையும் பிரசுரங்களையும் வெளியிட்டுச் சமயத்தையும் தமிழையும் வளர்க்கத் துணிந்தார் நாவலர். அப்பொழுது இலங்கையில் அச்சியந்திரங்களை வாங்கும் வாய்ப்புக்கள் குறைவு. அதனால் ஆறுமுகநாவலர் இந்தியாவுக்குச் சென்று அச்சியந்திர உபகரணங்களை வாங்க வேண்டியிருந்தது. 1849ஆம் ஆண்டு நல்லூரில் வித்தியாநுபாலன யந்திரசாலை என்ற பெயரில் அச்சகம் ஒன்றை அமைத்தார். இதுவே பின்பு வண்ணார் பண்ணைக்கு மாற்றப்பட்டது என்று அறிஞர் கருதுகின்றனர்.

பின்னர் 1870ஆம் ஆண்டில் சென்னை தங்கசாலைத் தெருவிலே இரண்டாவது அச்சுக்கூடம் ஒன்றை அமைத்தார். அதற்கும் வித்தியாநுபாலன யந்திரசாலை என்றே பெயர் வைத்தார். 1870க்கு முன் சென்னையில் உள்ள முத்தமிழ் விளக்க அச்சுக்கூடம், வாணி நிகேதன அச்சுக்கூடம், கலாரத்நாகரம் அச்சுக்கூடம், வர்த்தமான தரங்கிணீசாலை அச்சுக்கூடம், தத்துவபோதினி அச்சுக்கூடம் என்பவற்றில் தமது நூல்களைப் பதிப்பித்த நாவலருக்குச் சொந்த அச்சுக்கூடம் அவரது பணிகளுக்கு மிகவும் வசதியாக இருந்தது. வித்தியாநுபாலன யந்திரசாலை என்ற பெயரே அச்சுக்கூடம் அமைத்ததன் நோக்கம் தமிழ் சமயக் கல்வியை விருத்தி செய்வதே என்பதனை உணர்த்தி நிற்கின்றது.

தமிழ்க் கல்விக்கும் சமயக் கல்விக்கும் கொட்டில்களிலும் வீட்டுத்திண்ணைகளிலும் நடத்தப்பெற்ற படிப்பித்தல் முறைகளிலேயே தமிழ் மக்கள் தங்கியிருந்தனர். இப்பாடசாலை களைத் தமிழ் அறிஞர்கள் ஒரு தொண்டாகவே நடத்தி வந்தனர். இவற்றால் வருமானம் ஒன்றும் பெரிதாக அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அத்தோடு இப்பாடசாலைகள் ஒழுங்காக

நடத்தப்பெற்றன என்றும் சொல்ல முடியாது. மற்றொரு நிலைமை கல்வியில் மக்களுக்கு இருந்த ஆர்வக்குறைவு. ஆர்வமுள்ள சிறுபான்மையினர் ஆங்கிலப் பாடசாலைகளுக்கே பிள்ளைகளை அனுப்பினர்.

இருமைக்கும் இன்பம் பயக்கும் சமயக் கல்வியைப் பெறாதவர் பிறந்தும் பிறவாதாரே என்ற எண்ணத்தால் ஒரு கல்வி நிலையம் எவ்வாறேனும் அமைக்க வேண்டும் என்று நாவலர் உறுதி பூண்டார். தமிழ் மக்களின் பாரம்பரியக் கல்வியில் ஆர்வமுள்ள ஒரு சில பெரியார்களின் உதவியுடன் 1848ஆம் ஆண்டு வண்ணார் பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார். இப்பாடசாலையில் ஊதியமின்றிக் கற்பிக்க ஆறுமுகநாவலரின் மாணாக்கர் திரு. சதாசிவம் பிள்ளை அவர்கள் முன்வந்தார்கள். இருவரும் வீடுகள் தோறும் சென்று படியரிசி தண்டி, அதனை விற்று வந்த பணத்தை மாணவர் கல்விக்குப் பயன்படுத்தினர். இவ்வரலாறு, தமிழ்ச் சிறார்களின் கல்வியின் பொருட்டு, வீடுகள் தோறும் சென்று இரந்த நாவலர் பெருமானின் பெருந்தன்மையையும் கல்விக்கு அவர் அளித்த முக்கியத்துவத்தையும் எடுத்துக் காட்டுகின்றது.

இது போன்ற ஒரு பாடசாலையைச் சிவபெருமான் கோயில் கொண்டிருக்கும் சிறந்த தலமாகிய சிதம்பரத்திலும் நாவலர் நிறுவத் துணிந்தார். தமது நோக்கத்தையும் சமயக் கல்வியின் அவசியத்தையும் வலியுறுத்தி 1860ஆம் ஆண்டு அவர் வெளியிட்ட அறிக்கையின் ஒரு பகுதி பின்வருமாறு:

"யாதாயினும் ஒரு சமயத்தை மெய்யென்று நம்புகிறவன் அந்தச் சமயத்தின் வழி ஒழுகும் ஒழுக்கமில்லாத போது பயன்பெறான். அந்தச் சமயத்துக்குரிய கடவுள் இவரென்பதும் அவருடைய இலக்கணங்களும் அவரால் விதிக்கப்பட்ட புண்ணியங்களும் விலக்கப்பட்ட பாவங்களும் அந்தப் புண்ணிய பாவங்களின் பலன்களாகிய சுக துக்கங்களும் அவரை வழிபடும் முறைமையும் அந்த வழிபாட்டினாலே பெறப்படும் நன்மையும் ஆகிய இவைகளை அறியும் அறிவு உதியாதபோது, அந்த ஒழுக்கம் உண்டாகாது. சற்குரு முகமாக விதிப்படி பெறப்படும் சமயநூற் கல்வி கேள்விகள் இல்லாத பொழுது, அந்த அறிவு உதியாது. ஆதலால் கல்வியும்

அறிவும் ஒழுக்கமும் ஆகிய மூன்றும் வேண்டும்...."

நாவலர் பெருமான் அன்று எழுதிய இவ்வறிவுரை இன்றும் எமக்குப் பொருந்துவதாக இருக்கின்றது. சமயத்தின் வழி ஒழுகுவதற்குச் சமயத்தைப் பற்றிய அறிவு அவசியம் என்கின்றார். சமய அறிவினைப் பெறுவதற்குப் படிமுறையான சமயக்கல்வி இன்றியமையாதது என்கின்றார். நாவலர் பெருமான் இந்த அறிக்கையை வெளியிட்டு 140 வருடங்களாகின்றன. இந்தக் காலத்தில் உலகமும் உலகத்தோடு தமிழ்கூறும் நல்லுலகமும் கல்வித்துறையில் எவ்வளவோ முன்னேறியிருக்கின்றன. எனினும் ஆங்கிலக் கல்வித் தாக்கத்தினாற் போலும் எம்மவர்கள் மத்தியில் சமயக் கல்வி இன்னமும் தாழ்ந்த நிலையிலே இருக்கின்றது. ஆறுமுகநாவலர் அன்று தமது சைவ வினாவிடைகள் வாயிலாகச் சைவ சமயத்தைப் பற்றி மிக எளிமையாக வழங்கிய விளக்கங்களைத்தாமும் நாம் இன்னமும் அறியாது இருக்கின்றோம். கோயிலிலே திராவிட தோத்திரம் பாடி அருளுக என்று குருக்கள் சொன்னால் எம்மவரிற் பெரும்பான்மையோர் ஒரு தேவாரமேனும் பாடத் தெரியாதுள்ளனர். பிள்ளைகள் சைவத்தைப்பற்றி ஏதாவது கேள்விகள் கேட்டால் பெற்றோர் பதில் சொல்லத் தெரியாமல் திண்டாடுகிறார்கள். சைவத்தைப்பற்றிப் போதிய அறிவு இருந்தால் அதன் சிறப்புகள் விளங்கும்; நம்பிக்கை அதிகரிக்கும். நம்பிக்கை மிகுந்தாற் பிற சமயத்துக்கு மாறும் எண்ணம் தலைப்பட நியாயமில்லை.

கல்விக்குப் பருவம் இல்லை. கால வரையறையும் இல்லை. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்றால் முதுமையிற் கல்வி முத்திக்கு வித்து. எனவே நாங்கள் தொழில்களைப் பெற்று விட்டோம், பிள்ளைகளைப் பெற்றுவிட்டோம், முதுமை அடைந்து விட்டோம், எமக்கு இனி என்ன படிப்பு வேண்டியிருக்கின்றது என்று வாழாவிராது முதியவர்கள் சைவநூல்களைப் படித்துத் தமது சமய அறிவை வளர்க்க முயல வேண்டும். தமது பிள்ளைகளுக்கும் சைவக் கல்வியைப் புகட்டும் வழிவகைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

நாவலர் பெருமான் சிதம்பரத்திலே கல்வி நிலையம் ஒன்று அமைக்க வேண்டும் என்ற தமது கருத்தை விளக்கி வெளியிடட அறிக்கையின் மற்றொரு பகுதி பின்வருமாறு:

“வேதாகமங்களை ஓதுதலும் அறிவு நூல்களைப் பிறருக்கு விரித்து உணர்த்துதலும் தருமங்களை எடுத்துப் போதித்தலும் பள்ளிக்கூடம் கட்டுதலும் பெரும் புண்ணியங்கள் என்பது, ஞானாமிர்தம் எனும் நூலில் வகுத்துச் சொல்லப்பட்டது. எல்லாத் தருமங்களையும் அறிந்து பயன் பெறுவதற்குச் சமயநூல் உணர்ச்சியே ஏதுவாதலால், சமயநூல் உணர்ச்சியை வளர்த்தலாகிய தருமமே எல்லாத் தருமங்களிலும் மேலானது. ஆதலால் நமது தமிழ் நாடெங்கும் பாடசாலைகளை நிறுவிப் பிள்ளைகளுக்குச் சமய நூல்களையும் பொருளீட்டுதற்கு வேண்டிய உலகியல் நூல்களையும் கற்பித்தலும், திருக்கோயில்கள் தோறும் மக்களுக்குச் சமய நெறியைப் போதித்தலும் மிக மேலாகிய புண்ணியங்களாம். இச்சிவதருமம் நமது தமிழ் நாடெங்கும் தழைத்தோங்கல் வேண்டும் என்னும் பேராசையானது, என் சிறுவயதிலே என் உள்ளத்திலே தோன்றி, நாடோறும் பெருகிப் பெருகி இப்பொழுது அவ்வுள்ளத்தை விழுங்கித் தான் மேற்கொண்டு நிற்றலான், என் மென்மையை நினைந்து தடைப்படாமல், திருவருளை முன்னிட்டு நின்று எல்லார்க்கும் பொதுவாயுள்ள சிதம்பரத்திலே சில முயற்சிகள் செய்யக் கருதுகின்றேன்.”

சிவதரும நினைவு சிறுவயதிலிருந்தே தமது உள்ளத்தில் ஊன்றி விட்டதென்று நாவலர் கூறியிருப்பதைக் கவனித்தல் வேண்டும். இவர் இளமைக் காலத்திலிருந்தே மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வி கற்பித்து வந்தார் என்னும் வரலாற்று உண்மை ஒன்றை இந்த இடத்திலே நினைவுகொள்வது பொருத்தமுடையது.

1865ல் அவரது கனவு திருவருளாலே நினைவாகியது. சிதம்பர நகரத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்னும் பெயரில் கல்வி நிலையம் ஒன்றை நிறுவினார். மயிலாடுதுறை, வேதாரணியம் ஆகிய இடங்களிலும் சைவப் பாடசாலைகளை அமைக்கும் வண்ணம் மக்களைத் தூண்டி அறிக்கைகள் வெளியிட்டார். எனினும் ஈழத்தில் அவரது கல்வித்திட்டம் வெற்றியளித்த அளவுக்குத் தமிழ்நாட்டில் வரவேற்புப் பெறவில்லை.

வண்ணார்பண்ணையில் அவர் பாடசாலையை ஆரம்பித்ததைத் தொடர்ந்து கொழும்புத்துறை, கந்தர்மடம், பருத்தித்துறை, மாதகல், இணுவில் ஆகிய இடங்களிற் சைவப் பாடசாலைகள் திறக்கப்பட்டன. ஆங்கிலப் பாடசாலைகளுக்குச் சென்ற

சைவப்பிள்ளைகள் சமய ஆசாரங்களைப் பின்பற்ற முடியாமல் இடர்ப்படுவதை அறிந்து வருந்தி 1872ஆம் ஆண்டில் சைவ ஆங்கில வித்தியாசாலை ஒன்றை வண்ணார்பண்ணையில் நிறுவினார்.

இவ்வாறு சொற்பொழிவுகள் ஆற்றியும் நூல்களை இயற்றியும் புராணங்களை வசனத்தில் எழுதியும் உரைவிளக்கங்கள் செய்தும் அச்சுக்கூடம் அமைத்து நூல்களைப் பதிப்பித்தும் பள்ளிக்கூடங்கள் நிறுவிச் சமயக் கல்வியை வளர்த்தும் நாவலர் பெருமான் ஆற்றிய சமயப்பணிகள் அளப்பரியன. நாம் இன்று சைவர்களாக இருப்பது அவர் இட்ட பிச்சையினாலேதான் என்பதனை நினைக்கும்போது கண்ணீர் வருகின்றது. அத்தோடு எமக்குரிய கடமை உணர்வு ஒன்றும் பெருகுகின்றது. அது ஆறுமுகநாவலர் வழிநின்று தரும சிந்தையுடன், தியாக மனப்பான்மையுடன் நாமும் எமது சமயத்தை வளர்க்க வெண்டும் என்பது.

நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்
சொல்லுதமிழ் எங்கே சுருதி எங்கே – எல்லவரும்
ஏத்துபுரா ணாகமங்கள் எங்கேபிர சங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே அறை.

நாவலர் பெருமான் சிவபதம் அடைந்த நாள் ஆங்கிலத்துக்கு 1879 திசம்பர் மாதம் 5ம் திகதி. தமிழுக்கு பிரமாதி வருடம் கார்த்திகை மாதம் 21ஆம் நாள். நட்சத்திரம் மகம்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே.

\- திருமந்திரம்

# 14

# சேர் பொன். இராமநாதன் அவர்களின் சைவத் தொண்டுகள்

சேர் பொன். இராமநாதன் தமிழ் மக்களுக்கு ஆற்றிய சேவைகள் அளப்பரியன. அவற்றுள் சமயப் பணிகள் தலை யானவை. அவரது சமயப் பணிகளை நன்கு விளங்கிக் கொள்வதற்கு அவரது வாழ்க்கை, அவர் வாழ்ந்த காலம் பற்றிய பின்னணி அறிவு இன்றியமையாதது.

## வாழ்ந்த காலம்

1851ஆம் ஆண்டு பொன்னம்பல முதலியாருக்கும் செல்லாச்சி அம்மையாருக்கும் கொழும்பிலே பிறந்தவர் இராமநாதன். இவருக்கு முன் பிறந்தவர் குமாரசுவாமி ; பின் பிறந்தவர் அருணாசலம். இராமேஸ்வரஞ் சென்று வழிபட்டபின் இரண்டாவது மகன் பிறந்ததால் அவருக்குப் பெற்றார் இராமநாதன் எனப் பெயரிட்டனர். இராமநாதனின் பெற்றார் யாழ்ப்பாணத்துச் சைவமரபிலே தோன்றியவர்கள். பொன்னம்பலமுதலியார் மிகுந்த சிவ பத்தர். கொழும்பிலே கொச்சிக்கடை என்னும் இடத்திற் பொன்னம்பல வாணேசர் கோயிலை 1856ம் ஆண்டிற் கட்டி முடித்தவர். கொழும்பிற் சைவமக்கள் வழிபடுவதற்கு ஆகம விதிகளின்படி அமைக்கப்பெபற்ற ஒரு கோயில் இல்லாத குறையைப் போக்கிய பெருமை பொன்னம்பல முதலியாருக்கு உரியது.

இராமநாதன் வாழ்ந்த காலம் (1851-1930) இலங்கை ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்டிருந்த காலம். ஆங்கில மோகமும் கிறித்துவ நாகரிகமும் வலுப்பெற்றிருந்த காலம். பல சைவமக்கள் கிறித்தவ

சமயத்துக்கு மாறிக் கொண்டிருந்தனர். தமிழ்க் கல்வி மிகவும் குன்றியிருந்தது. ஆறுமுக நாவலர் பெருமானும் அவரது அபிமானிகளும் சைவத்தையும் தமிழையும் நிலைநாட்ட நெஞ்சுரங் கொண்டு உழைத்துக் கொண்டிருந்தனர்.

கோலங்கள் மாறிக்கொண்டிருந்த கொழும்பிலே வாழ்ந்த இராமநாதன் றோயல் கல்லூரியில் ஆங்கிலக் கல்வி பயின்று ஆங்கில நாகரிகச் சூழலில் வாழ்ந்த போதிலும் சைவத்திலும் தமிழ்ப் பண்பாட்டிலும் அதிக பற்றுடையவராக வளர்க்கப்பட்டார். 1879ல் சட்டத்தரணியானார். 1874ல் லீலாவதி என்னும் ஆங்கில அம்மையாரைத் திருமணஞ் செய்துகொண்டார். 1879ஆம் ஆண்டிலிருந்து 1892ஆம் ஆண்டுவரை இலங்கைச் சட்டவாக்கச் சபை உறுப்பினராகப் பணியாற்றினார். அதன்பின்னர் அவரது சட்டத்துறைப் புலமையையும் வாதத்திறனையும் கவனித்து வந்த ஆங்கில அரசாங்கம் அவருக்குச் சட்டமா அதிபர் பதவியை வழங்கியது. 1903ஆம் ஆண்டு பிரித்தானிய அரசு 'சேர்' பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

## சமயப்பணி

இராமநாதன் அவர்களின் சட்டத்துறைச் சாதனைகளும் அரசியற் பணிகளும் அளவற்றனவெனினும் அவற்றுக்கெல்லாம் அளவுகோலாக அமைவது அவரது சமயப் பணிகளேயாகும். அவர் தமிழகத்திற் கல்விகற்ற காலத்திற் சுவாமி அருட்பரமானந்தரின் அருளினாற் சமய நூல்களை ஆழமாக ஆராயத் தொடங்கினார். வேதங்கள், ஆகமங்கள், புராண இதிகாசங்கள், சைவ சித்தாந்தம் என்பவற்றுடன் கிறித்துவம் பௌத்தம், இஸ்லாம் ஆகிய சமயங்களையும் ஆழக் கற்றறிந்தார். சிங்களம், இலத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிகளில் அவருக்கு ஏற்கனவே நல்ல பயிற்சி இருந்தது.

இத்தகைய கல்விமான் நாவலர் பெருமான் ஏற்றிய தீபத்துக்கு எண்ணெயிடத் தயாராகினார். நாவலர் பெருமானும் தனது பணிகளைத் தொடர்ந்து செய்யக்கூடியவர் இராமநாதனே என்பதனை நன்கு உணர்ந்திருந்தார். அக்காரணம் பற்றியே இராமநாதன் 1879ல் சட்டசபைத் தேர்தலுக்கு நின்றபொழுது அவரின் வெற்றிக்காக நாவலர் பெருமான் பிரசாரஞ் செய்தார். நாவலர் பெருமானின் இறுதிப்பணியும் இதுவேயாகும். அவர்

1879ல் சிவபதம் எய்தினார். அதே ஆண்டில் இராமநாதனின் அரசியல் வாழ்க்கையும் பொதுத் தொண்டுகளும் ஆரம்பமாயின.

சைவசித்தாந்தக் கருத்துக்களை மேல்நாட்டவருக்கு எடுத்து விளக்கியவர் இராமநாதன். 1905, 1906ஆம் ஆண்டுகளில் அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளிற் சொற்பொழிவுச் சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டார். எந்தப் பொருள் பற்றிப் பேசினாலும் அந்தப் பொருளுக்குச் சைவக் கருத்துக்களால் உயிரூட்டுவது அவரது பாணி. அவரது நாவன்மையால் கவரப்பட்டவர்கள் கணக்கற்றவர்கள். அமெரிக்காவில் உள்ள கிரீநகர் என்ற நகரில் ஐந்து வாரங்கள் தொடர்ந்து சமயச் சொற்பொழிவு ஆற்றும்படி கேட்கப்பட்டார். இவரது அமெரிக்கச் சொற்பொழிவுகள் 'ஆன்ம கலாச்சாரம்' (Soul Culture) என்ற பெயரில் 1906ஆம் ஆண்டில் அமெரிக்கப் பேராசிரியர் M.H. பெல்ப்ஸ் அவர்களால் தொகுத்து வெளியிடப்பட்ட போது, பல்லாயிரக்கணக்கில் பிரதிகள் விற்பனையாகியதும் இவரது கருத்துக்களுக்கு அமெரிக்க மக்கள் அளித்த மதிப்பை நன்கு எடுத்துக்காட்டுகின்றது. கருத்துக்கள் சைவசித்தாந்தக் கருத்துக்கள். சைவசித்தாந்தக் கருத்துக்களுடன் ஈழத் தமிழினத்தின் கல்வித் திறனையும் மேல்நாட்டவர் மத்தியில் நிலைநாட்டிய பெருமை இராமநாதன் அவர்களைச் சாரும்.

சொல்லளவிலன்றிச் செயலளவிலும் அவர் செய்து காட்டிய சமயத் தொண்டும் அவற்றின்பாற் செய்த பொருள் தியாகமும் சொல்லுந்தரமன்று.

பொன்னம்பல முதலியார் இறந்தபின் அவரது மூத்த மகன் குமாரசாமி முதலியார் பொன்னம்பலவாணேசர் கோயிலை நிர்வகித்து வந்தார். அவரும் 1905ஆம் ஆண்டு காலமாகவே, கோயில் நிர்வாகப் பொறுப்பு இராமநாதனுக்கு உரியதாயிற்று. செங்கல்லாற் கட்டப்பெற்ற கோயில் பலவாறு சிதைவுற்றிருந்ததைக் கண்ணுற்ற இராமநாதன் அதனை முற்றாக இடித்துக் கருங்கல்லாற் கட்ட விரும்பினார். தென் இந்தியாவிலிருந்து சிற்பக் கலைஞர்களை வருவித்தார். கற்கோயிற் கட்டிட வேலை 1907ஆம் ஆண்டு தொடங்கப்பெற்று 1912ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12ஆம் திகதி கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இலங்கையில் கருங்கல்லாற் கட்டப்பெற்ற பல சிவன் கோயில்கள் சிதைந்துபோக, இன்றும்

நிலைத்து விளங்கும் இக்கோயிலின் தன்மை ஒன்றே இதன் மகத்துவத்தைக் காட்டப் போதுமானது.

## பொய்யில் தொண்டர்

இராமநாதன் பொய்யிற் சமயத்தொண்டர்; 'ஆரம் கண்டிகை ஆடையும் கந்தை' என்றில்லாத நவீன தொண்டர். ஆறுமுக நாவலர் பெருமானின் மனப்பாரத்தை நன்கு அறிந்தவர்.

> **ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்**
> **உயிரினும் ஓம்பப் படும்**
>
> என்றார் வள்ளவர் பெருமான்.

இராமநாதன் அவர்களும் உயர்ந்த ஒழுக்க சீலர்; கண்ணியமும் கட்டுப்பாடும் மிகுந்தவர்; கடமையைச் செய்வதே கடவுள் பணி என்று வாழ்ந்தவர். தமிழினத்தின் அருமை பெருமைகளை அறிந்தவர்.

## சமயக் கல்வி

ஒழுக்கத்துக்குச் சமயக் கல்வி முக்கியமானது என்று கருதிய அதே வேளையில் தமிழரின் தனித்துவமும் சைவக் கல்வியிலேயே தங்கியுள்ளது என்பதனை அவர் நன்கு உணர்ந்திருந்தார். அக்காலத்தில் கல்வித் துறையிற் கிறித்தவ தாபனங்கள் பெரும் ஆதிக்கம் செலுத்திவந்தன. தமிழ்ப் பண்பாடும் சைவக் கல்வியும் தாழ்வுறத் தொடங்கின. சைவத் தமிழ்ப் பிள்ளைகள் சைவச் சூழலிற் கல்வி கற்க வேண்டும் என்ற நோக்குடன் இரு பாடசாலைகளை இராமநாதன் நிறுவினார்.

1910ஆம் ஆண்டிலே சுன்னாகத்திலே மகளிர் சைவப் பாடசாலை ஒன்றுக்கு அத்திவாரமிட்டார். பொதுவான பாடங்களுடன் சைவ சமயத்தையும் விசேடமாகக் கற்பிக்க ஒழுங்கு செய்தார். சமயக் கல்வியில் இசைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. தேவாரங்களைப் பண்ணோடு சொல்லிக் கொடுப்பதற்குத் தகுதி வாய்ந்த ஆசிரியர் நியமிக்கப்பட்டார். கோயில் வழிபாட்டு முறைகளை நடைமுறைக் கல்விமூலம் புகட்டுதற்பொருட்டுக் கோயில் ஒன்றையும் அமைத்து அர்ச்சகரையும் நியமித்தார். சில

காலம் சைவசித்தாந்தம் பற்றிய கலந்துரையாடல் வகுப்புகளையும் நடத்திவந்தார். இவ்விதம் இராமநாதன் கல்லூரி மூலம் கல்வியை மட்டுமன்றிச் சைவாசார முறைகளையும் தமிழ்ப் பண்பாட்டையும் பெண்கள் மத்தியில் வளர்த்தெடுத்த பெருமை இராமநாதன் அவர்களுக்குரியது.

பெண்களுக்குத் தனிப்பாடசாலை அமைத்ததைப் போலவே ஆண்களுக்கும் பரமேஸ்வரக் கல்லூரியைத் திருநெல்வேலியில் 1921ஆம் ஆண்டிலே ஆரம்பித்து வைத்தார். 'பரமேஸ்வரக் கல்லூரியின் இலட்சியங்கள்' என்னும் கைந்நூலிலே இந்தியக் கல்வியினதும் மேல்நாட்டுக் கல்வியினதும் நல்லியல்புகள் கொண்ட கல்வியினைத் தமிழ்ச் சிறுவர்கள் கற்றுச் சிறப்படைய வேண்டும் என்னும் தனது கல்விக் கொள்கையை இராமநாதன் அவர்கள் தெளிவாக விளக்கி இருக்கின்றார்.

இக்கல்லூரி வளவிலும் பரமேஸ்வரனுக்குக் கோயில் ஒன்றை அவர் கட்டுவித்தார். கோயில் இல்லாத ஊரிற் குடி இருக்க வேண்டாம் என்பது பழமொழி. இராமநாதனது கல்வித் தத்துவம் கோயில் இல்லாத பள்ளியில் படிக்கலாகாது என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டது.

தனது கல்விக் கொள்கையை நிறைவேற்றப் பலவகையான நன்கொடைகளை இராமநாதன் விட்டுச் சென்றிருக்கின்றார். அவற்றுள் தனலக்குமி தோட்டம் எனப்படும் 250 ஏக்கர் நிலம் தொடர்பான மரணசாசனத்திலும் அவரது கல்விக் கொள்கை பின்வருமாறு தெளிவாக்கப்பட்டிருக்கின்றது:

"இந்த நன்கொடையைக் கொண்டு சைவப் பிள்ளைகளுக்குச் சைவ சாத்திரங்களையும் தமிழ்க் கல்வியையும் புகட்டுவதோடு இசையும் பேணப்படல் வேண்டும். வாய்ப்பாட்டும் இசைக்கருவி களும் போதிக்கப்படல் வேண்டும். இசைப்போதனையில் மாணிக்க வாசக சுவாமிகள், திருஞானசம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரர், தாயுமான சுவாமிகள் முதலியோரின் பாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும். இந்த நன்கொடையால் பாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும். இந்த நன்கொடையால் வரும் பணத்தை இராமநாதன் கல்லூரிப் பரிபாலன சபையாரும் பரமேஸ்வரக் கல்லூரிப் பரிபாலன

சபையாரும் இக்கல்லூரிகளின் நோக்கங்கள் நிறைவேறப் பயன்படுத்தல் வேண்டும்."

இச்சாசனத்தால் தமிழையும் சைவத்தையும் வளர்க்க வேண்டும் என்னும் அவரது உள்ளார்ந்த நோக்கம் நன்கு விளங்குகின்றது.

இக்கல்லூரியின் பொருட்டுத் தனது கொழும்பு வீட்டை அவர் ஈடுவைக்க நேர்ந்தது. அது பின்னர் மீட்கப்படவுமில்லை. தமிழர் நலனுக்கு இவ்வள்ளல்பிரான் செய்த தியாகம் தன்னலமற்றது; மனப்பூர்வமானது; கடமையுணர்வு கலந்தது; தெய்வ சிந்தனை யோடு கூடியது.

தம்மால் நிறுவப்பெற்ற மகளிர் கல்லூரியும் பரமேஸ்வரக் கல்லூரியும் தமிழ்ச் சமூகத்தின் கல்வித் தேவைகைள நிறைவேற்றப் போதா என்பதனை உணர்ந்து, திரு. சு. இராசரத்தினம் போன்ற பிற சைவப் பெரியார்களுடன் சேர்ந்து சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தை 1923ஆம் ஆண்டில் தோற்றுவித்தார். சில காலம் அதன் தலைவராகவும் இருந்து அரும்பணி ஆற்றினார். இச்சங்கம் பல பாலர் பாடசாலைகளையும் கல்லூரிகளையும் தாபித்துத் தமிழ் மாணவர்களுக்கு ஏனைய பாடங்களுடன் சைவக் கல்வியையும் சிறப்பாகப் புகட்டி வந்தது.

## பிற சமயத் தொண்டுகள்

முறையான சமயக் கல்விக்குப் புறம்பாக, சமூக மட்டத்திலும் பல சமய முயற்சிகளில் இராமநாதன் அவர்கள் ஈடுபட்டிருந்தார். சைவபரிபாலன சபை, இந்து வாலிபர் சங்கம் ஆகியவற்றை அமைப்பதற்கு உதவியதோடு, அவற்றின் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு மக்கள் மத்தியில் தமிழையும் சைவத்தையும் பேணவேண்டும் என்னும் விழிப்புணர்ச்சியைத் தூண்டிய வண்ணம் இருந்தார்.

அந்தணர்களில் மேலானவர்கள் சிதம்பரத்து அந்தணர்கள். "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவர்களைத் திருத்தொண்டத் தொகையிற் சிறப்பித்துப் போற்றுகின்றார். சிதம்பரத்திலே தொன்றுதொட்டுப் பூசை நடத்திவந்த அந்தணர்களின் உரிமைகளைப் பிரித்தானிய

அரசு பறிக்க இருந்த கட்டத்தில் இராமநாதன் அவர்கள் அந்தணர்கள் சார்பாக நீதிமன்றத்தில் வழக்காடி வெற்றி பெற்று அவர்களின் உரிமைகளை நிலைநாட்ட உதவியதும் குறிப்பிடத்தக்கவொரு சைவப் பணியாகும்.

இவர் பகவத் கீதைக்கு எழுதிய தமிழ் மொழிபெயர்ப்பும் விருத்தியுரையும் மிகவும் பெயர் பெற்றன. இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய ஆரியமும் செந்தமிழும் நன்கறிந்த பேரறிஞர் மு. சர்வேஸ்வர சர்மா அவர்கள் பகவத் கீதைக்குச் சங்கரர், ராமானுஜர் ஆகியோர் எழுதியுள்ள உரைகளைத் தாம் பலமுறை பயின்றும் விளங்க முடியாதிருந்த பல விடயங்களை இரமநாதனின் உரைகள் மூலம் அறிய முடிந்ததெனக் குறிப்பிட்டிருப்பது, இராமநாதனின் சமய அறிவுக்கும் ஆராய்ந்து அறியும் நுண்மாண் நுழைபுலத் திறமைக்கும் நல்லதொரு சான்றாகும்.

இவரது மனைவி லீலாவதி அம்மையார் ஆங்கிலத்தில் எழுதிய இராமாயணச் சுருக்கத்துக்கு இவர் வழங்கிய முன்னுரையும் இவரது ஆழமான சமய அறிவையும் இராமாயணத்தில் இருந்த ஈடுபாட்டையும் நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

இராமநாதனின் அறிவுக்கும் நாவன்மைக்கும் தமிழகத்து அறிஞர்களும் தலைவணங்கினர். 1912ம் ஆண்டிலே சிதம்பரத்திலே நடத்தப்பெற்ற முதலாவது சைவசித்தாந்த மகாநாட்டுக்குத் தலைமை தாங்கும்வண்ணம் இவர் அழைக்கப்பட்டார். அதே ஆண்டில் மைலாப்பூரில் கூடப்பெற்ற திருவள்ளுவர் மகாசபைக்கும் இவர் தலைமை வகித்துச் சிறப்பித்தார்.

இவ்விதம் நாவலர் பெருமான் வழியிலே சைவத்துக்கும் தமிழுக்கும் அரும்பெருந் தொண்டாற்றிய சேர் பொன். இராமநாதன் தமிழ் மக்களின் தன்னேரில்லாத் தலைவராக விளங்கியவர்; இன்றும் விளங்குபவர். அத்தகைய பெருந்தகையைத் தமிழ் மக்கள் நன்றியறிதலுடனும் கடமையுணர்வுடனும் போற்றி அவர் ஆற்றிய பணிகளை மேற்கொண்டு உய்வார்களாக!

**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லைச்**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு.**

- திருக்குறள்

## ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை வெளியீடுகள்.

| | |
|---|---|
| தரிசனம் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| அர்ச்சனை மாலை | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| என்னை எனக்கறிவித்த | |
| எங்கள் குருநாதர் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| திருமுறைக் கதைகள் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| முத்தான தொண்டர் | கவிஞர். வி. கந்தவனம் |
| புதிய சைவ வினாவிடை(முதலாம் புத்தகம்) | கவிஞர். வி. கந்தவனம் |
| தங்கம்மா நான்மணிமாலை | கவிஞர். வி. கந்தவனம் |
| சிவயோக சுவாமிகளின் அருள்மொழிகள் | |
| பன்னிருமாத நினைவுகள் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| கனடாவிற் சைவ சமயம் | கவிஞர். வி. கந்தவனம் |
| ஈழத்துச் சித்தர் குடைச்சுவாமி | பேரறிஞர் முருகவே பரமநாதன் |
| சைவத் திருமுறைகளின் விழுமியம் | பேரறிஞர் முருகவே பரமநாதன் |
| புதிய சைவ வினவிடை (இரண்டாம் புத்தகம்) | கவிஞர் வி. கந்தவனம் |
| நல்லூர் நாற்பது | கவிஞர் வி. கந்தவனம் |
| யோகி ராம் சுரத்குமார் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| திருமுறைச்செல்வம் | சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் |
| தேவைக்கேற்ற திருமுறைத்திரட்டு | கவிஞர் வி. கந்தவனம் |
| சுவாமி சதானந்தர் நற்போதனை | தொகுப்பு சபா சிவானந்தன் |
| கந்தன் கதை | கவிஞர் வி. கந்தவனம் |
| கந்தனே கலியுகத்தில் கண்கண்ட | தெய்வம் ஆத்மஜோதி நா. முத்தையா |
| கேதாரபத்திரி யாத்திரை | ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் |
| விதியை வெல்வது எப்படி | கு. வைத்தியநாதன் சைவசித்தாந்த பண்டிதர், திருவாவடுதுறை ஆதீனம் |
| ஒலியிழை நாடாக்கள் | |
| சமய வாழ்க்கை | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| சைவத்தின் பெருமை | |
| நாவலரும் பெரியபுராணமும் | கவிஞர். வி. கந்தவனம் |
| தமிழ் முருகன் | கவிஞா. வி. கந்தவனம் |



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்